www.tamilarangam.net

THAYAGAM

15 . 4 . 94

75¢

உண்மை:5
தொடல்:41

# தாயகம்

## கொழும்பு ஹோட்டல்களில் குண்டுவெடிப்பு

## தமிழ் இளைஞர் பலி

தமிழகத்திலிருந்து
இலங்கையரை
வெளியேற்றும்படி
மத்திய அரசிடம்
ஜெயலலிதா கோரிக்கை

எமது வாசகர்களுக்கும்
அன்பர்களுக்கும்
மனம் நிறைந்த
தமிழ்-சிங்கள
புத்தாண்டு வாழ்த்துக்கள்

நகரின் மத்தியில்
துரித பணமாற்றுச் சேவை
CDவிற்பனையாளர்

SENDURAN & CO
584 A, PARLIAMENT ST, TORONTO
(416) 962 7397

www.tamilarangam.net

Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®

தரத்தின் சின்னம்

நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®

Niru

Niru

தரத்தின் சின்னம்
நிரு பிராண்ட்®
Niru Brand®

நிரு பிராண்ட் தயாரிப்புகளுக்கு நிகர்
Niru Brand® தயாரிப்புகளே.
உங்கள் கைகளில் கிடைப்பது தரமான
நிரு பிராண்ட் தயாரிப்புகளா? என்பதை
உறுதிப்படுத்துங்கள்

போலிகளை வாங்கி
ஏமாறுதீர்கள்

Niru Enterprises Inc,
Tel:(416) 299-4202

நிரு பிராண்ட் தயாரிப்புக்கள் எல்லா இலங்கை
வர்த்தக நிலையங்களிலும் விற்பனையாகின்றன.
உங்கள் ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு எம்முடன்
தொடர்பு கொண்டு எமது தயாரிப்புகள்
எப்பொழுதும் கிடைக்கக் கூடிய
வர்த்தக நிலையங்களை அறியலாம்

www.tamilarangam.net

Second class mail Registration No:8435



# தாயகம்

'உண்மையைத் தேடி'

## ஆயுதம் சேர்க்கும் இராணுவம்

இலங்கை இராணுவம் யுத்த்திற்கான தளபாடங்களேக் குவிப்பது பற்றி ரெய்ட்டர் நிருபர் ரேகான் குணசேகர செய்திக் குறிப்பு ஒன்றை எழுதியுள்ளார். இதில் தற்போதைய யுத்த உபாயங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைப் படையினர் நவீன ஆயுதங்களே வாங்குவதுடன் புதிய துருப்புகளேயும் சேர்த்து வருகின்றனர். இராணுவத்தில் புனரமைப்பு செய்வதற்காகவே இந்த நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. இந்த மாதம் சிரேட்ட இராணுவ அதிகாரிகள் ரஷ்யா, இங்கிலாந்து, இஸ்ரேல் போன்ற நாடுகளுக்கு ஆயுதக் கொள்வனவிற்காக செல்கின்றனர்.

விமானப்படை புதிய ஹெலிகொப்டர்களே வாங்குகிறது. அத்துடன் கட்டுப்பாட்டை பரவலாக்கும் நோக்குடன் புதிய அணிகள் உருவாக்கப்படுவதுடன் கவச யுத்த வாகனங்களும் வாங்கப்படுகின்றன. இதன் மூலம் யுத்த முனேகளில் இராணுவம் வேகமாக முன்னேற முடியும் என்று இராணுவம் கருதுகிறது.

புலிகள் முன்னெப்போதையும் விட பலமாக இருப்பதால் தங்களுக்கு ஆயுதபலமும் ஆட்பலமும் தேவை என இராணுவம் கருதுகிறது. 'மூன்று காலாட் படையணியினருடன் மட்டும் நாங்கள் பிரிகேட் அளவிலான தாக்குதல்களே யாழ்ப்பாணத்தின் மீது நடத்த முடியாது, புலிகள் உறுதியாக உள்ளார்கள், எங்களுக்கு குறைந்த மூன்று பிரிகேட்களே கொண்ட அணி தேவை' என்கிருர் ஒரு சிரேட்ட இராணுவ அதிகாரி. 'அத்துடன் தரை யுத்தத்தில் வெல்ல அதிகளவு ஆயுதங்கள் தேவை, டாங்கிகள் சிறந்தவை தான், ஆனல் கட்டடங்கள் உள்ள பகுதிகளில் அவை பயன்பட மாட்டா, விமானப்பலமே சிறப்பானது' என்கிருர் அவர்.

தற்போது இலங்கை வருடாந்தம் இரண்டாயிரம்

4 ம் பக்கம் பார்க்க..

## கொழும்பு ஹோட்டல்களில் குண்டுவெடிப்பு

கொழும்பில் உல்லாசப் பயணிகள் ஹோட்டல்களில் குண்டுகள் வெடித்துள்ளன. இதில் தமிழர் ஒருவர் கொல்லப்பட்டதுடன் 14 பேர் காயமடைந்தனர்.

கொழும்பில் உள்ள இந்தியருக்கு சொந்தமான தாஜ் சமுத்திரா ஹோட்டல், ஹோட்டல் சபையர், மரியட் ஹோட்டல் போன்றவற்றிலேயே குண்டுகள் வெடித்திருக்கின்றன. குறுகிய நேர இடைவெளிக்குள் இந்த குண்டுவெடிப்புகள் நிகழ்ந்தன. புத்தாண்டு கொண்டாட்டங்களே குழப்பும் நோக்கிலேயே புலிகள் இக்குண்டுகளே வைத்திருக்கலாம் என்று முதலில் ஊகம் தெரிவிக்கப்பட்ட போதிலும் கொழும்புக் குண்டுவெடிப்புகளுக்கும் தங்களுக்கும் சம்பந்தம் இல்லே என்று புலிகள் மறுத்துள்ளனர். புலிகளின் வானெலியில் இந்தச் செய்தி ஒலிபரப்பப்பட்டதாக கொழும்பில் உள்ளவர்கள் தெரிவித்தனர். ஆயினும் பொலிசார் இந்தக் குண்டுவெடிப்புகளுக்கு புலிகளேயே குற்றம் சாட்டியுள்ளனர்.

தாஜ் சமுத்திரா ஹோட்டலில் மலசலகூடப் பகுதியில் குண்டு வெடித்தது. இதில் வெளிநாட்டார் யாரும் காயமடையவில்லே. தாஜ் சமுத்திரா ஹோட்டலுக்கு அருகிலேயே இராணுவத் தலேமையகம் உள்ளது. அத்துடன் இந்தியத் தூதுவாரகமும் இதற்கு அருகிலேயே உண்டு.

வெள்ளவத்தைப் பகுதியில் ஹோட்டல் சபையரின் மதுபானச் சாலேயின் கழியல் அறையில் குண்டு வெடித்ததில் அப்பகுதி கடும் சேதத்திற்கு உள்ளானதுடன் வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களும் சேதமாகின. இதில் இருவர் காயமடைந்தனர். இவர்கள் தமிழ்தம்பதிகள் என்று கூறப்படுகிறது. இந்த ஹோட்டலில் தமிழர்களே தங்கியிருந்தனர்.

மவுண்ட் லவினியா பகுதியில் உள்ள ரண்வெலி ஹோட்டலுக்கு அருகில் உள்ள கடற்கரைப் பகுதியில் இடம் பெற்ற குண்டுவெடிப்பில் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றவர் கடும் காயங்களுடன் வைத்தியசாலேயில் அனுமதிக்கப்பட்டார். அப்பகுதியில் சுமார் ஒரு ருத்தல் நிறையான வெடிமருந்துகளும் காணப்பட்டிருக்கின்றன. இந்த குண்டுவெடிப்பு மாலே எட்டு மணிக்கு நடைபெற்றது.

இறந்தவரின் பெயர் அடோல்ப் அந்தனி அருள்தாஸ் என்று அடையாளம் காணப்பட்டிருக்கிருர். இவருடன் காயமடைந்த மகேந்திரன் மதிவாணன் என்பவர் கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் இப்போது பலத்த பாதுகாப்பின் மத்தியில் சிகிச்சை பெறுகிருர். அருகில் கிடைத்த அடையாள அட்டையைக் கொண்ட இவர் பற்றி விபரங்களேச் சேர்க்க பொலிசார் முயன்ற போது இறந்தது இவர் தான் என்று உறவினர் ஒருவர் தவருக அடையாளம் காட்டியிருந்தார். இந்த மகேந்திரன் கொழும்பில் பயண முகவர் நிறுவனம் ஒன்றில் விமானச்சீட்டு விற்பனேயாளராக இருந்தவர். இவரது வீட்டில் மேலும் குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதாக ஒரு செய்திக் குறிப்பு கூறுகிறது.

5 ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பேசாத வார்த்தைகள்

## ஏடு இட்டோர் இயல்

எங்கள் ஊரில் தோட்டம் ஒன்றில் பயிர் செய்த ஒரு பிற ஊரவருக்கும் அவரது தோட்டத்தின் வேலியோரமாக வீட்டைக் கொண்ட ஒருவருக்கும் இடையில் எப்போதும் நடைபெறும் சண்டை ஒன்றின் வழமையான உரையாடல் (மோதல்) இது:

'டேய் நீ இங்கை வாடா'

'நீ இங்கை வாடா'

'என்னத்துக்கு?'

'அடிக்க'

'ஆருக்கு?'

'உனக்குத் தான்'

ஒருவர் கிணற்றடியிலும் மற்றவர் தனது வளவுக்குள்ளும் நின்று இப்படி சத்தம் போட்டுக் கொள்வார்களே அன்றி, சண்டையிட்டதில்லை.

★ ★ ★

தற்போதைய சமாதானப் பேச்சுவார்த்தைகள் பற்றி பேச்சுக்கள் நடைபெறும்போது இந்த உரையாடல் (மோதல்) தான் நினைவுக்கு வருகிறது. ஒரு புறம் புலிகள் குடாநாட்டில் நின்று கொண்டு 'பேச்சுவார்த்தைக்கான கதவுகள் திறந்திருக்கின்றன, அரசாங்கம் யுத்தத்தை நிறுத்த வேண்டும்' என்று கோரிக் கொண்டிருக்க... மறுபுறத்தில் அரசாங்கமோ 'இறுதிச் சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வர வேண்டும், ஆயுதங்களைக் கீழே போட வேண்டும்' என்று சொல்லிக் கொண்டிருக்கிறது. இரண்டு தரப்புமே யுத்தத்தை நிறுத்தி சமாதானம் வேண்டும் என்று



உண்மையில் விரும்புகின்றனவோ என்னவோ, சொல்லிக் கொண்டிருக்கின்றன. ஆனால் இன்னமும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்காக எந்த முயற்சிகளையும் முன்னெடுக்கவில்லை. பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு என்ன தடைகள் என்ன என்பது நீண்ட காலமாக தெரிந்த ஒன்று தான். 'ஆயுதங்கள் கீழே போடப்பட வேண்டும், மற்ற இயக்கங்கள் பேச்சுவார்த்தையில் பங்கு கொள்ள வேண்டும், தலைமை நேரடியாகப் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும்' என்பதிலும் 'யாழ்ப்பாணத்துக்கான பொருளாதாரத் தடைகள் நீக்கப்பட வேண்டும், பேச்சுவார்த்தை நிபந்தனையற்றதாக இருக்க வேண்டும்' என்பதிலும் தான் இத்தனை இழுபறிகளும். (நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை என்று வலியுறுத்துவதே ஒருவகையில் நிபந்தனை தானே!)

பேச்சுவார்த்தை நடக்குமா என்பதிலேயே சந்தேகம் இருக்கிறது. இதற்குள் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான சூழ்நிலைகளை ஆராய்வதற்கு ஒரு பேச்சுவார்த்தை. (முகமதுவின் உத்தேச யாழ்ப்பாண விஜயம்). இந்த சூழ்நிலைகளை ஆராய்வதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான பூர்வாங்கப் பேச்சுவார்த்தை வேறு. (பாரிஸ், அவுஸ்திரேலியா). இநத பூர்வாங்க விடயங்களே இன்னமும் நடைபெற முடியாமல் திணறும்போது இரு தரப்பினரும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது சுலபமானதா? மொத்தத்தில் பேச்சுவார்த்தை என்பது தன் உண்மையான அர்த்தத்தை இழந்ததுடன் பலரது மனதில் எந்த சலனத்தையும் ஏற்படுத்துவதுமில்லை.

புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவது என்பது கொஞ்சம் ஆபத்தான விடயம் தான் என்பது கடந்த கால வரலாறு. சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்திய சிறிசபாரத்தினம், பத்மநாபா போன்ற இயக்கத் தலைவர்கள் முதற் கொண்டு கூட்டணியின் அமிர், ராஜீவ் காந்தி, பிரேமதாசா நாட்டுத் தலைவர்கள் வரை எல்லாருமே பேச்சுவார்த்தை நடந்த கொஞ்சக் காலங்களில் புலிகளால் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இது போதாதென்று ராஜீவோடு பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட காசி ஆனந்தன், பிரேமதாசாவோடு பேசிய மாத்தயா என்பவர்களும் ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள். அதுவும் இல்லாமல் புலிகளோடு பேச வேண்டும் என்று கூறியதாலும் விஜேதுங்கவுடன் முரண்பட்டுக் கொண்ட தொண்டமானைக் கூட உலகத்தமிழரில் புலிகள் 'சிங்களப் பேரினவாதத்திற்குப் பலியாகும் தொண்டமான்' என்று பலிக்கடாவாக்கத் தான் பார்க்கிறார்கள். இதே நிலை கொஞ்ச நாளில் முகமதுவுக்கும் நேரலாம்.

இந்த சூழ்நிலையில் புலிகளோடு பேச நினைப்பவர்கள் எல்லாமே கொஞ்சம் ஜாக்கிரதையோடு இருப்பது சகஜமே. புலிகளுக்கு பேச்சுவார்த்தை என்பதில் எவ்வளவு அலட்சியம் இருக்கிறதோ அதே போன்று அரசாங்கத்திற்கும் நிலைமை இருக்கிறது. தமிழர் பிரச்சனை விடயத்தில் அரசாங்கம் எந்த விதமான உறுதிப்பாடும் கொண்டிருக்கவில்லை. ரணில் விக்கிரமசிங்க 'அரிய சந்தர்ப்பதை நழுவ விடாதீர்' என்று சொல்ல.. விஜேதுங்க 'பயங்கரவாதப் பிரச்சனை' பற்றிப் பேசுகிறார். விஜேதுங்கவைச் சொல்லிப் பயனில்லை. சந்தர்ப்ப வசத்தால் பதவியில் ஒட்டிக் கொண்டவர். (கருணாநிதி பாணியில் சொல்வதாயிருந்தால் 'ஆடிக்காற்றில் கோபுரத்தில் ஒட்டிக் கொண்ட குப்பைக் காகிதம்' என்பது பொருத்தமாயிருக்கலாம்.) இவர் பற்றி சிங்கள வாராந்திரி ஒன்று சொன்னபடி 'பிரேமதாசா உயிரோடு இருந்ததால் தான் இவரால் பிரதமராக முடிந்தது. பிரேமதாசா உயிரை இழந்தபடியால் தான் இவரால் ஜனாதிபதியாக வர முடிந்தது'. அவ்வளவு தான். வேறு அரசியல் பாரம்பரியங்கள் அவருக்கு இல்லை. இந்த நிலையில் கிடைத்துக் கொண்ட பதவியை தக்க வைத்துக் கொள்ள 'இனவாதம்'. இதனால் சிங்கள இனவாத அமைப்புகளுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரட்சகனுகியும் விட்டார். இனி இவரை 'துட்ட கைமுனுவின் அவதாரம்' என்றுகூட அவர்கள் புகழக் கூடும்.

இவரது இனவாதம் இவரது பதவி ஆசையால் தான் எழுந்திருக்கக் கூடியதாகவோ, ஏற்கனவே இருந்த அரசியல் சூழ்நிலைகளில் இவரது உண்மையான இனவெறி மறைக்கப்பட்டோ இருந்திருக்கலாம். ஆனுல் சிறில் மத்தியூ கூடப் பேசாத அளவில் இவரது இனவாதம் இருக்கிறது. சிறுபான்மையினக் 'கொடிகள்' பெரும்பான்மை 'மரத்தில்' படர வேண்டும் என்று 'இலக்கியம்' பேசுகின்ற இவருக்கு 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்ற தமிழ் சொற்றொடரைப் புரிய வைக்கவோ என்னவோ, தமிழ் இயக்கங்கள் தேர்தலில் எதிர்த்துக் கொண்டன. இப்போது அஷ்ரப்பின் போக்கிலும் தொண்டமான் போக்கிலும் மாற்றங்கள் ஏற்பட்டு கூட்டணியுடன் பேசி சிறுபான்மையினர் நெருக்கமாகிக் கொண்டு வருகின்றனர். சிறுபான்மையினரே பெரும்பான்மையினரின் அவலங்களுக்கு காரணம் என்று அரசியல் நடத்துவது உலகெங்கும் உள்ளதுதான். இங்கே அகதிகள், வெளிநாட்டார் பற்றி இனவாதம் பேசுவது போன்று.

ஆனுல் தென் மாகாணத்தில் ஐ.தே.கட்சி மண் கவ்வியதற்கான காரணங்களில் ஜனுதிபதியின் இந்த இனவாதப் போக்கும் முக்கியமானது என்பதை மறுக்க முடியாது. இந்த இனவாத அரசியல் நாட்டில் செல்லுபடியாகாது என்பதற்கு இந்த தெனபகுதி தோதலை அளவுகோலாகக கொள்ள முடியாவிடினும் தனி இனவாத அமைப்புகள் ஒதுக்கப்பட்டது தெம்பைத்தரக்கூடிய செய்திகள் தான்.

வழமையில் ஒவ்வொரு வருடமும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் பாரிஸில் சந்திக்கும் போது அதற்கு முன்னதாக இலங்கை அரசு தீர்வுத் திட்டங்களைக் கொண்டு வரும். இம்முறை பெரும்பாலும் இந்த கூட்டம் நடக்காது. இதனுல் அரசுக்கு தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டிய தொல்லை குறைகிறது. அத்துடன் இராணுவம் பாரிய இழப்புகளுக்கு மத்தியிலும் தன்னைக் கட்டியெழுப்பி முழுமையான தாக்குதல் ஒன்றுக்கு தயாராவதான பிரமையை ஏற்படுத்திக்கொண்டுதான் இருக்கிறது. இந்த 'குடாநாடு மீதான இறுதித் தாக்குதல்' 'பேச்சுவார்த்தை நடக்கப் போகிறது' என்ற மாதிரி நீண்ட காலமாகத் தான் 'வருதம்மா, வருகுது' என்ற நிலையில் இருக்கிறது. கொப்பேகடுவவின் மரணத்துடன் இந்த இறுதித் தாக்குதல் பயமுறுத்தல் புஸ்வாண நிலையில் தான் இருக்கிறது.

இந்த சூழ்நிலைகளில் சமாதானத்தை ஏற்படுத்த இடையில் உள்ளவர்கள் பலர் முயன்று வருகிருர்கள். கிறிஸ்தவ ஆயர் குழுக்கள், வெளிநாட்டு தொண்டர் நிறுவனங்கள், தொண்டமான், சபாநாயகர் முகமது போன்ரேர் காலத்திற்கு காலம் 'பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலையை உருவாக்கும் பேச்சுவார்த்தைகளில்' ஈடுபட்டுக் கொண்டு தான் இருக்கின்றனர். அவர்களும் வந்து 'நல்லெண்ண சமிக்ஞையாக' பணயக் கைதிகளை விடுவிக்கும்படி கேட்க, புலிகளும் ஓரிருவரை விடுவிக்க, அவர்கள் இந்த செய்தியைச் சுமந்து சென்று 'யாழ்ப்பாணம் மீதான பொருளாதாரத் தடையை நீக்க வேண்டும்' என்று அரசுக்கு கூற... என்று ஒரு சுற்று வட்டமாகத்தான் எல்லாமே நடைபெறுகிறது. 'சமஷ்டித் திட்டத்தை முன்வைத்து' பரபரப்பை ஏற்படுத்திய ஸ்ரீநிவாசன் கூட தனது பதவியை ராஜினுமா செய்கிருர். (பாராளுமன்ற உறுப்பினர்கள் பென்சன் பெற தகுதி பெறும் கால எல்லை கடந்த பெப்ரவரியின் முடிந்ததும் ஒரு காரணமாயிருக்கக் கூடும்).

தொண்டமான் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்கப் புறப்பட்ட போதும் பத்திரிகைகள் அவரை 'புலி' என்றே முடித்து விட, புலிகளும் அவரை அரசாங்கத்தின் கைக்கூலி என்று சொல்லாத குறையாக தங்கள் பத்திரிகைகளில் எழுதி விட அதுவும் முடிந்தது. இப்போது தொண்டமானை விட, செல்லச்சாமி ஏதாவது சமாதானத் திட்டத்தோடு புறப்பட்டால் ஏதாவது நடக்க அதிகமான சாத்தியங்கள் இருக்கலாம். தொண்டமான் மீதான கோபத்தில் விஜேதுங்கவின் ஆசீர்வாதம் கிடைக்கலாம்.

மறுபுறத்தில் கனடாவிலிருந்து 'தடாலடி' அறிக்கைகளும் கடிதங்களும் தொண்டமானுக்கும் ஜனுதிபதிக்கும் மற்றவர்களுக்கும் சென்று கொண்டிருக்கின்றன. சில 'சட்ட அறிஞர்கள்' (?) இந்த முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக அடிக்கடி வீரகேசரியில் அறிக்கை வருகிறது. (கனடிய தமிழ் பத்திரிகைகளுக்கு அனுவசியமாக அனுப்புவதை விட வீரகேசரிக்கு அனுப்பினுல் இங்கே வரும் தானே என்ற நம்பிக்கையாகவும் இருக்கலாம்). இதில் என்னவோ விளம்பர ஸ்டண்ட் தான் அதிகமாக புலப்படுகிறது. ஈழப்பிரச்சனை பற்றிய பின்னணிகள், நடைமுறைச் சிக்கல்கள் தெரியாமல் இவ்வாருன முயற்சிகளில் ஈடுபடுவது இருக்கின்ற பிரச்சனையை வளர்க்கவுமே தவிர, செய்கின்ற பயன்கள் குறைவாகத்தான் இருக்கும். இந்த முயற்சி தொண்டா-விஜேதுங்க பிளவை அதிகரித்ததுதான் இறுதியில் நடைபெற்றது. இந்த முயற்சிகளில் ஈடுபடும் போது குறைந்த பட்சம் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்டு, அறியப்பட்டிருக்க வேண்டும் (அதாவது முயற்சிக்கு முன்னதாக, பின்னதாக அல்ல) அல்லது பிரச்சனை பற்றிய தெளிவான விளக்கத்தை கொண்டிருக்க வேண்டும். அத்தோடு இரு தரப்பினராலும் சமாதானத் தூதுவராக ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவராக இருக்க வேண்டும். இவை ஏதும் இல்லாமல் நடைபெறும் முயற்சிகள் எல்லாம் வெறும் விளம்பரம் தேடும் 'ஃபாக்ஸ் காகிதப் புலி' விளையாட்டாகத்தான் இருக்கும்.

இதன் சமீபத்தில் முகமதுவின் விஜயம் பெருவிளம்பரம் பெற்றிருக்கிறது. இதுவும் வழமை போல 'பேசசுவார்த்தைக்கான பேச்சுவார்த்தை' தான். ஆனுல் இந்த முகமதுவை அழைப்பதில் புலிகளுக்கும், செல்வதில் முகமதுவுக்கும் சில பயன்கள் இருக்கலாம். ஒருவேளை முஸ்லிம் சமூகத்தினுள் தனது செல்வாக்கை அதிகரித்து அடுத்த தேர்தலில் வாக்குகளை பெற்று முஸ்லிம்களின் பிரதிநிதியாவதற்கான முயற்சியாக இருக்கக் கூடும். புலிகளுக்கும் ஒரு முஸ்லிம் ஒருவரை வரவேற்பதன் மூலம் 'வரலாற்றுப் புண்களுக்கு மருந்து போடும்' முயற்சியில் ஈடுபடவும் கூடும். ஆனுல் தமிழ் மக்களின் நிலை தான் வரலாற்றுப் புண்களைக் கிளறி வருகிறது. யாழ்ப்பாணத் தமிழர்களால



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒதுக்கப்பட்ட, நம்ப மறுக்கப்பட்ட மலையகத்தமிழர், வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் பிரதிநிதிகள் தான் சமாதான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

இந்த முகமது சமாதானத் தூதுவராக வருவதால் 'தூதுவனை சுடுவது' முறையல்ல எனினும் இவரது நேர்மையும் நம்பகத்தன்மையும் சந்தேகத்திற்குரியன. பிரேமதாசாவை பதவி நீக்குவதற்கான முயற்சியின் போது இவரது வீட்டில் வைத்தே சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் அந்த பிரேரணையில் கையொப்பமிட்டதும் இதன் பின்னர் இவர் அவர்களின் காலை வாரி தனக்கான நன்மைகளுக்காக (இதில் இவரது மகனுக்கான சில வர்த்தக சலுகைகளும் அடக்கம் என்ற குற்றச்சாட்டும் எழுந்திருந்தது) பிரேமதாசாவுக்கு சாதகமாக நடந்து கொண்டதும் தெரிந்ததே. இது பிரேமதாசாவின் மரணத்தோடு மறக்கப்பட்டிருக்கலாம். ஆனால் இந்த சமாதான முயற்சியில் இவர் இறங்குவதற்கான நோக்கம் எதுவாக இருக்கும்? சபாநாயகர் சகல கட்சிகளுக்கும் பொதுவானவர் என்றாலும் கூட இந்த சமாதான முயற்சியில் தான் அரசின் பிரதிநிதியாக வரவில்லை என்றும் சொல்கிறார். புலிகள் முஸ்லிம்களை வெளியேற்றியதும் கொன்றதும் தெரிந்தும் இந்த முயற்சியில் இறங்குவதால் இதில உள்நோக்கங்கள் இருக்கக் கூடும். இறுதியில் இவரது முயற்சியும் விஜேதுங்கவின் 'ஆலோசனைப்படி' ரத்துச் செய்யப்பட்டு விட்டது.

இத்தனை முயற்சிகளுக்கும் மத்தியில் சமாதான முயற்சி ஒன்று தற்போது தேவை தானா என்ற கேள்வியும் உண்டு. புலிகள் தமிழ் ஈழ நாணயம் ஒன்றை வெளியிட்டு அரச இயந்திரம் ஒன்றை ஸ்தாபித்து கிட்டத்தட்ட ஒரு முழுமையான அரசை நிறுவும் முயற்சியில ஈடுபட்டிருக்கிறார்கள். மறுபுறத்தில் அரசாங்கம் முழுமூச்சாக இராணுவத்தை பலப்படுத்தி 'இறுதித் தீர்வுக்கு' தயாராகிக் கொண்டிருக்கிறது. இதற்குள் பேச்சுவார்த்தை நடத்தி சமாதானம் காண்பதற்கான தேவை என்ன? இரண்டு பேருமே தங்கள் தீர்மானங்களில் முடிவாக இருக்கும் போது பேசி எதைச் சாதிக்கப் போகிறார்கள்?

இதற்குள் பாராளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் வருவதால் அதில் தோற்பதற்கான சந்தர்ப்பங்களை தவிர்த்துக் கொள்வதற்கான முயற்சியில் அரசு ஈடுபடும். ஒன்றில் தேர்தல் நடைபெறும்வரை யுத்தத்தை நிறுத்தி வைத்து முழுமூச்சாக தேர்தல் முயற்சியில் ஈடுபடக் கூடும். அல்லது தேர்தலுக்கு சமீபகமாக 'பயங்கரவாதிகள் குறித்த தமது கடுமையான நிலைப்பாடை காட்ட கடுமையான யுத்தம் ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் மீது பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தக் கூடும். எந்த நிலையிலும் இழப்புகள் அதிகமாகி சிங்கள மக்களின் அதிருப்தியைச் சம்பாதிக்காத நிலையைப் பேண அரசு முயலும். புலிகளும் அவ்வப்போது தமிழ் மக்களுக்கு தாக்குதல்களை நடத்தி வெற்றி விழாக் கொண்டாடுவர்.

இது தமிழ் மக்களின் மீது ஏகபோக அதிகாரத்தைப் பெற முயலும் புலிகளின் தலைமைக்கும் சிங்கள மக்களின் மத்தியில இனவாதத்தைக்கிளறி அதிகாரத்தைக் கைப்பற்ற முயலும் விஜேதுங்கவுக்கும் இடையிலான ஒரு அதிகாரப்போட்டி தான். 'சர்வ வல்லமை கொண்ட' ஜனாதிபதியும் 'வானளாவிய அதிகாரம் கொண்ட' புலிகளின் தலைமையும் மட்டுமே இந்த சமாதானத்திற்கான தடைகள் என்றே கருத முடியும். இந்த இரண்டு போக்குகளும் மாறாத வரைக்கும் பேச்சுவார்த்தை, சமாதானம் என்பன பத்திரிகைகளின் முன் பக்கங்களை அலங்கரிக்க அவ்வப்போது உதவக் கூடும். அதுவரைக்கும் புலிகளின் தலைமையும் விஜேதுங்கவும் தங்கள் பாதுகாப்பான இடங்களிலிருந்து சமாதானத்திற்காகவோ, சண்டைக்காகவோ 'நீ இங்க வாடா' என்றபடி இருக்க வேண்டியது தான்.

## இராணுவம்...

கோடி ரூபாக்களை செலவிட்டு வருகிறது. படைகளில் 120 ஆயிரம் பேர் உள்ளனர். இப்போதும் இழப்புகளின் பினனர் புதிதாக ஆட்சேர்ப்பு நடைபெறுகிறது. இராணுவம் தன்னிடமுள்ள 90 ஆயிரம் பேரை ஒரு லட்சம் பேராக்க முயல்கிறது. வியாழக்கிழமை இதற்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெறுகின்றன. அத்துடன் மூன்று மேஜர் ஜெனரல் பதவிகள் உருவாக்கப்பட உள்ளதுடன் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தரத்திலிருந்து ஜெனரல் தரத்திற்கு உயர்த்தப்பட உள்ளார்.

ஆனையிறவு யுத்தத்தில் இரு தரப்பினரும் பெருமளவு இழப்பை கண்டதை அடுத்து தங்கள் காயங்களை நக்கி மீண்டும் யுத்தத்திற்கு தயாராகின்றனர். இந்த அமைதியின் பின்னர் புலிகள் பெரும் அளவில் முகாம் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தலாம் என இராணுவம் கருதுகிறது.

இழப்புகளால் தற்போது இராணுவம் தாக்குதல்களை ஒத்திப் போட்டு துருப்புகளுக்கு பயிற்சி அளிக்கிறது. இப்போது சிறந்த அதிகாரிகள் தங்கள் சிப்பாய்களுக்கு மதுரு ஓயாவில் உள்ள தளத்தில் பயிற்சி அளித்த வண்ணமுள்ளனர்.

இவ்வாறு றெய்ட்டர் நிருபர் எழுதியுள்ளார்.

## பாக்குநீரிணையை நீந்திக் கடந்த சிறுவன்

பன்னிரண்டுவயதுச்சிறுவன் ஒருவன் பாக்குநீரிணையை நீந்திக் கடந்துள்ளான். இந்தியச் சிறுவனை குறளீஸ்வரன் கடந்த செவ்வாய்க்கிழமை இலங்கையின் வடகோடியிலிருந்து தனுஷ்கோடி வரையிலான 23 மைல் தூரத்தை நீந்திக் கடந்துள்ளான். இதற்கு 16 மணி நேரம் எடுத்திருக்கிறது. இதுவரை நீந்திக் கடந்தவர்களில் மிகவும் வயது குறைந்தவன் இந்த சிறுவனாவான். முன்பு கடந்தவர்கள் இந்தச் சிறுவனை விட இரண்டு மடங்கு வயதானவர்கள். முன்பு ஆழிக்குமரனும் இந்த நீரிணையை நீந்திக் கடந்திருந்தான்.

இந்த சாதனையைச் செய்த இச்சிறுவன் தான் ஆங்கிலக் கால்வாயைக் கடக்கப் போவதாகவும் கூறியுள்ளான். அடுத்த ஆவணி மாதம் தான் ஆங்கிலக்கால்வாயைக் கடக்கப் போவதாகவும் அதைக் கடப்பது தனக்கு இலகுவாக இருக்கும் எனத் தான் எதிர்பார்ப்பதாகவும் அச்சிறுவன் தெரிவித்தான். இந்தச் சிறுவன் சென்னையில் பாடசாலை ஒன்றில் பயிலும் மாணவன் ஆவான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கொழும்பு ஹோட்டலில் ...

அமெரிக்க ஹோட்டலான மரியெற் ஹோட்டலில் வெடித்த குண்டு கடும் சேதத்தை உண்டு பண்ணியது. இது ஜனாதிபதியின் செயலகத்திற்கு ஐந்து யார் தொலைவில் உள்ளது. மரியெட், தாஜ் சமுத்திரா இரண்டிலும் இரவு 11.15க்கு குண்டுகள் வெடித்தன.

ஆனால் கடந்த வெள்ளிக்கிழமை ஈழப்படை என்னும் குழு தானே இந்தக் குண்டு வெடிப்புகளுக்கு உரிமைகோருவதாக தொலைபேசி மூலம் தெரிவித்திருந்தது. வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்றுக்கு தொலைபேசி மூலம் அழைத்த ஒரு குரல் 'தமிழ் பிரச்சனை தீர்க்கப்படா விட்டால் மேலும் குண்டுகள் கொழும்பில் வெடிக்கும்' என்று தெரிவித்துள்ளது. இந்தக்குரல் தமிழ் உச்சரிப்புடனை ஆங்கிலத்தில் பேசியதாக கூறப்பட்டது.

இந்தக் குண்டு வெடிப்புகளுக்குப் பின்னர் கொழும்பில் பல தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். பல இடங்களில் தடை முகாம்கள் அமைக்கப் பட்டதுடன் பல வீடுகளும் லொட்ஜ்களும் சோதனைக்கு ள்ளாக்கப்பட்டன. வெள்ளவத்தைப் பகுதியில் 25 பேர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு கொண்டு செல்லப்பட்டனர். இந்தப் பகுதியில் சபையர் ஹோட்டல் குண்டு வெடிப்புக்குள்ளானது. மற்ற இடங்களிலும் பலர் கைது செய்யப்பட்டனர்.

இந்தக் குண்டு வெடிப்புகளினால் உல்லாசப் பயணத்துறை பாதிக்கப்படலாம் என்ற அச்சம் அதிகாரிகள் மத்தியில் நிலவுகிறது. தற்போது உடனடிப் பாதிப்பு இல்லாவிட்டாலும் இதன் பாதிப்பு இந்த வருட இறுதியில் தெரிய வரும் என அவர்கள் தெரிவிக்கின்றனர். கோடை கால விடுமுறையை பயணிகள் ரத்துச் செய்தால் மட்டுமே பாதிப்பு ஏற்படலாம் என்று பிரபல உல்லாசப் பயணத்துறை நிறுவனமான ஜோன் கீல்ஸ் நிறுவன அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளில் இருந்து பயணிகள் இந்தக் குண்டுவெடிப்புகள் பற்றி விசாரித்ததாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். ஆனால் சில சிறு நிறுவனங்களில் செய்யப்பட்ட உல்லாசப் பயணப் பதிவுகள் ரத்துச் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்த குண்டுவெடிப்புகள் பயணிகளைப் பயமுறுத்தவே செய்யப்பட்டது என்று ஜனாதிபதியின் செயலாளர் விஜேதாசா தெரிவித்திருக்கிறார். இந்த தகவலை மரியெட் ஹோட்டலில் வைத்து அவர் தெரிவித்தார். ஆனாலும் பயணிகளுக்கான பாதுகாப்பும் வசதிகளும் உறுதி செய்யப்படும் என்று உல்லாசப் பயணத்துறை அமைச்சர் தொண்டமான் தெரிவித்திருக்கிறார். சகல ஹோட்டல்களிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் நிலைமை வழமையில் இருப்பதாகவும் அவர் விடுத்த அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

கொழும்பு மிருகக் காட்சிச் சாலைக்குள்ளும் ஒரு குண்டு வெடித்த போதும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. சொத்துக்களுக்கோ, உயிருக்கோ எந்த சேதமும் இல்லை. மிருகங்கள் கூட இந்தக் குண்டுவெடிப்பினால் அதிர்ச்சியுறவில்லை என்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

குண்டுகள் சிறியனவாக இருந்ததால் இவை வெறும் பயமுறுத்தல் நோக்கிலேயே வைக்கப்பட்டிருக்கலாம் எனவும் பெரும் பாதிப்பு ஏற்படுத்தும் நோக்கம் இதற்கு இருந்திருக்காது என்றும் அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. அத்துடன் வெளிநாட்டார்களுக்கு சேதம் ஏற்பட்டால் அதன் காரணமாக வெளிநாடுகளில் தங்களுக்கு எதிரான உணர்வுகள் ஏற்படுவதிலும் புலிகளுக்கு விருப்பம் இருக்காது என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர் என பத்திரிகையாளர்கள் கூறுகின்றனர். எகிப்திலும் தீவிரவாதிகள் உல்லாசப் பயணத்துறையின் வருமானத்தை ஸ்தம்பிக்கச் செய்வதற்காக பயணிகள் மீது தாக்குதலகளை நடத்துவது குறிப்பிடத்தக்கது.

ஆயினும் இளைப்பாறிய விமானப்படைத் தளபதி ஹரி குணதிலகவின் கருத்துப்படி வடக்கின் மீது நடத்தப்பட இருந்த தாக்குதல்களை நடத்த வேண்டாம் என்பதற்கான எச்சரிக்கையே இந்த குண்டுவெடிப்புகள் ஆகும்.

மறுபுறத்தில் கொழும்பில் வாழும் தமிழர்கள் மீது அரசு கடும் நடவடிக்கை எடுக்க வைத்து அதன் மூலம் அரசு மீதான வெறுப்பை ஏற்படுத்தி அவர்களை வடக்கே மீண்டும் வரச்செய்யும் நோக்கமும் இருக்கலாம் என்று இன்னொரு செய்திக் குறிப்பு கூறுகிறது.

## மூடப்படும் தோட்டங்களுக்கு கடன்

மூடப்படும் நிலையில் உள்ள தேயிலைத் தோட்டங்களுக்கு இலங்கை அரசு அறுபது கோடி ரூபா கடன் கொடுக்கவுள்ளது. தனியார் தேயிலைத் தொழிற்சாலைகள் மூடப்படுவதை தவிர்க்க அரசு முயல்வதாகவும் இந்த கடன்கள் வங்கிகள் மூலமாகவும் இடைத் தரகர்கள் மூலமாகவும் இந்த கடன் வழங்கப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

தென் இலங்கையின் பல தோட்டங்கள் மத்திய கிழக்குக்கான மலிந்த விலைத் தேயிலையை உற்பத்தி செய்து வருகின்றன. இலங்கையின் வருடாந்த ஏற்றுமதியான 44 கோடி ருத்தல் தேயிலையில் எழுபது வீதம் வரை மத்திய கிழக்கு நாடுகளே வாங்குகின்றன. தென் பகுதியில் உள்ள 215 தொழிற்சாலைகளில் 63 தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. மேலும் 25 தொழிற்சாலைகள் மூடப்படும் நிலையில் உள்ளன.

## பதவி பெற முடியாத நிலையில் காமினி

அமைச்சர் காமினி ஐ.தே.கட்சியில் சேர்ந்த பின்பும் பெரும் சிக்கல்களை எதிர்நோக்கிய வண்ணம் உள்ளார். இவர் பாராளுமன்றத்திற்குள் நுழைந்து அமைச்சர் பதவி பெறுவார் எனப் பல தடவைகள் செய்திகள் வெளிவந்த போதும் இவர் பாராளுமன்ற உறுப்பினராவதற்கு வசதியாக யாரும் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்ய முன்வரவில்லை. ஐ. தே.கட்சியின் தேசியப் பட்டியலில் இருப்போருடன் இது குறித்து ஆலோசிக்கப்பட்டதாகவும் யாரும் பதவி விலகுவதற்கு விருப்பம் தெரிவிக்கவில்லை என்றும் கூறப்படுகிறது. காமினி திசநாயக்கவும் தனது எதிர்காலம் குறித்து கவலை கொண்டிருப்பதாக கூறப்படுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தொண்டா-செல்லச்சாமி மோதல் நீடிக்கிறது

## உறவுகளைப் பேண ஐ.தே.க முயற்சி

தேர்தல் தோல்விக்குப் பின்னதாக தொண்டமானின் ஆதரவைப் பெறுவதில் ஐ.தே.கட்சி மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறது. முன்னர் தொண்டமானைப் புறக்கணித்த விஜேதுங்க கூட தற்போது இதில் அக்கறை கொண்டிருக்கிறார். இதைச் சந்தர்ப்பமாகக் கொண்டு தனது நோக்கங்களை வெல்வதற்காக தொண்டமான் நிபந்தனைகளை விதித்துள்ளார்.

மத்திய மாகாணத்தில் தொண்டமானின் ஆதரவாளரான சதாசிவம் அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதை மாற்றி அவர் மீண்டும் அமைச்சராக்கப்பட வேண்டும், தொண்டா, செல்லச்சாமி மோதலைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்தும் ஐ.தே.கவின் போக்கு மாற்றப்பட வேண்டும் போன்ற நிபந்தனைகள் தொண்டமானால் விதிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் செல்லச்சாமியினதும் அவரது ஆதரவாளர்களான மாகாண சபை உறுப்பினர்களதும் நிலைப்பாடு பற்றிய தனது கருத்தில் எந்த மாற்றத்தையும் தொண்டமான் கொண்டிருக்கவில்லை. அவர்கள் பதவி விலக வேண்டும் என்பதில் அவர் உறுதியாயிருப்பதாக கூறப்படுகிறது.

கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றில் செல்லச்சாமி எந்த சமரச முயற்சிக்கும் தொண்டமான் தயாராக இல்லை என்று கண்டனம் செய்துள்ளார். தொண்டமானை அவரது பேரனும் முன்னாள் மாகாண அமைச்சர் சதாசிவமும் கந்தையாவும் தவறாக வழிநடத்துவதாகவும் தனக்கு எதிரான பிரசாரங்களை தோட்டப் பகுதிகளில் மேற்கொள்வதாகவும் குறிப்பிட்ட அவர் தேர்தல் நேரத்தில் காங்கிரசில் பிளவு வருவது மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றார்.

அத்துடன் தொண்டமான் தானாக செய்த முடிவுகள் பல தோல்வியில் முடிந்ததாக அவர் சொன்னார். தோட்டத்தொழிலாளரின் வேதனங்கள், வீடுகளை உடைமையாக்குவது போன்றவற்றில் தோட்ட நிறுவனங்களுடன் செய்த ஒப்பந்தங்களை நிறுவனங்கள்

மறு பக்கம் பார்க்க..

# பிரேமதாசவுக்கு மீண்டும் ஐ.தே.கவில் மவுசு

மீண்டும் ஐ.தே.கட்சியில் பிரேமதாசாவிற்கு செல்வாக்கு ஆரம்பித்துள்ளது. கடந்த தென்மாகாணத்தேர்தலில் ஐ.தே.கட்சி படுதோல்வி அடைந்ததும் பிரேமதாசாவின் செல்வாக்கு நிறைந்த பகுதியிலேயே மட்டும் வெற்றி பெற்றதும் தெரிந்ததே. அந்த தேர்தலில் பிரேமதாசாவின் பெயரை புறக்கணித்ததே தோல்விக்கு காரணம் என்று பிரேமதாசாவின் ஆதரவாளர்கள் தெரிவித்திருந்தனர். இதில் சிறிசேன கூரேயும் உப சபாநாயகர் காமினி பொன்சேகாவும் அடங்குவர். இவர்கள் இருவரும் தென்மாகாண சபைத் தேர்தல் பிரசாரங்களில் கலந்து கொள்ளவில்லை. தேர்தல் நேரத்தில் சிறிசேன கூரே சிங்கப்பூர் சென்றிருந்தார்.

இப்போது பிரேமதாசாவின் பெயரைப் பாவித்து மீண்டும் செல்வாக்கைப் பெற ஐ.தே.க முயற்சித்து வருகிறது. இதனால் பிரேமதாசாவின் மனைவி கடும் கோபமுற்றுள்ளார் என்று கொழும்பு செய்திகள் கூறுகின்றன. தனது கணவன் கொல்லப்பட்ட பின்னர் அவர் அரசியலில் நுழைவார் என்று ஊகங்கள் தெரிவிக்கப்பட்ட போதும் அவர் அப்படியான முயற்சிகளில் இறங்கவில்லை. ஆயினும் தான் முழுமையாக ஒதுக்கப்பட்டதிலும் பிரேமதாசாவின் பெயர் புறக்கணிக்கப்பட்டதிலும் ஆத்திரமுற்ற அவர் தற்போது ஐ.தே.கட்சி பிரேமதாசாவின் பெயரை பாவிக்க அனுமதிக்கப் போவதில்லை எனச் சூளுரைத்துள்ளாராம். பிரேமதாசாவின் மரணத்தின் மூன்றும் மாத கொண்டாட்டங்கள் பற்றி அரச தொடர்பு சாதனங்கள் எந்த முக்கியத்துவமும் வழங்கி செய்தி வெளியிடவில்லை. அத்துடன் சுதந்திர தினக் கொண்டாட்டங்களின் போது ஹேமா அழைக்கப்படவும் இல்லை.

தற்போது மே மாதம் முதற் தேதி ஐ.தே.கட்சியின் மே மாதக் கூட்டங்களை நிறுத்தி பிரேமதாசாவிற்காக வழிபாடுகள் செய்ய ஐ.தே.க முயன்று வருகிறது. தற்போது பிரேமதாசாவின் மகனை அரசியலுள் நுழைக்கவும் முயற்சிகள் நடைபெறுகின்றன. ஆனால் மகனே கொழும்பு மத்திய தொகுதி தனது தாய்க்கே வழங்கப்பட வேண்டும் என்று வற்புறுத்துவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

அரசாங்கம் நடத்தும் வழிபாடுகளில் கலந்து கொள்ளாமல் தான் தனியாகவே விசேட வழிபாடுகளை சுசரித்த இல்லத்தில் ஹேமா ஒழுங்கு செய்திருக்கிறார். இந்த வழிபாடுகளில் நூறு பிக்குகளுக்கு தானம் வழங்கப்படும். இந்த வைபவங்களுக்கு எந்த அரசியல் வாதியும் அழைக்கப்படவில்லை.

# இலங்கையர்களை வெளியேற்றும்படி ஜெயலலிதா கோரிக்கை

தமிழகத்தில் இருக்கும் எல்லா இலங்கையர்களையும் நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் என்று ஜெயலலிதா கோரிக்கை விடுத்திருக்கிறார். இலங்கைத் தமிழர்களை வெளியேற்றும்படி மத்திய அரசிடம் கோரியிருப்பதாக சட்டசபையில் ஜெயலலிதா தெரிவித்திருக்கிறார்.

பெருந்தெருக்களில் இலங்கைத் தமிழ் இளைஞர்கள் வழிப்பறிச் சம்பவங்களில் ஈடுபட்டிருப்பதால் இலங்கைத் தமிழர்களை திருப்பி அனுப்பும்படி தான் மத்திய அரசைக் கேட்டிருப்பதாகவும் இந்த வழிப்பறிகளைத் தடுக்க பெருந்தெருக்களில் இரவுகளில் பொலிசார் வயர்லெஸ்களுடன் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட வழி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

### தொண்டா..

மதிக்கவில்லே. தொண்டமானின் சமாதான முயற்சியை பாராளுமன்றத் தெரிவுக்குழு நிராகரித்தது. காமினியை மத்திய மாகாண அமைச்சராக நியமிக்க முயன்றது போன்ற விடயங்களே அவை எனச் சொன்ன அவர் அமைப்பு உடைவதைத் தான் விரும்பவில்லை என்றும் பேச்சுவார்த்தைக்கு தாம் தயார் என்றும் தெரிவித்திருக்கிருர்.

செல்லசாமி பிரதமரையும் கட்சி செயலாளர் சிறிசேன கூரேலியையும் சந்தித்து தனது நிலைப்பாட்டை விளங்கப்படுத்தியுள்ளார். தாங்கள் மீண்டும் கட்சிக்குள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

## சுவிஸ் அகதிகள் நாடு கடத்தல்

சுவிஸில் உள்ள இலங்கை அகதிகள் 250க்கு மேற்பட்டோர் அடுத்த மாதம் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட உள்ளார்கள் என கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. கடந்த தை, மாசி மாதங்களில் சென்ற இவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பின்பு வந்தவர்களே முன்பாக அனுப்பும் திட்டத்தை அமுல் செய்ய சுவிஸ் முயன்று வருகிறது.

இலங்கைக்கும் சுவிஸ்க்கும் இடையில் நடைபெற்ற ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படையிலேயே இந்த நாடு கடத்தல்கள் நடைபெற உள்ளன. இவர்கள் அனைவரும் சிறு சிறு குழுக்களாகவே திருப்பி அனுப்பப்படுவார்கள். இவர்கள் திரும்பி வரும் பட்சத்தில் இவர்களுக்கு கடவுச் சீட்டுக்கள் சுவிஸில் உள்ள இலங்கை தூதுவரகத்தில் வழங்கப்படும் என்றும் கொழும்பில் பிரச்சனைகளை எதிர்கொண்டால் இவர்கள் ஐ.நா அகதிகள் அமைப்பையோ சுவிஸ் தூதுவரகத்தையோ அணுகலாம் என்றும் கூறப்படுகிறது.

இவர்களுக்கு பத்தாயிரம் ரூபா பணமும் பயணச் செலவாக வழங்கப்படும்.

கடந்த வருடம் மட்டும் சுவிஸில் குற்றச் செயல்கள் புரிந்த எண்பது பேர் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டிருந்தார்கள்.

## நூறு பிக்குகள் யாழ் விஜயம்

முன்பு யாழ்ப்பாணத்திற்கு சமாதான முயற்சியை முன்னெடுத்துச் சென்ற அசாஜி மாதகம்பம தேரோ தற்போது மேலும் நூறு புத்த பிக்குகளை அழைத்துச் செல்லவுள்ளதாக சண்டே ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இந்தக் குழுவில் சமாதான, சுற்றுடல் சம்பந்தமாக விடயங்களில் செயற்படும் பிக்குகள் இடம் பெறுவார்கள். இவர்கள் யாழ்ப்பாணத்தில் தொண்டர் நிறுவனங்களேயும் சாதாரண மக்களேயும் சந்தித்து உரையாடுவார்கள் என்றும் புலிகளின் தலைமையுடனும் பேசுவதற்கு முயற்சிகள் எடுக்கப்படும் என்றும் பேச்சாளர் ஒருவர் தெரிவித்திருக்கிருர். அத்துடன் பணயக்கைதிகளான பொலிசார், இராணுவத்தினரை விடுவிக்க பேச்சுவார்த்தை மூலம் முயற்சிப்பார்கள்.

இவர்களின் முயற்சிக்கு அரசின் அனுமதி கிடைத்திருப்பதாகவும் மே மாத முடிவில் இவர்கள் செல்வார்கள் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

## பங்கு சந்தை தலைவர் ராஜினுமா

கொழும்பு பங்கு சந்தையின் தலைவரான விகைலாசபிள்ளை தனது பதவியை ராஜினமா செய்திருக்கிருர். ஜோன் கீல்ஸ் நிறுவனத்தில் உதவித் தலைவராக இருக்கும் இவர் தனது பதவியை ராஜினமாச் செய்தவுடன் மலேசியாவுக்கு சென்றிருக்கிருர். திடீரென்று இவர் தனது பதவியை ராஜினமா செய்தது குறித்து முதலீட்டாளர்கள் ஆச்சரியம் தெரிவித்திருக்கிருர்கள்.

கொழும்பு பங்கு சந்தையின் நடவடிக்கைகளை தொலைக்காட்சியில் உடனுக்குடன் காட்டுவது சம்பந்தமான கருத்து வேறுபாட்டினுலேயே இவர் தனது பதவியை விட்டு விலகியிருக்கிருர். ஒரு குறிப்பிட்ட நிறுவனத்திற்கே இந்த ஒளிபரப்பு உரிமைகள் கொடுக்கப்படுவதால் சிக்கல்கள் ஏற்படலாம் என்று பலரும் அபிப்பிராயங்கள் தெரிவிக்கின்றனர்.

## ஓகோ! அப்படியா!

புலிகள் நாணயம் வெளியிடுவது பற்றி வாசகர்கள் தொலைபேசியில் தெரிவித்த கருத்துக்கள்..

சனங்கள் ஏற்கனவே சாப்பாடில்லாமல் கஷ்டப்படுகுதுகள். இன்னமும் கஷ்டம் கொடுக்கிருங்கள். எங்கை போய் முடியப் போகுதோ?
செல்வகுமார், ஸ்காபரோ

இப்பிடி எல்லாம் செய்தால் தான் தமிழீழம் கிடைக்கும்போது வசதியாக இருக்கும்.
கருணு, மொன்றியல்

இங்கையிருந்து போய் சீதனம் வாங்கவும் முடியாது, காசு அனுப்பினுலும் நட்டம். இனிமேல் வெளிநாட்டிலிருந்து ஒருவரும் வரவேண்டாம் என்று புலிகள் சொல்கிருர்கள் போலுள்ளது
ஸ்ரீபன்ராஜ், ரக்சிடோ கோட்

புலிகள் தமிழீழ ரூபாய் அடிக்கிற நேரம் டொலர் அடிச்சார்கள் எண்டால் நல்லது.
தேவகுமார், ஸ்காபரோ

காசு அடிக்கிறது நல்ல விசயம் தான். ஆனல் பெறுமதியைக் குறைச்சுக் குடுக்கிறது அநியாயம்
வாமதேவன், எக்லின்ரன் அவனியூ

யாழ்ப்பாணத்தில பேப்பர் அடிக்க பேப்பர் இல்லாமல் கொப்பிப் பேப்பரில காசு அடிக்கிறுங்கள். காசு அடிக்க எங்க பேப்பர் கிடைக்குதோ?
குகனேசன், ரொறன்ரோ

இந்த வாரம்...
யாழ்ப்பாணத்தின் மீது பாரிய தாக்குதல் ஒன்று நடத்த இருப்பதாக நீண்ட காலமாக அரசு கூறி வருகிறது. இது நடக்குமா? நடந்தால் என்ன நடக்கும்? உங்கள் கருத்துக்களை 963 5738 இலக்கத்தில் வெள்ளி இரவு முதல் ஞாயிறு இரவு வரை தெரிவியுங்கள். அனுமதேயக் குரல் அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்.. உங்களுடன் தொடர்பு கொள்வதற்கு வசதியாக தயவு செய்து உங்கள் பெயர், தொலைபேசி இலக்கங்களை தெரிவிக்கவும். நீங்கள் விரும்பாவிடில் உங்கள் பெயர்கள் பிரசுரிக்கப்பட மாட்டாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கோமல் சுவாமிநாதனின் இலங்கை விஜயம்

***அதிக பிரதிகள் விற்பனையாகிற தமிழ் நாட்டின் பிரபல சஞ்சிகை 'சுபமங்களா' என்பதனால் தான் இப்பேர்வழிகள் கோமலைத் தலைக்கு மேல் வைத்துக் கொண்டு கூத்தாடுகின்றனர்.***

'சுபமங்களா' ஆசிரியரான கோமல் சுவாமிநாதன் இலங்கைக்கு விஜயம் செய்ததையொட்டி பல சுவாரசியமான சம்பவங்கள் நடந்தேறின.

தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் கோமல் இலங்கைக்கு வந்திருந்தார். இலங்கையின் முக்கிய பிரமுகர்கள் சிலர் தமக்கும் அவருக்குமிடையே நெருக்கத்தை உண்டு பண்ண போட்டி போட்டுக் கொண்டு விருந்து கொடுத்தும் விழா எடுத்தும் படம் பிடித்தும் பட்டம் கொடுத்தும் கோமலைத் திக்குமுக்காட வைத்தனர். துதிபாடியும் பொழுதைப் போக்காட்டினர்.

கோமல் சுவாமிநாதன் அவர்களுக்கு வரவேற்பு விழா நடந்த அன்று கலந்துரையாடலின் போது எழுத்தாளரான பத்மா சோமகாந்தன் கோமலிடம் இலட்சுமிகரமான அழகான 'சுபமங்களா' எனும் பெயரை எப்படித் தங்கள் சஞ்சிகைக்கு தெரிந்தெடுத்தீர்கள்?" எனும் கேள்வி கேட்டார். "'சுபமங்களா எனும் பெயர் எனக்குப் பிடிக்கவில்லை அந்த நிறுவனம் அப்பெயரைத் தந்திருந்தது, நான் அதனைப் பயன்படுத்துகிறேன்" என்றார் கோமல். பத்மா சோமநாதன் அசடு வழிந்தார்.

அதிக பிரதிகள் விற்பனையாகிற தமிழ் நாட்டின் பிரபல சஞ்சிகை 'சுபமங்களா' என்பதனால் தான் இப்பேர்வழிகள் கோமலைத் தலைக்கு மேல் வைத்துக் கொண்டு கூத்தாடுகின்றனர்.

இன்னொரு எழுத்தாளர் நா. சோமகாந்தன் (பத்மா சோமகாந்தனின் கணவர்) இவர் யாழ்ப்பாணத்தில் இருக்கிற போது முற்போக்கு எழுத்தாளர் முகாமுடன் முகம் காட்டியவர். கொழும்பிற்கு வந்த பின் வண்ணத்தை மாற்றிக் கொண்டார். இலங்கை மொரீஷியஸ் நட்புறவுச் சங்கத்தின் தலைவராக விளங்குகிறார். கடந்த 26.03.94 அன்று விபவி நிறுவனம் கோமல் சுவாமிநாதனை சிங்களக் கலைஞர்களுடன் கலந்துரையாடல் ஒன்றுக்கு அழைத்திருந்தது. மதிய போசன விருந்தளித்துக் கௌரவிப்பதாகவும் ஏற்பாடு. மதியம் ஒரு மணி போல சோமகாந்தன் அவர்கள் 10 நிமிடத்தில் கோமலைக் கொண்டு வந்து விட்டு விடுவேன் என்று கூறிவிட்டு இரண்டரை மணித்தியாலங்களின் பின் கோமலைக் கொண்டு வந்து விட்டார். அதுவரையும் சிங்களக் கலைஞர்கள் சாப்பிடாமல் காத்திருந்தார்கள். தேசிய கலை இலக்கியப் பேரவை செயலாளர் திரு ந.ரவீந்திரன் அவர்கள் யாவரிடமும் மன்னிப்புக் கேட்டு கலைஞர்களைச் சாப்பிடுமாறு வற்புறுத்தினார். சிங்களக் கலைஞர்கள், கோமல் சுவாமிநாதன் தங்களை அவமதித்ததாகவே கருதினார்கள்.

சோமகாந்தன் இலங்கையின் பிரபல தொழிலதிபரும் மொரீஷியஸ் நாட்டுத்தூதுவரும் ஐ.தே.கவின் அபிமானியுமாகிய திரு. ஈஸ்வரன் அவர்களின் வீட்டுக்கு மதியபோசான விருந்தளிக்கக் கோமல் சுவாமிநாதன் அவர்களைக் 'கடத்திக்' கொண்டு சென்றிருக்கிறார். இங்கு கலைஞர்கள் காத்திருக்கிறார்கள்.

அடுத்த நாள் அரங்காடிகள் எனும் நாடக அமைப்பு கோமல் சுவாமிநாதனுடன் தமிழ் நாடகக் கலைஞர்களை கலந்துரையாடல் ஒன்றுக்கு அழைத்திருந்தது. காலை 9 மணிக்கு கலந்துரையாடல் தொடங்குவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. 10 மணி ஆகிவிட்டது. கோமலைக் காணவில்லை. விசாரித்ததில் விஷயம் இதுதான். அந்தனி ஜீவா அவர்கள் காலைச் சாப்பாட்டுக்காக இலங்கையின் பிரபலஸ்தர்களில் ஒருவரான யோகா பாலச்சந்திரன் வீட்டுக்கு கோமல் சுவாமிநாதனை 'கடத்திச்' சென்று விட்டார்.

கோமல் சுவாமிநாதனும் இங்கு நடைபெறும் விருந்துபசாரங்களில் தான் திணறிப் போய்விட்டதாக குறிப்பிட்டார். இப்படியான சம்பவங்கள் கோமல் சுவாமிநாதன் அவர்களுக்கு கெட்ட பெயர் ஏற்படுத்தவே வழிவகுக்கும்.

இனி வரும் சுபமங்களா இதழ்களில் சோமகாந்தன், அந்தனி ஜீவா போன்றோரின் படைப்புக்களை எதிர்பார்க்கலாம். இவ்வளவு 'கடத்தல்' சம்பவங்களும் நடைபெறுகிற போது கோமல் சுவாமிநாதனை இலங்கைக்கு அழைத்து வந்திருந்த தேசிய கலை இலக்கிய பேரவையினர் என்ன செய்கிறார்கள்?

***நன்றி: சரிநிகர்***


**கிறிஸ்தவ திருமணங்களில் மணப்பெண்ணிற்கான தலைச்சோடனை, அலங்காரப் பொருட்கள் குறைந்தவிலையில் வாடகைக்கு பெற்றுக்கொள்ள**

**முரளி**

**7962672**

பூங்கொத்துக்கள் நீங்கள் விரும்பிய வடிவங்களில் பெற்றுக் கொள்ளலாம்


**Net, Colorful Flower Bouquet, Flower Basket**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போலிகளை நம்பி ஏமாறாதீர்கள்




சில வருடங்களுக்கு முன் சுவிட்சர்லாந்தில் புலம் பெயர்ந்து வாழ்நத தமிழர்களிடையே கோஷ்டிச் சண்டைகள் நடைபெற்றுவந்த போது ஒரு தமிழரின் வாசல் கதவில் பின் வரும் வாசகம் எழுதப்பட்டிருந்ததாம். 'தமிழனை மதிக்காத தமிழனை மிதி' என்பது தான் அந்த வாசகம்.

அப்படிப் பார்க்கின் உலகெங்கணும் வாழும் தமிழர்களில் பெரும்பகுதியினர் மிதித்துக் கொல்லப்பட்டு விடுவர். அந்த வகையில் உலகத்தமிழர் பண்பாடு மிகவும் ஆரோக்கியமாகக் காப்பாற்றப்பட்டு வருகிறது.

ஏஜென்சிக்காரர் தொடக்கம் இறைச்சிக்கடைக்காரர் வரை, ஈழத்தமிழர் சங்கங்கள் தொடக்கம் உலகத்தமிழர் சங்கங்கள் வரை சக தமிழர்களை மதிக்கும் பழக்கம் புகழ்ந்து கொள்ளும் அளவுக்கு இல்லை. இப்பழக்கத்திற்கு படித்தவர்கள் பாமரர்கள் என்ற பேதம் அளவேயில்லாது எல்லோரும் அடிமையாகப் போயிருக்கிறார்கள்.

புலம் பெயர்ந்த நாடுகளில் எமது சமூகம் படுவேகமாக முன்னேறிக் கொண்டு வருவதாக ஒரு கணிப்பு இருக்கிறது. நூறாயிரத்திற்கும் குறைவான தமிழ் மக்களிடையே ரொறன்ரோவில் ஆறு ஏழு பத்திரிகைகளும் பல சஞ்சிகைகளும் வருகின்றன. பல மில்லியன் மக்கள் வாழும் ஒன்ராறியோ மாநிலத்தில் கூட மாநில வாரியாக இரண்டு மூன்று பத்திரிகைகள் தான் வருகின்றன. கீரைக்கடைக்கு எதிர்க்கடைகள் தேவை என்பதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. அதனால் வாடிக்கையாளர்களுக்கு நன்மை தான். ஆனால் வாடிக்கையாளர்களை அடிமுட்டாள்களாக நினைக்கின்ற மனப்பான்மை வியாபார, சமூக நிறுவனங்களிடம் இருப்பதுதான் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது.

தமிழரை நம்பி உருவாக்கப்பட்ட வர்த்தக நிலையங்களும் பத்திரிகை சாதனங்களும் சமூக நிறுவனங்களும் தங்களை வளர்த்துக் கொள்ளும் அதே வேளை சமூகத்தை சார்ந்திருத்தலிற்கான பிரதியுபகாரத்தை ஏதோ ஒரு வகையில் செய்து கொள்ள கடமைப்பட்டிருக்கிறார்கள். குறைந்த பட்சம் வாடிக்கையாளர்களை மதித்து நாணயமாக நடத்துதல் கூட ஒரு வகையில் பிரதியுபகாரம் தான்.

சென்ற வாரம் ரொறன்ரோவில் ஒரு தமிழர் உணவகத்திற்கு செல்ல வேண்டி நேரிட்டது. அங்கு காசாளராக பணிபுரியும் பெண் நடந்து கொண்ட முறை இனியொரு தடவை இங்கே வராதே என்பது போல அமைந்திருந்தது. இது பற்றி வேறு பலரிடம் பேசிக் கொண்ட போது இந்தப் பெண் பற்றி மட்டுமல்ல, அங்கு விற்பனையாகும் உணவின் தரம் பற்றியும் பல புகார்கள் செய்யப்பட்டுள்ளதாகவும் அறிய முடிந்தது.

ரொறன்ரோவில் ஒரு தமிழ் மருத்துவர் தன்னிடம் வருகின்ற நோயாளிகளிடம் உரையாடி விட்டு ஒருவர் பற்றிய பிரத்தியேகமான விவகாரங்களை இன்னொரு நோயாளியுடன் பகிர்ந்து கொள்வதாகவும் தெரிய வந்தது. இப்படி பற்பல விவகாரங்களில் தொழில் ரீதியான ஒழுங்கீனங்கள் வாடிக்கையாளர்களை தமிழர் நிறுவனங்களிலிருந்தும் அகற்றி விட ஏதுவாக இருக்கிறது. பொதுநோக்கம் கொண்ட பல சமூக நிறுவனங்கள் தங்கள் சேவைகளில் பாரபட்சம் காட்டுவது சம்பந்தமாக பல புகார்கள் தாயகத்தில் ஏற்கனவே பிரசுரமாகியிருக்கின்றன.

தமிழர் சமூகத்தின் பற்பல தேவைகளையும் நிறைவேற்றக்கூடிய வகையில் பலர் பற்பல துறைகளிலும் முன்னேற்றம் கண்டுள்ளனர். இப்படியான ஒவ்வொருவரின் பங்களிப்பின் விளைவு ஸ்திரமான சமூகம் என்பது மட்டுமல்ல, இன்னும் சில வருடங்களில் புலம் பெயர் நாடுகளில் அரசியல் விவகாரங்களிலும் காத்திரமான தாக்கங்களை உருவாக்கிக் கொள்ளவும் ஏதுவாக இருக்கும்.

மேல் நாட்டு முறையின் முக்கியமான அம்சமே பணம் தான். காதல், அன்பு, பாசம், நட்பு, சேவை என்பன எல்லாம் பணத்தைச் சுற்றியே சுழன்று கொண்டிருக்கும் நிலைமை. இந்நிலைமையில் பலனை எதிர்பாராது எவரும் நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பது நியாயமற்றது. வியாபாரிகளுக்கு வியாபாரம் நடக்கத்தான் வேண்டும். மருத்துவர்கள் வழக்கறிஞர்கள் எல்லோருக்கும் வருவாய் இருந்து தான் ஆக வேண்டும். பத்திரிகைக் காரர்களுக்கு பத்திரிகை விற்பனை இருந்து தான் ஆக வேண்டும். பணம் பண்ணுவது தான் இவர்களது முதலான நோக்கம் என்பதை நாமும் ஏற்றுக் கொண்டு தான் ஆக வேண்டும். அதே வேளை வாடிக்கையாளர் என்ற வகையில் அவர்கள் தமது பணத்திற்கேற்ப பலனையும் பெற்றே ஆக வேண்டும். நாணயமான தொழில் முறைகளில் இந்த இரண்டு பகுதியினருமே பலன் பெறுகிறார்கள். நாணயமான தொழில் நிறுவனங்கள் நீண்ட காலம் நிலைத்து நிற்கின்றன. துரதிஷ்ட வசமாக பல தமிழர் நிறுவனங்களில் இந்த நாணயம் உலோக உருவில மட்டும் தான் இருக்கிறது.

கடந்த பல வருடங்களாக வெளிவரும் வர்த்தகர் மஞ்சரி ஒரு நல்ல வியாபார முயற்சி. விளம்பர தாரர்களும் உரிமையாளர்களும் பரஸ்பரம் பலனடைந்தனர். அதே போன்றதொரு மஞ்சரியை வேறு பலர் உருவாக்க முனைந்த போது அது நாணயமான முயறசி அல்ல என்ற நினைப்பே பலரிடம் இருந்தது. அதே வேளை இன்னொரு வியாபார நிறுவனம் ஒரு வர்த்தக மஞ்சரியை வெளியிட்டிருக்கிறது. இதே போன்ற நடைமுறைகள் பல துறைகளிலும் பின்பற்றப்பட்டு வருகின்றது. இப்படியான பிரதி பண்ணும் தொழில் முயற்சிகள் அவசியம் தானா?

யார் எப்படிப்போனால் என்ன, நான் மட்டும் முன்னேறிட வேண்டும் என்ற எண்ணம் சமூகத்தைப் பொறுத்தவரை ஆரோக்கியமானதல்ல.

வித்தியாசமாக அம்சங்களுடனும், நோக்கங்களுடனும் கண்ணோட்டங்களுடனும் புதிய

**சிவதாசன்**

17ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒரு கிழவியின் கதை

## ஜி.மொனிக்கா

அந்த அழகிய நகரம் இரவு விளக்கின் வெளிச்சத்தில் மூழ்கி கிடந்தது. பக்கத்து பில்டிங்கில் ஒரு வாரத்துக்கு முன் ஒரு சீனன் செத்துப் போய்விட்டான். பில்டிங்குக்கு கீழ் கொட்டகை அடித்து ஒரு வாரமாக ஒரே வாத்திய இசை காதை பிளந்து கொண்டிருந்தது. நித்திரையே இல்லை. சீனர்கள் செத்தால் அப்படித்தான் இரவிராக விருந்து நடக்கும். மேசைகளும் கதிரைகளும் போட்டு விடிய விடிய சீட்டாடுவார்கள். ஒரு பக்கம் இசைக்குழு இசைக்கருவிகளை மீட்டிக் கொண்டிருக்கும். சீனர்கள் செத்துப்போனால இறுதிச்சடங்கு எப்போது செய்வார்கள் என நான் அலைவதுண்டு. அத்தனை அழகாக இறுதிச் சடங்கை நடத்துவார்கள். தங்கரதம் போல் சோடிக்கப்பட்ட ஒரு ரதத்தில் சவப்பெட்டி வைக்கப்பட்டிருக்கும். அதில் ஒரு மனித சிலை, இறந்தவரின் பெரிய படம், ஒரு பிளாஸ்டிக்கார், அவர் பாவிக்கும் பொருட்களையெல்லாம் பிளாஸ்டிக்கில் செய்து வைத்திருப்பார்கள். அதன் பின் வானலோகத்து தேவதைகள் போல் எதையோ தோளில் வைத்து மீன் கூடைகளை சுமப்பது போல் எதையோ சுமந்த வண்ணம் சில பெண்கள் அன்னமென நடந்து போவார்கள். பின் நடனம், பின் இசைக்குழு முழு வாத்திய இசையுடன், அதன்பின் ஒரு ரதம் வண்ண மலர்கள் கருப்புநிற உடையணிந்த பாடல்குழு, நாவல்நிற உடையணிந்த மனிதர்கள், இன்னும் அழகான சிறுவர் சிறுமியர் நடனம், இறந்தவரின் குடும்பத்திலுள்ளவர்கள் முகத்தை மண்நிற சாக்கு போன்ற போர்வையால் முக்கோண வடிவில் முகத்தை மறைத்துக் கொண்டு மெதுவாய் நடந்து போவார்கள். இவர்கள் அழுகின்றார்களா என்பது வெளியே தெரியாது. ஒரு முறை மிகச் சிரமப்பட்டு ஒருவர் இந்த சாக்கு போன்ற முக்கோண வடிவங் கொண்ட தொப்பி அணியும் போது கவனித்தேன். அவரது கண்கள் அழுது அழுது சிவப்பேறி முகம் வீங்கிக் கிடந்தது. ஒரு சீனரிடம் கேட்டேன் நீங்கள் ஏன் இப்படி கார் எல்லாம் வைத்து இறுதிச்சடங்கை செய்வது என.. மோட்சத்தில் போயும் அவர் சந்தோஷமாயிருக்க வேண்டும் எனதான் என்றார். எனக்கு புரியவில்லை. இவர் சொன்ன கருத்து உண்மையாயிருக்குமா?

இரவிற்கு சொந்தமான அந்த அமைதி அன்று ஏனோ இல்லை. இரவு பத்து மணி சிங்கப்பூர் வானொலியில் பழைய பாடல்கள் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தன.

யாரோ ஒருத்தி தொடைகளை காட்டிக் கொண்டு கவர்ச்சி ஆடை அணிந்து டாக்சியை நிறுத்தி அதில் ஏறிக்கொள்கிறாள். இரவு ராணியாயிருக்கலாம். வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் கார்கள். அதில் ஒவ்வொரு காரையும் ஒரு வாளி தண்ணீரில் ஒரு துணி துண்டை நனைத்து கழுவிக்கொண்டிருக்கும் ஒரு இலங்கை கிழவர்! நிச்சயமாக இவர் போலி கடவுச்சீட்டில் போலி வயதை சொல்லித்தான் இங்கு வேலைக்கு வந்திருப்பார். வேலையும் செய்து இரவில் பாட் டைம் என்று கார் கழுவுவதாகயிருந்தால் அது நம் தேசத்து குடிமகனேதான்.

மனைவி ஊரில்.. அத்தான் சிங்கப்பூரில் எஞ்சினியர் என படு குஷியாக செலவழிப்பாளோ என்னவோ! இதைவிட அந்த பில்டிங் முழுக்க குப்பை கொட்டும் குப்பை தோம்பில் ஒரு பெரிய வண்டி! அதன் துர்நாற்றத்தை யாராலும் தாங்கமுடியாது. அந்த வண்டியை விடிய ஆறு மணிக்கு இழுக்க முடியாமல் இழுத்துச் செல்லும் இரண்டு இந்திய இளைஞர்கள். அவர்களை கண்டாலே மூக்கை பிடித்துக்கொண்டு அப்பால் போகும் சிங்கப்பூரியர்கள்: இவர்களது அழுக்கை சுமக்கும் அவர்களை கண்டு இவர்கள் அப்பால் போகின்றார்களே! என்னே வேடிக்கை என என் மனம் துயரப்படும்.

ஒரு நாள் விடிய இவர்கள் குப்பைவண்டியை இழுத்துக்கொண்டு போனார்கள்.

சிரித்தேன். அவர்களும் சிரித்தார்கள்.

"நீங்க சிறி லங்காவா" ஒருவன் கேட்டான்.

தலையை அசைத்தவாறே "ஓம்" என்றேன்.

"நீங்க எந்த ஊர்"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"தமிழ் நாடு" என்றூர்கள்.
குப்பை வண்டியின் துர்நாற்றத்தை தாங்கி நானும் அவர்களுடனும் வண்டியுடனும் நடந்தேன்.
"அங்கு என்ன வேலே செய்தீர்கள்?"
"பி.ஏ. முடிச்சி வேலயில்லாம தான் இங்க வந்தோம்."
சற்று தொலேவில் என்னேயே முறைத்து பார்த்தபடி அக்கா நின்று கொண்டிருந்தாள்.
நான் அவர்களே விட்டு அகன்றேன்.
"உனக்கு என்ன அந்த ஊர் அண்டோக்களோட பேச்சு" (அண்டோ என்பது நாகரீகமற்ற) என்பது அவர்களது மொழிப் பாவனேப்படி.
"பாவம் அக்கா! அவங்க பி.ஏ. படிச்சவங்களாம் இங்க வந்து குப்பை இழுக்குருங்க"
முறைத்தாள். நான் அதை பொருட்படுத்தவேயில்லே. இவள் என்ன என் உடன்பிறப்பா? உடன்பிறப்பாயிருந்திருந்தால் இப்படி சொல்லியிருப்பாளா?
பஸ்சுக்குள் வைத்து அவள் எதுவுமே கதைக்கவில்லே. நானும் அவளுடன் கதைக்கவில்லே. சிரங்கூன் சாலே வந்தது இறங்கிக் கொண்டோம். இன்று வெள்ளிக்கிழமை அல்லவா! பூக்கள் வாங்கினுள்.. மரக்கறி வாங்கினுள்.. இன்று சாமி கும்பிட போகிருள். இன்று இவளது சாம்பாரில் நீந்தலாம். என் இதயம் அழுதது. மற்ற நாட்களுக்கு பன்றியும், ஆடும் சட்டிக்குள் கெபரே ஆட்டம் போடும். வெள்ளிக்கிழமை மட்டும் எங்கிருந்துதான் இந்த பக்தி வருமோ? மனசு இப்படியெல்லாம் கேள்வி எழுப்பிக் கொண்டிருந்தது.
மீண்டும் அந்த குப்பை வண்டி.
அந்த இந்தியர்கள்... அந்த துர்நாற்றம்... கண்ணுக்குள் மங்கலாய் வந்து போனது...
"வா ஏதாவது பசியாறுவம்" என்ருள் ஒரு தோசைக்கடைக்குள் புகுந்தாள் அங்கே வெள்ளே சாரம் கரியாக அதன் மேல ஒரு துண்டையும் சுற்றிக்கொண்டு வயோதிப தாத்தா ஒருவர் நின்றிருந்தார். அந்தப்பக்கம் இன்னுெரு தாத்தா நின்றிருந்தார்.... அவரது சேட்டும் கரியாக இருந்தது. இந்த தோசைக்கடையில் வேலேசெய்பவர்கள் எல்லாம் தாத்தாமார்தான்.
"என்னம்மா சாப்பிடுறீங்க" தனது ஈரமான கைகளே அந்த அழுக்கு டவளில் துடைத்தவாறே கேட்டார்.
"பேப்பர் தோசை இரண்டு" என்ருள்
"எனக்கு ஒன்றும் வேண்டாம் டீ மட்டும்" என்றேன்.
"அப்ப ஒரு தோசை" என்ருள்.
அவள் ஒன்றும் பேசவில்லே. ஆளுயரம் பேப்பர் தோசை வந்தது. அவள் சாப்பிட்டாள். நான் தேனீரை உறிஞ்சிக் குடித்தேன். நன்ருக இனிக்கவில்லே எனக்கு நிறைய இனிப்பு வேணுமே எழுந்து தாத்தா போன குசினிப்பக்கம் போய் கதவருகே எட்டிப் பார்த்தேன். ஒருவர் தோசைமா கரைத்துக் கொண்டிருந்தார் அதுவும் ஒரு தாத்தாதான். தோள் பட்டை வரை கையை போட்டு அந்த வாளிக்குள் தோசைக்காக மாவை கரைத்துக் கொண்டிருந்தார்.
ஒரு தாத்தா உடனே ஓடி வந்து "என்னம்மா வேணும்" என்ருர்.
"சீனி கொஞ்சம் பத்தாது" என்றேன் சீனி போட்டு தந்தார்.
அக்கா சட்னியில் தோசை துண்டை தொட்டுதொட்டு வேகமாய் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.
இரண்டு சிங்களப் பெண்கள் தோசைக்கு ஓடர் பண்ணிவிட்டு எங்களே பார்த்து ஏதோ கதைத்துக் கொண்டிருந்தார்கள்.... மெதுவாக காதை அந்தப்பக்கம் கூர்மையாக்கினேன்.
"கழுவட்ட இந்தகன கழு எந்தகெனெபங்" என்ருள் ஒருத்தி (கருப்பாயிருந்து கொண்டு கருப்பு ஆடை அணிந்திருப்பதாக சொல்கிருள்)
மெதுவாக அவளின் முகத்தருகே குனிந்து "ஒயா அரியட்ட சுத்தியெக் வாகே" என்றேன்
"நீ அசல் வெள்ளேக்காரி மாதிரி" என்றேன். அவள் விறைத்துப் போனுள்.
அக்கா என்னேப் பார்த்தாள் நான் சிரித்துக் கொண்டே அக்காவை "வாங்க போகலாம்" என்றேன்.
"மாமி இன்று ஹொஸ்பிட்டலில் இருந்து வாராங்க இனி இங்க தான் தங்குவாங்க" என்ருள் இவளது மாமிக்கு வயது தொண்ணூறு இருக்கும். தள்ளாடி தள்ளாடி நடை பயிலும், எப்பவும் சத்தம் போட்டுக் கொண்டிருக்கும், புத்தி கொஞ்சம் பழுதாப்போச்சு என்று கூட பேசிக்கொள்வார்கள், நான்கு மகன்மார்கள்.. இந்த வயதான காலத்தில் மூன்று மாதத்திற்கு ஒரு மகன் இவரை பொறுப்பேற்று பார்த்துக் கொள்ள வேண்டும்.
"கிளேரா நீ வேலேக்கு போகவேண்டாம். மாமியைப் பார்த்துக் கொள்ளவேண்டும்"
"உம்" என்றேன்
கிழவியை மத்தியானம் கூட்டி வந்தார்கள்.
கிழவி வந்த அசதியில் சற்று தூங்கி விழித்துக் கொண்டு "அவரிருந்திருந்தால் நான் இப்படி நாய் மாதிரி அலேயவேண்டுமா? என்னே மகாராணி மாதிரி வீட்டில் வைத்து பார்ப்பாரே!" என சத்தம்போட்டு அழ ......
"அம்மா தேத்தண்ணி குடிங்க" என்றேன். தேத்தண்ணியை வாங்கி சுவரில் கோப்பையை வீசியது. புத்தி கொஞ்சம் சரியில்லே என்கிருர்களே! ஆனுல் கிழவி பேசுவதில் சற்று நியாயம் இருப்பது போல் எனக்கு பட்டது.
"ஏ.. நீ ஊரு புள்ள தானே இங்க வா! வந்து இங்க உட்கார்" என நானும் அருகே உட்கார்ந்தேன்.
"நா நாலு மகனுகள ஒண்டியா (தனியா) இருந்து படிக்க வச்சி.. ஒரு ஆசுபத்திரியில் சமையல்காரியா வேல செஞ்சு ராவ்வெல்லாம் அடுப்படியிலயிருந்து, அந்த ஆசுபத்திரி நாத்தத்தோட வாழ்ந்து இவனுகள படிக்க வைத்து இன்னக்கி என்ன பார்க்க இவனுகளுக்கு ஒரு ஆள் வேணுமாம்" தூசண வார்த்தைகள் விதம் விதமாய் சொல்ல இப்போது எனக்கு சிங்கப்பூர் தூசண வார்த்தைகள் கூட பாடமாகிப் போச்சு. கிழவி அழ ஆரம்பித்தது.
"அழாதிங்க அம்மா" நான் தலேயை தடவி விட்டேன். அக்கா அந்தப் பக்கமே வரவில்லே.
குழந்தை போல் சாப்பிடுவதற்கு அடம் பிடிக்கும் இந்த கிழவியோடு சரியான கஸ்டமாகயிருந்தது. ஆனுல் கிழவி மீது எனக்கு பரிதாபமாகவுமிருந்தது. தான் பெற்ற குழந்தைகள் இப்படி தானே குழந்தையாயிருக்கும் போது சாப்பிடுவதற்கு அடம் பிடித்திருப்பார்கள், அப்படியானுல் இப்போது இந்த தாய் குழந்தை பருவத்தை போன்று முதுமையை சுமந்துகொண்டதும் இவர்களால் ஏன் இதை ஏற்றுக்கொள்ள முடியவில்லே? இரவு வந்தது... நான் ஜன்னலருகே நின்று வெளியுலகை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தேன். தெருவிளக்குகளின் கீழ் நின்ற சில இரவு ராணிகள் கண்ணுடியை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பைக்குள்ளிருந்து எடுத்து தங்களது உதட்டுச் சாயத்தை சரிசெய்து கொண்டார்கள். பெண்களுக்கு தான் மானம் அதிகம் என்பார்கள் ஆனால் இந்த பெண்கள் மானத்தை வானத்தில் விட்டு விட்டு தெருவோரத்தில் அரைகுறை ஆடையுடன் காத்திருப்பார்கள், மானத்துடன் வரும் ஆண்கள் உடனே காரை நிறுத்தி ஏற்றிக் கொண்டு போய்விடுவார்கள். அந்த கிழவர் கார்களை கழுவிக் கொண்டிருந்தார்.

அறைக்குள் சென்று எட்டிப் பார்த்தேன். கிழவி நிர்வாணமாய் நின்று கொண்டிருந்ததை கண்டு வேகமாய் அறைக்கதவை சாத்தி லுங்கியை எடுத்து உடுத்தி விட்டேன். கிழவி பொக்கை வாயை காட்டி சிரித்தது. லுங்கியை கழற்றி எரிந்து விட்டு மீண்டும் நிர்வாணமாய் நின்று கொண்டிருந்தது. லுங்கியை எடுத்து கட்டி ஒரு துணி துண்டால் மேலும் இடுப்பை சுற்றி இறுக்கி கட்டிவிட்டேன். தூசணத்தால் என்னை திட்டியது. சிரித்துக் கொண்டேன்.

அடுத்த நாள் தனக்கு சாரி உடுத்தி விடும்படியும் தன்னுடைய பழைய வீட்டுக்கு போகவேண்டும் எனவும் அடம் பிடித்து கண்ணடி கோப்பைகளை உடைக்க தொடங்க நானும் "கூட்டிப்போகின்றேன் அம்மா" என்றதும், "ஜாக்கட்டை போட்டுவிடு, சாரியை கட்டிவிடு, தலையை சீவி விடு என்னை என் வீட்டுக்கு இப்போதே கூட்டிப்போ" என நிற்க. நானும் ஆடிப்போனேன்.

கிழவியை குளிப்பாட்டுவதும், மெத்தையை காய வைப்பதும், பெட்சீட் மாற்றுவதும், சோறு ஊட்டுவதும், கிழவி கூப்பிடும் போதெல்லாம் "உள்ளேன் அம்மா" என முன்னால் போய் நிற்பதும் வாழ்க்கையாகி விட்டது.

கிழவி ஒரு நாள் லுங்கியை கழற்றி விட்டு தன் வயிற்றில் ஆப்பரேஷன் செய்த வடுக்களை காட்டி "இவனுகள நா பெத்தெடுக்க முந்தியே டாக்டர் வெட்டி எடுத்தார்" என சொல்லி அழ எனக்கு வேதனையாகயிருந்தது.

நாட்கள் உருண்டோடிக் கொண்டிருந்தன. அன்றிரவு கிழவி படுத்த படுக்கை! அப்படியே கிடந்தது. பேச்சு சத்தம் ஒன்றுமில்லை. சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு மூக்கின் அருகே கையை வைத்து பார்த்தேன். சுவாசம் இருக்கு. ஆனால் மரக்கட்டை மாதிரி கிடக்கே. அக்காவிடம் ஓடிப்போய் சொன்னேன். அக்கா வந்து பார்த்துவிட்டு. முகத்தை சற்று சீரியஸாக வைத்துக்கொண்டு மற்றவர்களுக்கெல்லாம் போன் பண்ணி வரச்சொன்னாள். உடனே கிழவியை மருத்துவமனைக்கு கூட்டிப்போனார்கள். சேலைன் ஏற்றப்பட்டது. மகன்மாரும் மருமக்களும் மருத்துவமனையை சூழ்ந்து கொண்டார்கள். எல்லோரது முகத்திலும் சோகம்! ஏன்? இவர்கள் இந்த கிழவியை நேசிக்கின்றார்களா? செத்துப் போகக்கூடாது என நினைக்கின்றார்களா? பெற்ற தாயை இறுதி நேரத்தில் வைத்து பராமரிக்க முடியாத இவர்கள் தாய் வாழவேண்டும் என ஆசைப்படுகின்றார்களா? இந்த வேடிக்கையான உலகத்தை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

கிழவியை சுகதேகியாக வீட்டுக்கு கூட்டி வந்தார்கள். கிழவிக்கு நான் சோறு ஊட்டிக்கொண்டிருந்தேன். பொக்கைவாயால் சாப்பிட முடியாமல் கஸ்டப்பட்டது. சாப்பிட்டு முடிய நான் சாப்பிடுவதற்காய் அமர்ந்தேன். வாந்தி எடுக்கும் சத்தம் கேட்டது. கிழவி தான் வாந்தி எடுத்துக் கொண்டிருந்தது. நான் சாப்பாடை வைத்து விட்டு கையை கழுவிக்கொண்டு ஓடிச்சென்று கிழவியின் முதுகை தடவிவிட்டேன். கிழவியின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. கிழவி என்னை இறுக பிடித்துக்கொண்டது.

தனக்கு இந்த கைகள் இரண்டும் அடிக்கடி இழுத்துக் கொள்வதாயும் "தைலம் பூசிவுடுறியா புள்ள" என கெஞ்சுவதுபோல் கேட்க நானும் தைலத்தை எடுத்து வந்து இரண்டு கைகளிலும் பூசி மாறி மாறி நீவிவிட்டேன்.

கிழவி என்னை பார்த்து "என் மருமகள் கள்ட்ட இந்த தைலத்த பூசிவுட சொன்னு நாத்தம்னு மாட்டேன்னுடுவாளுக, நீ மகராசியாயிருப்ப" என சொல்லி தனது சுருங்கிபோன தோல்களை அவர்களுக்கு தொட அசிங்கம் என சொல்லி கிழவி உறங்கிப்போய்விட நான் கையை கழுவி

அந்த அறையை சுத்தம் செய்துவிட்டு கிழவியின் அருகில் அமர்ந்திருந்தேன். கிழவி போட்டிருந்த கண்ணடி மங்கலாய் தெரிய அதை கழற்றி கழுவி சுத்தம்செய்து மேசை மீது வைத்தேன். அக்கா வந்ததும் கிழவி வாந்தியெடுத்து அடிக்கடி நிர்வாணமாய் நிற்பதையும் கூற அக்கா அலட்சியமாய் போனாள்.

அன்றிரவு மகன்மார் எல்லோரும் ஒன்று கூடி ஏதோ கதைத்துக் கொண்டிருந்தார்கள். ஒரு மகன் "அம்மாவை இப்படியே வைத்து நாங்க கஸ்டப்பட முடியாது. பேசாம வயோதிபர் விடுதியில விட்டிடுவோம், ஆளுக்கு ஆள் சமமா பணத்தை போட்டு மாத மாதம் கட்ட வேண்டியது தான்" என்றான். மற்றவர்களும் தலையசைத்துக் கொண்டனர்.

இரவு எனக்கு நித்திரை வரவேயில்லை. கிழவி அயர்ந்து தூங்கிக்கொண்டிருக்க மெல்லிய விளக்கொளியில் கிழவியின் பொக்கை வாய் திறந்தபடி ஒரு குழந்தையைப் போல் உறங்கிக்கொண்டிருக்க. இந்த தாய்மாருக்கெல்லாம் இந்த கதிதான் வருமோ? எல்லா பிள்ளைகளும் இப்படிதான் இருப்பார்களோ? இருக்காது! ஒரு தாயால் நான்கு குழந்தைகளை ஒரே நேரம் எப்படி ஒன்றாய் எத்தனையோ வருடங்கள் வளர்க்க முடிகின்றது. ஆனால் நான்கு மகன்மாரால் ஏன் ஒரு தாயை பராமரிக்க முடியவில்லை... இந்த கேள்வி ஆயிரமாயிரமாய் வியாபித்து விஸ்வருபமெடுத்தது. நான் உறங்கிப்போனேன்.

அதிகாலை...... அலாரம் அலறியது.... கிழவியின் கட்டிலருகே வந்தபோது தான் கிழவியின் போர்வை கீழே விழுந்து கிடந்தது. போர்வையை எடுத்து போர்த்திவிட்டு கிழவியின் முகத்தைப் பார்த்தேன். கிழவி அயர்ந்து தூங்கிக்கொண்டிருப்பது போல் தெரிந்தது. மார்பை பார்த்தேன். மூச்செடுத்தால் மார்பு மேல் போய் வருமல்லவா! மெதுவாக சந்தேகம் மூக்கிற்கு நேராக கையை வைத்துப்பார்த்தேன். சுவாசமே இல்லை.

"அம்மா அம்மா" தட்டினேன் கிழவி அசையவேயில்லை

கிழவியின் கால்கள் இரண்டையும் பிடித்து ஆட்டினேன் பாதங்களை சொறிந்தேன், வேகமாய் கால்களை ஆட்டினேன். கிழவி அப்படியே கிடந்தது.

கிழவி செத்துப்போய்விட்டது. எனக்கு அழுகை வரவில்லை பரிதாபமாகயிருந்தது.

அக்காவின் அறையை போய்

21ம் பக்கம் பார்க்க...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஏமாற்றாதே! ஏமாறாதே!

நாம் எவ்வளவு அவதானமாக இருந்தாலும் யாரிடமாவது வாழ்க்கையில் ஏமாந்து விடுவோம் அல்லவா! எங்கள் அம்மா கூட சிறுவயதில் எங்களை ஏமாற்றி தானே சோறு ஊட்டுவார். நிலாவை பிடிச்சி தாறேன், பூதம் வரும், பேய் வரும், காக்கா மை கொண்டு வரும், பசு பால் கொண்டு வரும், பச்சைக் கிளி பழம் கொண்டு வரும், மாமன் சீர் கொண்டு வருவான் என்றெல்லாம் நாங்கள் சின்ன வயதிலே ஏமாற்றப்படுவோம், பின்பு நண்பர்களால், காதலர்களால், காதலிகளால், ஏதோ ஒரு வகையில் ஏமாந்துக் கொண்டிருப்போம், சில மணித்தியாலங்களில் நண்பன் என நம்பி ஏமாந்து வாழ்வை தொலைத்த எத்தனையோ பேரை என் வாழ்வில் நான் சந்தித்துள்ளேன். சொல்லொணு துயரத்தில் ஆழ்த்தும் அவர்களது வாழ்வை எண்ணி இந்த பிரபஞ்சத்தில் எத்தனை விதமான மனிதர்கள் வாழ்ந்துக் கொண்டிருக்கின்றார்கள் என வியந்திருக்கின்றேன் அதே நேரம் நேர்மையும், தூய்மையும், உண்மையான அன்பும் கொண்ட நல்ல இதயங்களும் இன்னும் இந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. சோர்ந்து போகும் போது உற்சாகமான வார்த்தைகளைக் கூறி உற்சாகப்படுத்துவதற்கும், ஆறுதல் கூறுவதற்கும் இதயங்கள் உண்டு. அப்படிப்பட்ட இதயங்களைச் சந்திக்கும்போது ஏதோ நாம் தெய்வத்தை தரிசித்தது போன்ற உணர்வு உள்ளத்தில் பொங்கி எழும். அவதானம் வேண்டும் அவதானமின்றேல் அவமானம் தான் இறுதியில் கிடைக்கும்.

வஞ்சனை, பொறாமை, ஏமாற்றுதல், பிறரை பற்றி பொய்கூறி வதந்திகளைப் பரப்புதல் பிறரின் தொலைபேசி எண்களை பாவித்து நோட்டீஸ் விடுதல், எல்லாம் இப்போது இங்கு வியாபித்து வருகின்றது. இதிலிருந்து நாம் தப்பித்துக்கொள்ள என்ன செய்யலாம்? திடீரென ஒருவரையும் நம்பாதீர்கள், பிறரைப்பற்றி தேவையில்லாமல் "அவர் சொன்னார் இவர் சொன்னார்" என கதைக்காதீர்கள், உறவினர்களுக்குள் கூட இன்று எத்தனை பிரச்சனை! அவள் இதைச்சொன்னாள் இவள் அதைச்சொன்னாள் என்று இறுதியில் நம்பியிருந்தவர்களே இப்படி ஏமாற்றிவிட்டார்களே என எத்தனை இதயங்கள் வேதனைக்குள்ளாகும். உறவு, அன்பு எல்லாம் தெய்வீகமானது. இன்று அதற்கு அர்த்தமில்லாமல் போய்விட்டது.

தமிழ் எழுத்துக்களும், கொம்பியூட்டர்களும் மொட்டை நோட்டீஸ்விடுவதற்காக அல்ல, மாடி கட்டிடங்கள் குதிப்பதற்காக கட்டப்பட்டவையல்ல என்பதை பலர் மறந்து போய்விடுகின்றார்கள். சென்றவாரம் எழுதப்பட்ட கட்டுரையில் கடிதம் மூலம் உறுதிமொழி வாங்கிக்கொள்ளுங்கள் என எழுதியிருந்தேன். கடிதம் மூலம் உறுதிமொழி வாங்கியும் என் அண்ணா எவ்வாறு ஏமாற்றப்பட்டார் என்று தன் அண்ணாவின் துயரத்தைக்கூறும் அந்த தங்கையை சந்தித்தேன்..

என் அண்ணா கனடா வருவதற்கு ஆசைப்பட்டார். அப்பாவும் அவரது ஆசைக்கு தடைவிதிக்காமல் காசை ஒரு நம்பிக்கையான ஏஜண்டிடம் [illegible] கட்டினார். ஏஜண்டோ அவரையும், இன்னும் சிலரையும் இந்தியாவுக்கு அழைத்துச் சென்று அங்கிருந்து தான் அனுப்புவதாககூறினார். இந்தியாவில் பம்பாயில் இவர்கள் இறக்கப்பட்டு பம்பாயில் ஒரு லாட்ஜில் தங்க வைக்கப்பட்டார்கள், லாட்ஜில் இவர்களை விட்டு விட்டு தான் வெளியே சென்று வருவதாக கூறி சென்ற ஏஜண்ட் திரும்பி வரவேயில்லை, மூன்று நாட்கள் கடந்து விட்டன லாட்ஜ் உரிமையாளர் அண்ணாவையும் அவர்களையும் வெளியேற்றிவிட்டார்கள், எந்த முகவரியும் இல்லாது நடு வீதியில் திரிந்த இவர்கள் இரவில் பாதையோரம் படுத்துறங்கினார்கள், பணத்தையெல்லாம் ஏஜன்சியிடம் கொடுத்து விட்டு சாப்பிடுவதற்கும் வழியற்று திரிந்த இவர்கள் பொலிசில் தஞ்சம் புகுந்து தங்கள் உண்மை நிலையை சொல்ல அண்ணா அங்கிருந்து அப்பாவுக்கு கடிதம் அனுப்பியிருந்தார். அப்பா உடனடியாக கடன்பட்டு பணத்தை திரட்டிக்கொண்டு இந்தியா சென்று அண்ணாவை அங்கிருந்து அழைத்து வந்தார். ஏமாற்றம் அடைந்த அண்ணா சோகத்தில் ஆழ்ந்தார். ஆனால் அவரை கனடா செல்லும் ஆசை மட்டும் விடவில்லை. பிறரைப்போல் தானும் போய் வாழ்வில் முன்னேற வேண்டும் என ஆசைப்பட்டு அவரது மைத்துனர் தந்த விலாசத்தில் மீண்டும் ஒரு நம்பிக்கையானவர் என்று கூறப்பட்ட ஏஜண்டை சந்தித்தார். அவர் மூன்றரை லட்சம் இலங்கை ரூபாய்களை கட்டினால் தான் உடனடியாக கனடா அனுப்புவதாக உறுதி கூறினார். அண்ணாவும் நம்பினார். நாட்டு நிலமை வேறு மோசமாகயிருந்தது. அண்ணாவும் வேலையில்லாமலிருந்தார். ஆனால் தான் எப்படியாவது கனடா செல்வது என முடிவெடுத்து ஏஜண்டின் நம்பிக்கையான வார்த்தைகளை நம்பி வீடு, காணி, எல்லாவற்றையும் ஈடுவைத்தும், மனைவியின் தாலிக்கொடி, பிள்ளைகளின் நகைகள் எல்லாவற்றையும் விற்றும் மூன்று லட்சம் கட்டினார். மீதி அரை லட்சத்தை கனடா போய்சேர்ந்த பின் தருவதாயும் உறுதியும் அளித்திருந்தார். நீங்கள் கூறியது போலவே அண்ணனும் உறுதிமொழி எழுத்தில் வாங்கிக் கொண்டார். நம்பிக்கை என எண்ணி முத்திரையில் கையெழுத்திட்டு கடிதமும் வாங்கினார். ஏஜன்காரர் சிங்கப்பூர் வரை கொண்டு போனார். இரண்டு மாதம் லாட்ஜில் சிங்கப்பூரில் அவருடன் இருந்தார். அந்நேரத்தில் கனடா வருவது கஸ்டம் என்று பல்வாறு பல கதைகள் கூறி வந்தார். பின் ஏதோ ஒரு அலுவலாக கனடா போய்வருவதாக கூறிவிட்டு சென்றார்.

# பம்பாய் தெருவில் அனாதையாய்..

நிவேதிகா

17ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மனித மூலம்



வ.ந.கிரிதரன்

கடந்த ஒரு மணி நேரமாக இவன் நடந்து கொண்டிருக்கின்றான். யார் இவன் என்கின்றீர்களா? வேறு யாருமில்லை. இவன்தான். இவன் இவனேதான். அவன் அவனேதான் என்று சொல்வதில்லையா? அது போல்தான். இவனும் இவனேதான். இவனிற்குக் கொஞ்ச நாட்களாகவே ஒரு சந்தேகம். என்னவென்று கேட்கின்றீர்களா?

வேறொன்றுமில்லை. வழக்கமாக நம்நாட்டு வேதாந்திகளிற்கு வரும் சந்தேகங்களில் முக்கியமானதொன்றுதான். 'நான் யார்.... நீயென்றால் நான் யார்? இதுதான் இவனது சந்தேகம். அதற்கு முன்னால் நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும். அது என்ன? அது தான் இவன் நடந்து கொண்டிருக்கின்ற பாதை. 'நான் கடந்து வந்த பாதை' என்றிருக்கின்றதே அது போல தான் இவன் கடந்து கொண்டிருக்கின்ற இந்தப் பாதையும். இவன் சிறுவனாகயிருந்தபோது இந்தப் பாதையைப் பற்றி இவன் படித்திருக்கின்றான். இன்னமும் ஞாபகத்தில் இருக்கின்றது. இவனிற்குப் புவியியல் கற்பித்த ஆசிரியையின் ஞாபகம் கூட இருக்கின்றது. இவ்வளவு ஞாபகசக்தி மிக்க இவனிற்கு இவனைப் பற்றி மட்டும் அப்படியெப்படி சந்தேகம் வரலாம் என்கின்றீர்களா? பொறுங்கள்! சற்றே பொறுங்கள்...... அதற்கு முன் இவன் கடந்து செல்கின்ற பாதையைப் பற்றிச் சிறிது பார்ப்போம்.

'யங்' ஸ்ட்ரீட்...... உலகப் புகழ் பெற்ற 'யங்' வீதி.... அடடா.... இவன் வேறு யாருமில்லை.... கனடா மனிதனே தான் என்கின்றீர்களா? சந்தேகமேயில்லை. இவன் கனடா மனிதனே தான். அதோ தெரிகின்றதே.... உலகின் உயர்ந்த கோபுர வகைக் கட்டடம்... அதுதான் சி.என். கோபுரம்.... அது போதும் இவன் கனடா மனிதன் தான் என்பதற்கு..... ஆனால் அதிலும் ஒரு சிக்கல்.... கனடா வீதியொன்றில் நடப்பவன் கனடா மனிதன் தான் என்று வைத்துக் கொண்டால் நிச்சயம் இவன் கனடா மனிதன் தான். ஆனால் அப்படியும் சொல்வதற்கில்லை. கனடா புகழ் பெற்ற செல்வந்த நாடு. சர்வ வல்லமை பொருந்திய அதி வீர பராக்கிரம அமெரிக்காவின் அயல்டை நாடு. அதிலும் ரொரண்டோ பல்வேறு உலக அதிசயங்களை உள்ளடக்கிய மாபெரும் நகரங்களில் முக்கியமானதொன்று. உல்லாசப் பிரயாணிகளிற்கா குறைச்சல்... இவர்களைத் தவிர அடைக்கலம் நாடி வரும் அகதிகள்.... ஆபிரிக்கர்கள்.... ஆப்கானியர்கள்... ஆசியர்கள்... இந்தியர்கள்.... இந்தியர்கள் வேறு! ஆசியர்கள் வேறு.... முழிபிதுங்காதீர்கள்... ஆசியர்களென்று இங்கு பொதுவாக சீன உபகண்ட நாடுகளைச் சேர்ந்தவர்களைத்தான் குறிப்பிடுகின்றார்கள். அதுதான்... வேறொன்றுமில்லை.

அப்படியென்றால் இவன் யார்? யார் இவன்? இவனுடன் தான் சிறிது நடந்து சென்று பார்ப்போமே. ஒரு வேளை புரிந்து விடலாம். இவனைப் பார்த்தால் தாடி வளர்த்து, சடை பின்னி சாமியாரைப் போலல்வா இருக்கின்றது. நதிமூலம் அது இது என்பது போல் ரிஷிமூலம் தெரிவதில்லை என்கின்றார்களே... ஒரு வேளை இவன் மூலமும் அந்த வகையானது தானா? நம்பிக்கையை இழந்து விடாதீர்கள்.... சற்றும் பொறுமையாகத் தான் இவனைப் பின்தொடர்ந்து பார்ப்போமே... 'மீன் டைம்...' அடடா... எனக்கும் இங்கு வந்த இந்த ஆறு மாதத்தில் தாய் மொழியே மறந்து விடும் போலிருக்கின்றதே. அதாவது இவனைப் பின் தொடர்ந்து கொண்டு இவனைப் பற்றி அறிய முயன்று கொண்டிருக்கின்ற அதே சமயம் இவனது உடை, தோல் நிறம் என்பவற்றைச் சிறிது ஆராய்ந்த தான் பார்ப்போமா.... உடை.... கந்தல்தான் கனடாவில் கந்தலா... கந்தல் மனிதர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள். அதுவும் கனடாவில்.... சொன்னால் நம்ப மறுப்பார்கள். நமக்கேன் வம்பு... சரி இவனது தோலின் நிறம்.... நிச்சயமாக வெள்ளையில்லை. அழுக்கு உடல் முழுக்கப் பரவியிப்பதால், தாடி மண்டிக் கிடப்பதால் சொல்வதற்கில்லை. தளர்ந்து விடாதீர்கள். நம்பிக்கைக்கு இன்னும் இடம் இருக்கத்தான் செய்கின்றது.

இதோ இப்பொழுது புகழ்பெற்ற 'ஈட்டன் செண்டரைக் கடந்து, யங் வீதியில் வடக்காக 'டன்டாஸ்' வீதியைக் கடந்து நடந்து கொண்டிருக்கின்றான். 'ஈட்டன் சென்டர்' இருக்கின்றதே... கனடாவின் வீட்டை விட்டு ஓடி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரும் இளசுகளின் ஆரம்ப அடைக்கல மாளிகை இதுதான். இங்கிருந்து தான் இவர்களில் பெரும்பாலோனோர் உலகின் மிகப் பழமை வாய்ந்த தொழில் செய்வதற்கு அடியெடுத்து வைக்கின்றார்கள். ஆனால் இவனிற்கு இது பற்றியெல்லாம் கவலைப் பட நேரமெங்கேயிருக்கின்றது. விரைவாக வடக்கு நோக்கி நடந்து கொண்டிருக்கின்றான். "சன்சிபாரை"க் கடந்து விட்டான். "சன்சிபார்" என்ற ஆபிரிக்க நாடொன்றின் ஞாபகம் வந்து விட்டதா? ஆனால் அது வேறு: இது வேறு. இது வேறு வகையானதொரு "சன்சிபார்" நிர்வாண அழகிகளின் ஆடல்களிற்குப் புகழ்பெற்ற களியாட்ட மாளிகை. இது போன்ற பல களியாட்ட மாளிகைகளை இந்தப் புகழ்பெற்ற "யங்" வீதியில் நீங்கள் காணலாம். ஆனால் இவன்தான் சாமியாரைப் போல் தெரிகின்றானே.... சாமிக்கு இந்த "காமி"க்கிற விஷயங்களிலெல்லாம் தான் கவலையில்லையே (வேறொன்றுமில்லை. சிறு வயதிலிருந்து அண்ணாத்துரை, கருணாநிதி போன்ற அடுக்கு மொழி விற்பன்னர்களின் நூல்களைப் படித்ததால் ஏற்பட்ட பழக்கம்தான் இந்த "சாமி", "காமி" யெல்லாம்.) சாமி வடக்கு நோக்கி நடந்து கொண்டேயிருக்கின்றார். ஒரு வேளை வடக்கிருக்கப் போகின்றாரோ? சாமி அதாவது இவன் இப்பொழுது வெலஸ்லியைக் கடந்து விட்டான்(ர்). இந்த கொலிஜ்ஜிற்கும், வெலஸ்லியிற்கும் இடைப்பட்ட, யங் வீதிக்கு மேற்காகயிருக்கின்ற பகுதியிருக்கின்றதே இது ஒரு வித்தியாசமான பகுதி.... பகலில் தெரியும் இதன் தோற்றத்திற்கும், இரவில் தெரியும் இதன் தொற்றத்திற்கும் 180 பாகை வித்தியாசமுண்டு. இறுக்கமாக ஒட்டிய டெனிம் ஜீன்ஸ் அணிந்து ஆணழகர்களை இங்கு நீங்கள் அப்பொழுது காணலாம். இரவு ராணிகள், இரவு ராஜாக்கள், இப்படி பல்வேறு வகையான ராச்சியங்களை உள்ளடக்கிய மாபெரும் சாம்ராஜ்ஜியத்தின் தலைநகர் தான் இந்த "யங்"வீதி. எல்லாம் இரவில் தான். பகலில் இந்தப் பூனையும் பால் குடிக்குமா ரகம்தான். அது சரி அந்த இவனிற்கு என்ன நடந்து விட்டது. அடடா நல்லவேளை ஒன்றுமே நடக்கவில்லை. அதோ போய்க் கொண்டிருக்கின்றானே... இன்னமும். வடக்காக.... விரைந்து தான் நடப்போமா... பல்வேறு திசைகளிலுமாகப் பல்வேறு மனிதர்கள். சீனர்கள், யவனர்கள், ரோமர்கள் அதாவது இத்தாலியர்கள்: ஆங்கிலேயர்கள்: அராபியர்கள்: இஸ்ரேலியர்கள்: ஆபிரிக்கர்கள், வட அமெரிக்கர்கள்: போர்த்துக்கேயர்கள்: ஜேர்மானியர்கள்: சிலர் தெற்காக நடக்கிறார்கள்: சிலர் மேற்காக.... சிலர் கிழக்காக... சிலர் வடக்காக.... இன்னும் சிலரோ குறுக்காக.... எதிரே தடித்த, அடர்ந்த மீசையுடன் ஒரு ஆங்கிலேயன்... நடுத்தர வயதினன். அலட்சியமும், அகங்காரமும் படர்ந்த முகத்தினன். தெற்கு நோக்கி வந்து கொண்டிருந்தான். "இவன்" வடக்கு நோக்கிச் சென்று கொண்டிருந்தான். இவனும் கவனிக்கவில்லை. அவனும் கவனிக்கவில்லை. சிறு மோதல். எரிச்சலுடன் ஆத்திரத்துடன் இவனைத் திரும்பிப் பார்க்கின்றான். தெற்கு நோக்கிப் போய்க் கொண்டிருந்தவன். வடக்கு நோக்கிச் சென்று கொண்டிருந்தவனின் தோற்றம் அவனிற்கு அருவருப்பைத் தருகின்றது. போதும். வார்த்தைகள் உதிருகின்றன. "..... டேர்ட்டி இன்டியன்" இவன் எதையுமே கவனிக்கவில்லை. தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றான். யார் இவன். ...? இலேசாகப் புரிகின்றதா? இந்தியனாகயிருப்பானோ? பலவகையான இந்தியர்கள் இருக்கின்றார்களே... இவன் அவர்களில் எந்த வகை? சிவப்பா... மேற்கா... கிழக்கா..... யார் இவன்? எதிரே இன்னுமொருவன் வருகின்றான். தலை மொட்டையடித்து. இராணுவ உடையணிந்த, சிப்பாயைப் போல்.. .. யார் இவன்? தோற்தலையர்களில் ஒருவனோ..... இவனும் தெற்கு நோக்கிச் சென்று கொண்டிருப்பவன். வடக்கு நோக்கிச் சென்று கொண்டிருப்பவனைக் கண்டதும். இவன் இதழ்களில் ஏளனம் கடந்ததொரு...... புன்னகையாகத் தானிருக்க வேண்டும். புன்னகையைத் தொடர்ந்து வார்த்தைகள்.... "பாக்கி......." வடக்கு நோக்கிச் சென்று கொண்டிருப்பவன் இவை எதனையுமே கவனிக்கவில்லை தொடர்ந்து வடக்கு நோக்கிச் சென்று கொண்டுதானிருக்கின்றான். யார் இவன்? "பாக்கி" என்றழைக்கப்படுகின்றானே... பாகிஸ்தானைச் சேர்ந்தவனாகயிருப்பானோ? இந்தியனா? பாகிஸ்தானைச் சேர்ந்தவனா? அல்லது.... யார் இவன்? இவன் ஒரு மனிதன். நிச்சயமாகத் தெரிகின்றது. ஒரு தலை, இரு கண்கள், இரு கைகள், இரு கால்கள்.... நிச்சயமாக மனிதன்தான். மனிதன் என்று சொல்வதால் பெண்விடுதலைப் பிரியர்களே சண்டைக்கு வந்து விடாதீர்கள். மனிதர்களில் ஒருவர் என்று சொல்லும்படி வற்புறுத்தி விடாதீர்கள். சந்தேகமில்லாமல் இவன் ஒரு மனிதன் தான். அதில் மட்டும் சந்தேகமில்லை. அது சரி அப்படியென்றால் இவன் அந்த வகையான மனிதன்.....? அட அவனிற்குத்தான் அவனைப் பற்றிச் சந்தேகமென்றால் உங்களிற்கும் வந்து விட்டதா? நதி மூலம், ரிஷிமூலம் தான் தெரியவில்லையென்று பார்த்தால், இந்த மண்ணில் மனித மூலம் கூடத் தெரியவில்லையே.


அடுத்த வாரம் முதல்

செல்வம் எழுதும்

ரொறன்ரோவில் ஒரு யாழ்ப்பாணம்

நாடகம்




தமிழத் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

### தொடர் நாடகம்

# கறை படிந்த கைகள்

## ஜீன் போல் சாத்ரே

### தமிழில்: நேசன்

ஹிகோவின் மனைவி ஜெசிக்கா புதிய கோடை கால வீட்டை அடுக்கி சுத்தம் செய்கின்றாள் ஹிகோவும் ஜெசிக்காவும் இருப்பதற்காக கட்சியினால் அந்த வீடு அவர்களுக்கு ஒழுங்கு செய்து கொடுக்கப்பட்டது. அது தோழர் ஹோடரர் வீட்டுக்கு அருகில் இருந்தது. ஜெசிக்கா வீட்டை சுத்தமாக்கிக் கொண்டிருந்த வேளை ஹிகோ வீட்டுக்கு வருகின்றான்.

ஹிகோ: நான் நீண்டநேரமாக வெளியேபோயிருந்தேன் உனக்கு மிக போர் அடித்திருக்குமே?

ஜெசிக்கா: பயங்கர போர் ஆக இருந்தது.

ஹிகோ: அப்ப வீட்டில் நீ என்ன செய்து கொண்டிருந்தாய்

ஜெசீகா: நித்திரை செய்தேன்

ஹிகோ: நித்திரையில் நேரம் போவது தெரியாது

ஜெசீகா: எனக்கு நித்திரையின் போது கனவிலும் போர் அடித்தது. அதனால் எழும்பி முட்டை முடிச்சுகளை அவிழ்த்து வீட்டை அடுக்குவதில் ஈடுபட்டிருந்தேன்.

ஹிகோ: இந்த வீடு எனக்கு தற்காலிகமாக தரப்பட்டதோ என எனக்குத் தெரியாது.

ஜெசீகா: இல்லை. நிரந்தமாகத்தான் தரப்பட்டுள்ளது.

ஹிகோ: மிகவும் நல்லது.

ஜெசீகா: அப்ப நீ அவரைப் பற்றி என்ன நினைக்கின்றாய்?

ஹிகோ: யாரைப்பற்றி கேட்கின்றாய்?

ஜெசீகா: ஹோடரரைப்பற்றித்தான்.

ஹிகோ: எல்லோரையும் போலத்தான் ஹோடரரும் இருக்கின்றார்.

ஜெசீகா: எத்தனை வயதிருக்கும்?

ஹிகோ: இருபதற்கும் அறுபதற்கும் இடையில் இருக்கும்.

ஜெசீகா: அவர் நெடுவலா அல்லது கட்டையா?

ஹிகோ: நடுத்தர உயரமிருக்கும்

ஜெசீகா: ஏதாவது வித்தியாசமான தோற்ற அடையாளங்கள்?

ஹிகோ: அவர் சாதாரணமாகத்தான் தோற்றமளித்தார்.

ஜெசீகா: அவர் தோற்றத்தை விளக்கமாக எனக்கு வருணித்துச் சொல்லு. அவரது கண்களின் நிறம் என்ன?

ஹிகோ: சாம்பல் நிறம்

ஜெசீக்கா: நீ பரிதாபத்திற்கு உரியவன். உனக்கு எல்லா கண்களின் நிறமும் எப்போதும் சாம்பலாகவே தோற்றமளிக்கும் கண்களில் எத்தனையோ நிறங்கள் இருக்கின்றன (ஜெசீக்கா ஹிகோவை பகிடி பண்ணியபடி சீண்டுகின்றாள்) அவரை உனக்கு பொறாமை காரணமாக பிடிக்கவில்லை என நான் நினைக்கின்றேன். அதனால்தான் அவரைப் பற்றி எனக்கு சொல்ல நீ விரும்பவில்லை அவர் உனக்கு அலுப்புக் கொடுத்திருக்க வேண்டும்.

ஹிகோ: இல்லை

ஜெசீக்கா: அப்ப ஏன் அவரது தோற்றத்தை, உடுக்கும் உடைகளை அவற்றின் நிறங்களைப் பற்றி உனக்கு சொல்லமுடியாமல் இருக்கின்றது. சரி இச் சீண்டல் கதையை விடுவோம் அவரிடம் நீ என்ன கதைத்தாய்?

---

***"எல்லா அரசியல் பேர்வழிகள் போல அவரும் கொலை செய்யப்படுவார்"***

***"நீயும் அவரைப் போல் அரசியல் பேர்வழிதான்".***

***"நிச்சயமாக எனக்கும் அது நடக்கலாம்".***

***"அப்படியானால் இப்படிப்பட்ட அரசியல் பேர்வழிகள் கொல்லப்பட்ட பின்பு அவர்களின் விதவை மனைவிமார் என்னதான் செய்வார்கள்?"***

***"தமது கணவர்மார்களின் பாதையைப் பின்தொடர்ந்து அவர்களும் அரசியல் இலட்சியத்திற்காகப் போராடுவார்கள்."***

---

ஹிகோ: எனது தந்தை ரொஸ்க்கோக் உற்பத்தி ஸ்தாபனத்தின் உப தலைவர் எனவும், நான் கட்சியில் சேருவதற்காக அவரின் உறவை முறித்தேன் எனவும் கூறினேன்.

ஜெசீக்கா: அதற்கு அவர் என்ன சொன்னார்.

ஹிகோ: அது நல்லது எனக் கூறினார்

ஜெசீக்கா: வேறு என்ன சொன்னார்?

ஹிகோ: நான் கலாநிதி பட்டம் பெற்றவன் என்பதை அவருக்கு மறைக்கவில்லை ஆனால் நான் ஒரு புத்திஜீவி அல்ல என அவருக்கு உணர்த்த தவறவில்லை. நான் மதிப்பதெல்லாம் ஒழுங்கும் கீழ்படிவுமே. எனக்கு ஓர் சாதாரண கிளார்க்காக வேலை செய்வதில் ஒருவித வெட்கமும் இல்லை எனக் கூறினேன்.

ஜெசீக்கா: அதற்கு அவர் என்ன சொன்னார்?

ஹிகோ: அதுவும் நல்லது எனக் கூறினார்.

ஜெசீக்கா: அப்ப நீங்கள் இருவரும் இரண்டு மணித்தியாலங்களாக என்ன தான் கதைத்தீர்கள்?

ஹிகோ: பல சந்தர்ப்பங்களில் மௌனமாக இருந்தோம்.

ஜெசீக்கா: எனக்கு உன்னைப் பற்றி நன்றாகத் தெரியும் நீ மற்றவர்கள் பேசும் போது அவர்கள் சொல்லும் எதையும் காதில் வாங்கிக் கொள்வதில்லை. அதேவேளை நீ ஒரே விஷயத்தை மற்றவர்களிடம் திருப்பித் திருப்பிச் சொல்வாய்.

ஹிகோ: நான் என்ன கதைக்கின்றேன் என்பதில் தான் நீ அதிகம் அக்கறை உடையவள் என்பதே அன்றி மற்றவர்களுடைய கதையை அல்ல என்று நான் நினைப்பது தான் அதற்கான காரணம்.

ஜெசீக்கா: உண்மைதான் என் அன்பே. ஆனால் நான் உன்னை மட்டும் தான் வைத்திருக்கின்றேன். மற்றவர்களை அல்ல

ஹிகோ: என்ன நீ சொல்கிறாய், உனக்கு ஹோடரர் வேண்டுமா?

ஜெசீக்கா: எனக்கு எல்லோரும் வேண்டும்.

ஹிகோ: ஹம் ஆனால் அவன் நேர்த்தியற்ற பேர்வழி

ஜெசீக்கா: அவரை நீ சரியாக கூடப் பார்க்கவில்லை அப்படியிருக்க நீ அவரை எப்படி நேர்த்தியற்ற பேர்வழி எனக்கூறமுடியும்?

ஹிகோ: அவரை புள்ளி போட்ட டை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அணிந்திருந்தார் அதனால்தான் அவரை ஓர் நேர்த்தியற்ற பேர்வழி எனக்கூறினேன்.

ஜெசீக்கா: உலகத்தில் எதுதான் நேர்த்தியானது? கிரேக்க அரசிகள் பலர் காட்டு மிராண்டி இராணுவத் தளபதிகளுடன் உளவு பூண்டு அவர்களுடன் படுத்தும் இருந்திருக்கின்றார்கள்.

ஹிகோ: அது பிழையான தகவல், ஏனெனில் கிரேக்க காலத்தில் பெண்கள் அரசிகளாக இருந்ததில்லை

ஜெசீக்கா: அப்ப அது பைசன்ரின் காலகட்டத்தில் நடந்திருக்க வேண்டும்.

ஹிகோ: அதுவும் பிழையான தகவல் பைசன்ரின் காலக்கட்டத்தில் கிரேக்க அரசிகளும், காட்டுமிராண்டிகள் குலத்தைத் சார்ந்த இராணுவத் தளபதிகளும் இருந்தனர் என்பது உண்மையே! ஆனால் அவர்களிடையிலே உறவுகள் இருக்கவில்லை.

ஜெசீக்கா: அப்ப அவர்கள் என்னதான் செய்தார்கள்? சரி இப்ப கதைக்கு வருவோம் நான் எப்படி இருப்பேன் என அவர் உன்னிடம் விசாரித்தாரா?

ஹிகோ: இல்லை விசாரிக்கவில்லை

ஜெசீக்கா: அவர் ஒரு மரியாதை தெரியாத மனுஷன்

ஹிகோ: ஆனால் உனக்கு ஒன்று தெரியவேண்டும் அதாவது அவனில் நீ ஆர்வம் செலுத்துவது இப்போதைக்கு ஒரு பயனையும் தரப்போவதில்லை

ஜெசீக்கா: ஏன்?

ஹிகோ: உன் வாயை மூடு (ஹிகோ கத்துகின்றான்)

ஜெசீக்கா: சரி சரி என்ட இரண்டு கைகளாலும் எனது வாயைப் பொத்திக் கொள்கின்றேன்.

ஹிகோ: அவன் கிட்டடியில் சாகப்போகிறான்

ஜெசீக்கா: அப்படிச் சொல்ல உனக்கென்ன விசரா பிடித்திருக்கின்றது?

ஹிகோ: எனக்கு விசரில்லை. ஆனால் எல்லா அரசியல் பேர்வழிகள் போல அவரும் கொலை செய்யப்படுவார்

ஜெசீக்கா: ஆ (மௌனம்) எனது கனிவான குஞ்சே! நீயும் அவரைப் போல் அரசியல் பேர்வழிதான்.

ஹிகோ: நிச்சயமாக எனக்கும் அது நடக்கலாம்.

ஜெசீக்கா: அப்படியானால் இப்படிப்பட்ட அரசியல் பேர்வழிகள் கொல்லப்பட்ட பின்பு அவர்களின் விதவை மனைவிமார் என்னதான் செய்வார்கள்?

ஹிகோ: தமது கணவர்மார்களின் பாதையைப் பின்தொடர்ந்து அவர்களும் அரசியல் இலட்சியத்திற்காகப் போராடுவார்கள்.

ஜெசீக்கா: (நகைப்புடன்) எனது அருமைப்பிரபுவே! அதிலும் பார்க்க நான் உமது கல்லறையின் அருகே மடியத் தயார்

ஹிகோ: இப்ப இப்படியான தியாக சாவுகள் மலபாரில் மட்டும் தான் நடக்கின்றது.

ஜெசீக்கா: அப்படியெனின் நான்வேறு ஒரு காரியம் செய்யலாம். அதாவது உன்னை கொலை செய்த ஒவ்வொருவரையும் கண்டுபிடித்து அவர்களை எனது மோகவலையில் சிக்கவைத்து, காமத்தில் உருக வைத்து, நான் உன்னை இழந்த சோகத்தினை அவர்கள் தங்களால் தீர்க்கமுடியும் என நம்பி, என்னை நெருங்கும் போது ஓர் கத்தியால் அவர்கள் இதயத்தை கிழிக்கலாம்,.

ஹிகோ: இதில் எக்காரியத்தை நீ உண்மையில் விரும்புகின்றாய்? அதாவது அவர்களைக் கொலை செய்வதையா அல்லது அவர்களை உனது மோகவலையில் வீழ்த்துவதையா?

ஜெசீக்கா: ஹிகோ நீ முட்டாள்தனமானவன் மட்டுமல்ல கெட்டவனும் கூட

ஹிகோ: கெட்ட பேர்வழிகளைத்தான் நீ விரும்புறவள் என நான் நினைத்தேன். (ஜெசிக்கா அதற்கு பதிலளிக்கவில்லை) தொடரும்

## அவை ..

முயற்சிகள் ஆரம்பிக்கப்படுவதுதான் தமிழர் சமூகத்திற்கு இன்றைய தேவை.

நுகர்வோர் தேவை அறிந்து பண்டங்களைப் படைப்பது ஒரு வகையில் படைப்புத்தன்மை (Creativity) வாய்ந்தது. அதனால் சகலருமே பயனடையலாம். அதுமட்டுமல்ல படைக்கப்படும் பண்டத்தின் தாம் எவ்வளவு முக்கியமானதோ அதே அளவு படைப்பாளியின் பழகும் தரமும் மிக மிக இன்றியமையாதது. இரண்டில் ஒன்று இல்லாவிட்டாலும் கூட நுகர்வோர் திசை மாறி விடுவர். உறவுக்கு பல பரிமாணங்கள் இருக்கிறது. ஒரு பக்கம் அமுக்கினால் இன்னொரு பக்கம் அது விரிவடையும். இந்த உறவு தனி மனிதர்களிடையேயானால் என்ன, சமூகங்களிற்கிடையேயானால் என்ன, பரஸ்பரம் மதிக்கப்படுவதுதான் அவசியமானது. தமிழர் சமூகத்தின் இடையே ஒரு ஆரோக்கியமான வலையுறவு உருவாக்கப்பட வேண்டும். இதனால் பரஸ்பர பலன் எல்லோரிடையேயும் சென்றடையும்.

புதிய முயற்சிகளுக்கான உந்துதல் இந்த வலையுறவின் மூலம் விரிவாக்கமடையும். இவையெல்லாவற்றிற்கும் அடிப்படையான தேவைகளாக நாணயம், நம்பகத தன்மை, கட்டுப்பாடு எல்லாமே அவசியம். இவையெல்லாவற்றையும் விலக்கி விட்டு 'போலிகளை நம்பி ஏமாருதீர்கள்' என்று சொல்லிக் கொண்டே போலிகளை உருவாக்கிக் கொண்டிருப்பதால் சமூகம் எந்த வித பலனையும் அடைந்து விடாது.

## பம்பாய் தெருவில்..

மூன்று நாட்களுக்கு சாப்பாட்டு காசு தந்து விட்டுப்போனார். போனவர் போனவர்தான்.

கனடாவில் தொடர்புகொண்டு கதைத்தபோது அப்படியொருவர் இந்த நம்பரில் இல்லை என்று சொன்னார்கள் அப்படியே ஒரு மாதமும் ஆகிவிட்டது. சிங்கப்பூர் விசாவும் முடிந்து காசும் இல்லாமல் அண்ணா சிரமப்பட்ட நேரத்தில் இலங்கையில் அப்பாவுடன் தொடர்பு கொண்டபோது அப்பா வட்டிக்கு காசு எடுத்து, இலங்கைக்கு அண்ணாவை கூப்பிட்டார் அண்ணாவின் ரிக்கட்டையும் இந்த ஏஜன்சி வாங்கியிருந்ததால் அண்ணா மிகவும் சிரமப்பட்டு மீண்டும் அப்பா அனுப்பிய பணத்தில் இலங்கைக்கு சென்றுவிட்டார் என துயரத்துடன் கூறினார் அந்த சகோதரி.

இந்த ஏமாற்றுப் பேர்வழிகள் எத்தனை காலங்களுக்கு, பிறரை ஏமாற்றி வாழப்போகின்றார்கள். என்றோ ஒரு நாள் இதற்கெல்லாம் பதில் சொல்லித்தானே ஆகவேண்டும். எத்தனை ஏழைகளின் கண்ணீர்களுக்கு இப்படியானவர்கள் காரணமாகியிருக்கிறார்கள். உயிரைப் பாதுகாக்கவும் வளமான எதிர்காலத்தை அமைக்கவும் குடும்பங்களை ஈடேற்றவும் என்று நம்பி தங்கள் ஒரே சொத்துக்களைத் திரட்டிக் கொடுக்கும் போது, அந்த நம்பிக்கைக்கு துரோகம் செய்து அன்னிய மண்ணில் தவிக்க விடுபவர்களை என்ன செய்யலாம்?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net





புகைப்பதா, புகைக்காமல் விடுவதா. எல்லாக் குழந்தைகளும் எடுக்க வேண்டிய முடிவு இது. அத்துடன் நண்பர்களுடன் சேர்ந்து கொள்வதற்கான தினசரி அழுத்தங்களால், இது இலகுவதான ஒன்றல்ல. ஆனால் அவர்களே இது பற்றி முடிவு செய்ய வேண்டும் என்பதற்காக அவர்கள் மட்டுமே என்பதல்ல கருத்து.

உங்கள் குழந்தைகளுடன் பேசுங்கள். புகையிலை சுவாசப்பை நோய்கள், இதய நோய்கள், புற்றுநோய் போன்றவற்றுக்கான முக்கிய காரணம் என்பதை சுட்டிக் காட்டுங்கள். ஒவ்வொரு வருடமும் ஒன்ராறியோவில், 13,000 அன்பான உயிர்களை இழக்கின்றோம். இவர்களில் பெரும்பாலோர் தங்கள் சிறுவயதிலேயே பிடிக்கப்பட்டவர்கள். அத்துடன் இதன் காரணமாக ஏற்படும் சுகாதார சேவைகள், இழந்த வேலை நேரம் என்பவற்றால் மூன்று பில்லியன் டொலர்கள் நஷ்டம் ஏற்படுகிறது.




இந்த கருத்துக்களை பகிர்ந்து கொள்ள சரியான தருணம் இது. ஏனெனில் இப்போது தான் மாநிலம் தழுவிய புகைத்தலுக்கு எதிரான பிரசாரம் பற்றி கண்டும் கேட்டும் வருகிறார்கள். எனவே அது அவர்களின் மனதில் உள்ளது என்பதை நீங்கள் நம்பலாம். ஆனால் அவர்கள் பெறும் எல்லா தகவல்களையும் விட, நீங்கள் வழங்கும் தகவல் போன்று எதுவும் பாதிப்பை ஏற்படுத்த மாட்டா.

பிள்ளைகளுடன் பேசுவதற்கு தயார்படுத்த, இந்தப் புத்தகத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் குழந்தைகளை உற்சாகப்படுத்துங்கள். சரியான முடிவை எடுப்பதற்கு தேவையான நம்பிக்கையை அவர்களுக்கு கொடுங்கள். ஏனென்றால் அவர்களோடு இருப்பது நீங்கள் தானே.

**தொடர்புகளுக்கு 1-800-268-1154**
**ரொறன்ரோவில்: 314–5518**
**TDD 1-800-387-5559**

TALK IT OUT

Ministry of Health
Ontario




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# Law Office

## பெவெர்லி தோர்பேண் B.A., LL.B

### பிரபல வழக்கறிஞர்

குற்றவியல் சட்டம், குடிவரவுச் சட்டம், அகதிகள் விசாரணை, மேன்முறையீடு
ஆகியவற்றில் அனுபவம் பெற்றவர், வெற்றிகள் பெற்று வருபவர், இலவச ஆரம்ப
ஆலோசனை, வசதியான சந்திப்பு ஒழுங்குகள், மொழிபெயர்ப்பாளர்கள் உதவி,
சட்ட உதவிப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்

**BEVERLY THORBURN, B.A., LL.B**
**Barrister & Solicitor**

*Expert in Criminal law,
Immigration Law,
Refugee Cases
including appeals
* Interpreters available

* Never lost a case
*Free initial consultaion
*Convenient appointments
*Leal Aid Certificates accepted

**Malvern Town Centre, 31 Tapscot Rd, Scaroborough, Ont, M1B 4Y7**
**Call:Rajah**
**(416) 754-8822**
**Fax:(416) 754-8915**

# ATLANTIC AUTO CLINIC LTD

**1960 LAWRENCE AVE EAST**

**Car Certification**
**29.99**

**755 8550**
**CALL**
**MIKE or RAJAN**


Exhaust,starter,Shocks,Altenater,Clutch
Radio,Transmission,Air Conditon.
General Repair
பல வருட அனுபவம் மிக்கவர்கள்

| | |
|---|---|
| 4WHEEL ALLIGNMENT | 44.99 |
| BREAK SHOES | 29.99 |
| BREAK PADS | 24.99 |
| TUNE UP FROM | 34.99 |
| ENGINE SHAMPOO | 24.99 |
| FILTER 4 CYL | 16.99 |

உங்கள் வாகனங்களை
குறைந்த செலவில் சிறந்த முறையில்
கம்பியூட்டர் இணைப்புகளுடன்
திருத்திக் கொள்வதற்கு நகரில்
ஒரு சிறந்த ஸ்தாபனம்

Fuel Injections, Electronic
and Electric
திருத்துவதில் பல வருடம்
அனுபவம் உள்ளவர்கள்

We use
Quaker
State Oil







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சுழலும் உலகம்

## ராவாண்டாவில் மனிதப்படுகொலைகள்!

**தி.உமாகாந்தன்**

சில காலங்களுக்கு முன்னர் இந்த உலக வலம் பகுதியில் உலகின் கண்பார்வைகளுக்கு அப்பாற்பட்டுப் போன தேசங்களான புருண்டி, ரவாண்டா ஆகிய இரு ஆபிரிக்க நாடுகளைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தோம். சமீபத்தில் அங்கு நடக்கும் சம்பவங்கள் குறிப்பாக ரவாண்டாவில் நடக்கும் மனிதக் கொலைகள் உலகத்தையே உலுப்பியுள்ளன. தான்சானியாவில் சமாதானம் குறித்த மகாநாடு ஒன்றில் பங்கு பெற்றச் சென்ற ரவாண்டாவின் ஜனாதிபதி யுவனல் ஹபாயறிமனவும் புருண்டி ஜனாதிபதி சைப்பிரியன் ந்ராயர் மிராவும் கடந்த ஏப்ரல் மாதம் 6ம் திகதி ஒன்றாகவே விமானத்தில் நாடு திரும்பினர். வரும் வழியில் ரவாண்டாவின் தலைநகரான கிகாலி விமானநிலையத்துக்கு அருகே விமானம் ரொக்கெற் தாக்குதலுக்கு உள்ளாகி விழுந்து நொருங்கி இரு ஜனாதிபதிகளும் கொல்லப்பட்டனர். செய்தி வெளியாகிய சிறிது நேரத்துக்குள் கிகாலி நகர் முழுவதும் துப்பாக்கி வேட்டுக்கள் கேட்க ஆரம்பித்துவிட்டன.

ஜனாதிபதியின் கொலைக்கு பழி தீர்க்கும் விதமாக ரவாண்டா இராணுவத்தினர் மனிதப் படுகொலைகளில் ஈடுபட ஆரம்பித்தனர். அதேசமயம் ரவாண்டா தேசாபிமானிகள் முன்னணி (RPF) உட்பட வேறும் சில ஆயுதமேந்திய அமைப்புகளும் கிளர்ச்சிகளில் ஈடுபட்டன. விளைவு ஆயிரக்கணக்கானோர் தொடர்ந்து படுகொலை செய்யப்பட்டு வருவதாக செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. தற்காலிக பிரதமராக பதவி வகித்தவரும் ஆபிரிக்காவின் இரண்டாவது பெண் பிரதமராகிய திருமதி அகதே உவிலின்கியமானா ஐ.நா அலுவலக வளவிலிருந்து ஜனாதிபதியின் காவலர்களால் இழுத்துச் செல்லப்பட்டு ஐ.நா தொண்டர்களின் கண்முன்னாலேயே கொல்லப்பட்டார். அவருக்குப் பாதுகாப்பு வழங்கிய ஐ.நா. படையைச் சேர்ந்த பெல்ஜியத் துருப்புக்கள் 11 பேரும் கொல்லப்பட்டனர். ரவாண்டா இராணுவம் 8 ரோமன் கத்தோலிக்க குருக்களையும் 11 கன்னியாஸ்திரிகளையும் கோரமாக கொலை செய்துள்ளனர். வெளிநாட்டு மதகுருக்கள் பிரிக்கப்பட்டு ஆபிரிக்காவைச் சேர்ந்த மதகுருக்களே கொல்லப்பட்டு வருகிறார்கள் ஒக்ஸ்ஃபாம், எல்லைகளை கடந்த மருத்துவர் அமைப்பு போன்ற சர்வதேச சமூகசேவை நிறுவனங்களில் பணிபுரிந்த ரவாண்டாவைச் சேர்ந்த பலர் கொல்லப்பட்டுள்ளனர். அமைச்சர்களும் அரசியல் முக்கியஸ்தர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

பெரும்பான்மை இனமான ஹூது்க்களுக்கும் சிறுபான்மையினமான ருற்சிகளுக்குமிடையே மோதல்கள் நடந்து வருகின்றன. ரவாண்டாவின் மொத்த மக்கள் தொகை 7.3 மில்லியன் இதில் 90% மானோர் ஹூதுக்கள். 10% மானோர் ருற்சிகள் 1962ம் ஆண்டு ரவாண்டாவும், புருண்டியும் பெல்ஜியத்தின் காலனி ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றன. அப்போதிலிருந்தே இரு நாடுகளிலும் தொடர்ந்து இனமோதல்களும் படுகொலைகளும் நிகழ்ந்து வருகின்றன. விளைவு இருநாடுகளிலும் கடந்த மூன்று தசாப்தங்களாக ஆயிரக்கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். ரவாண்டாவைச் சேர்ந்த 30 ஆயிரம் பேர் ஸெயாரிலும் 25000 பேர் உகண்டாவிலும் 50 ஆயிரம் பேர் தான்ஸானியாவிலும் அகதிகளாக வாழ்கின்றனர் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியொன்றில் புருண்டியின் ஜனாதிபதி கொல்லப்பட்டார். இதையடுத்து பிரெஞ்சுப் படைகள் அனுப்பப்பட்டன. இதற்கு பிரான்ஸ் கூறிய காரணம் ரவாண்டாவிலிருக்கும் பிரெஞ்சு மக்களை பாதுகாப்பதற்கு என்றே ஆனால் கடந்த டிசம்பர் மாதம் ரவாண்டாவிற்கு ஐ.நா அமைதி காக்கும் படைகள் அனுப்பப்பட பிரெஞ்சுத் துருப்புக்கள் மீளப்பெறப்பட்டன.

ஜனாதிபதியின் கொலைக்கு பழிதீர்க்கும்வகையில் ஹூது ராணுவம் ருற்சி மக்களைக் கொன்று குவிக்கும் வேளையிலே ருற்சிக்களின் அமைப்பான RPF இராணுவத்தின் மீதும், கொலைக்குழுக்களின்மீதும் தாம் தாக்குதல் நடத்தப்போவதாக அறிவித்துள்ளது. இதுகுறித்து RPF இன் செயலாளர் தாயகம் தியோஜென் ருடாசிங்வா விடுத்த அறிக்கையில் 'தலை நகரான கிகாலியில் உள்ள தமது போராளிகள் 600 பேர் இராணுவச் சுற்றி வளைப்புக்கு உள்ளாகியுள்ளதாகவும் அவர்களைக் காப்பாற்ற தாம் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். அது மட்டுமல்ல பிரச்சனைகள் எதுவும் எளிதாக முடிவுக்கு வந்துவிடாது நிலைமை மேலும் மேலும் மோசமாகும் என்றே தாம் உணர்வதாகவும் கூறியுள்ளார். RPF அமைப்பில் 15000 தொடக்கம் 20000 வரையிலான போராளிகள் இருப்பதாகக் கருதப்படுகிறது. ரவாண்டாவில் நிலைமையை சுமூகத்துக்கு கொண்டுவருவது RFF இன் கடமை என்றும் செயலாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

நிலைமை தொடர்ந்து மோசமாகும் இந்நிலையில் பெல்ஜியம், பிரான்சு ஆகிய நாடுகள் ரவாண்டாவிலிருக்கும் வெளிநாட்டவர்களை வெளியேற்றும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன.

ரவாண்டாவை பொறுத்தவரை 1959 ம் ஆண்டிலிருந்தே ஹூதுாக்கள் அதிகாரம் செலுத்த வருகிறார்கள். பெரும்பான்மை இனத்தின் ஆதரவைப் பெறுவதற்காக பெல்ஜிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காலனி ஆட்சியாளர்கள் சிறுபான்மை இனமான ருற்சுக்களை கை கழுவி விட்டார்கள். இரத்தம்சிந்தாத ஆட்சிக் கவிழ்ப்பின் மூலம் பதவிக்கு வந்த ஜெனரல் ஹபயறிமானு கடந்த 21 வருடங்களாக ரவாண்டாவை ஆண்டு வந்தார். பெரும்பான்மை இனம் சகல துறைகளிலும் ஆளுமை செலுத்தும் வகையிலேயே அவரது ஆட்சி இருந்தது. உயர்பதவிகள் யாவும் ஹூதுக்களுக்கே வழங்கப்பட்டது. வழமையாக சிறுபான்மையின மக்கள் அனுபவிக்கும் அவலங்கள் அனைத்தையும் , ருற்சிக்கள் அனுபவித்தார்கள். இவற்றுக்கெதிராக கிளர்ந்தெழுந்த ருற்சி கிளர்ச்சியாளர்கள் அயல் நாடாகிய உகண்டாவுக்குத்தப்பிச்சென்று அங்கு ரவாண்டா தேசாபிமானிகள் முன்னணியை (RPF) உருவாக்கினார்கள். RPF இனர் 1990ம் ஆண்டு ரவாண்டாவுக்குள் பிரவேசித்து அரசுக்கெதிரான தாக்குதல்களை ஆரம்பித்தனர். கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் இரு தரப்பினர்க்குமிடையே மேற்கொள்ளப்பட்ட சமாதான ஒப்பந்தம் ஒன்றின் மூலம் கடந்த மூன்றுவருட காலமாக ரவாண்டாவில் நடந்து வந்த உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்படக்கூடிய சாத்தியம் ஏற்பட்டது. அமெரிக்க மனித உரிமைகள் அமைப்பு ஒன்றின் அறிக்கையின்படி இந்த உள்நாட்டு யுத்த காலகட்டத்தில் சிறிய நாடாகிய ரவாண்டா பிரான்ஸ், எகிப்து தென் ஆபிரிக்கா ஐ.நா சபை ஆகியவற்றுடன் பெல்ஜியம் இராணுவ ரீதியாக ரவாண்டாவினுள் பிரவேசிப்பது பற்றியும் கிகாலி விமான நிலையத்தைக்கைப்பற்றி தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது பற்றியும் பேசிவருகிறது. அதேசமயம் ரவாண்டாவிலுள்ள பெல்ஜிய அதிரடிப்படையினரும் அருகில் மத்திய ஆபிரிக்க குடியரசுளிலுள்ள 8000 பிரெஞ்சுத் துருப்புக்களும் தயார்நிலையிலே உள்ளனர். ஆனால் வெளிநாடுகளின் எந்த ராணுவத் தலையீடும் ராணுவ ரீதியாக எதிர் கொள்ளப்படும் என ரவாண்டா ராணுவம் அறிவித்துள்ளது.

இனப்பிரச்சனைகளுக்கான தீர்வுகள் காணப்படாமல் காலம் தள்ளப்படுவது எத்தகைய மோசமான நிலையை ஏற்படுத்தும் என்பதற்கு இன்றைய உதாரணம் ரவாண்டா

## ஒரு கிழவியின் கதை..

தட்டினேன். சோம்பல் முறித்து எழும்பினாள்...

'என்னை கேள்விக் குறியுடன் பார்த்தாள்

'ஏன் கிழவி ஏதும் அட்டகாசம் பண்ணுதா"? என கேட்டாள்.

'செத்துப்போயிட்டாங்க" என்றேன். அக்கா துள்ளி எழுந்தாள். ஓடி வந்து கிழவியின் அறைக்குள் வேகமாய் நுழைந்தாள்..... அப்படியே மாமி என கால்களில் முகம் புதைத்து அழுதாள்.. ... மகன் வந்து சோகமே உருவாக கணகள கலஙக நினருா. போன மூலம செய்தி பரவ மகன்மார்களும் மருமகள்களும் ஓடிவந்தனர்.

"மாமி, மாமி, மாமி, என ஒவ்வொருவரையும் கட்டிப்பிடித்து அழுதனர்.

அழுகை நிறைந்த அந்த வீட்டில் இவர்களது கண்ணீர் துளிகள் எங்கும் சிதறின. உறவினர்கள் வந்ததும் இன்னும் அழுதார்கள்.... நான் அழவேயில்லை.

உறவினர்கள் எல்லாம் பிரிந்து போனார்கள், பிணம் கிழவியின் சொந்த வீட்டில் அலங்காரங்களுடன் முன் விருந்தாவில் வைக்கப்பட்டிருந்தது.

நள்ளிரவு இவர்கள் விழித்திருந்தார்கள்.... அமைதியான சூழ்நிலையில் மகன்மாரையும், மகள்மாரையும் தவிர வேறு உறவினர்கள் யாருமில்லை. வீடுகளையும், காணிகளையும் யார் பெயருக்கு அம்மா எழுதிவைத்திருக்கின்றார் என பேசிக்கொண்டார்கள்... ஒரு மகன் எழுந்து 'உங்களுக்கெல்லாம் இப்போ சொத்தும் வீடும் தான் கேட்குதோ! என் அம்மா செத்துப்போயிட்டாங்க.. அந்த பிணம் வெளிய இருக்கு, நீங்க எல்லாம் மனுசர்களோ" என கத்தி அழுதான். அவனது சத்தத்திற்கு பின் விஸ்கி மணம் மூக்கை துளைத்துச் சென்றது.... மற்றவர்கள் மௌனமானார்கள்.....

அதிகாலையில் அக்கா கேட்டாள்

'நீ ஏன் அழவில்லை "

'எனக்கு அழுகை வரவில்லை" என்றேன்.

கிழவியின் பிணத்தை எரித்து விட்டு வந்தார்கள். நாட்கள் உருண்டோடின. '... கிழவி பாவித்த கட்டில், கதிரை, போர்வை எல்லாவற்றையும்கொண்டு போய் 'லிப்ட் அருகே வை" என்றாள் அக்கா நானும் இரவோடு இரவாக எல்லாவற்றையும் கொண்டு போய் லிப்ட் அருகே வைத்தேன்.

அதிகாலை நான் வேலைக்கு போகும் போது ஒரு சீனன் அந்த கட்டிலை தொட்டு தொட்டு பார்த்துக் கொண்டிருந்தான்... யாரோ புதிய கட்டில் வாங்கிவிட்டு இதை வீசிவிட்டார்கள் என! இதை இவன் இன்னும் கொஞ்ச நேரத்தில் எடுத்துக் கொண்டு போய்விடுவான். கிழவியினுடையது என்பது இவனுக்கு தெரியவா போகின்றது. சீனர் வீசியதை சில தமிழர்கள் எடுப்பார்கள், தமிழர்கள் வீசுவதை சீனர்கள் எடுக்கின்றார்கள் எத்துணை ஒற்றுமை என எண்ணிக்கொண்டேன். பல இரவுகள் பகலை விரட்டி அடித்த பின் ஒரு நாள்..

இன்று பெரும் கூட்டம் கிழவிக்கு முப்பது செய்கின்றார்கள்... உறவினர்கள் நண்பர்கள்..... கூட்டமாய் வகைவகையான சாப்பாடு. . கிழவிக்கு பிடித்த சாப்பாடெல்லாம் ஒரு இலையில் படைத்திருந்தார்கள்.... கிழவியின் உயரத்திற்கு அவள் இளமையாக இருக்கும் போது எடுத்த ஒரு முழு அளவில் படம்.... சாம்பிராணி புகை வீட்டை நிறைத்துக்கொண்டிருந்தது.

இவர்களை வேகமாக அக்கா உபசரித்துக் கொண்டிருந்தாள், நானும் தான்... எனக்கு கிழவியின் படத்தை பார்க்கும் போதெல்லாம் கிழவி நிர்வாணமாய் நின்று அழுது கொண்டிருந்ததே.. அந்த நினைவுதான் வந்தது... கிழவிக்கு விருப்பமான சாப்பாடெல்லாம் அப்போது செய்து கொடுக்கப்படாமல் இப்போது படத்துக்கு முன்னால் ஏன் படைக்கப்பட்டிருக்கின்றது என யோசித்தேன்..... கிழவி வாந்தியெடுத்தபோது இவர்கள் எல்லாம் எங்கோ ஓடிப்போனார்கள்.... கிழவியை குளிப்பாட்டுவதற்கு வராத இவர்கள் கிழவி இறந்ததும் கிழவியை எப்படியெல்லாம் நீராட்டினார்கள்.... மீண்டும் அதேகுப்பை வண்டி..... அந்த இந்தியர்கள் ... அந்த கார் கழுவும் கிழவர், அந்த இரவுராணிகள், இந்த கிழவி, இவர்கள் தான் அடிக்கடி என் மனதில் வந்து போனார்கள்...... எல்லோரும் ஒரு நாள் செத்துப் போகப்போகின்றோம் அதற்குள் தான் எத்தனை விதமான வாழ்க்கை...... நான் கிழவியாய் போகவே கூடாது கடவுளே...... என மனம் வேண்டிக்கொள்ளும். ✪



தமிழத் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழம் ஒரு தொடர்கதை 2 (21)

1983ம் ஆண்டுக் கலவரம் கட்டுக்கடங்காத வன்முறைகளுடன் நடந்துகொண்டிருந்த வேளை ரேவின் கொழும்பு நிலையத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்த மத்தியூ ஏப்ரகாம் என்ற சிரேஷ்ட உளவு நிபுணர் காலி வீதி வழியாகத் தனது காரிலே பயணம் செய்து கலவரத்தின் உண்மையான முகங்கள் பற்றிய அறிக்கைகளைத் தயாரித்துப் புதுடெல்லிக்கு அனுப்பும் நோக்குடன் தெருவின் இரு மருங்குகளையும் பார்த்த வண்ணம் முன்னேறிக் கொண்டிருந்தார். திடீரென உணர்ச்சி மேலிட்ட ஒரு குண்டர் குழாம் மத்தியூவின் காரை குறுக்கிட்டு நிற்பாட்டி காரிலிருந்து இறக்கி ஒரு தமிழன் என்ற எண்ணத்தில் நையப்புடைத்தனர்.

மத்தியூ தான் ஒரு இலங்கைத் தமிழனல்ல என உரத்துக் கத்தித் தான் ஒரு இந்தியன் என கூறியதும் குண்டர் குழு இன்னும் ஆக்ரோஷம் கொண்டு தாக்கியுள்ளது. கார் தலைகீழாக்கப்பட்டு தீ வைக்கப்பட்டது. அதிர்ஷ்டவசமாக மத்தியூவுக்கு உயிராபத்தின்றி கடுங்காயங்களுடன வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சுகமானார். ஆனால் இச்சம்பவத்தினால் மனமுடைந்து பெரிதும் பாதிப்புக்குள்ளான மத்தியூ எதிர்வரப்போகும் காலங்களில் ஜே. ஆர் அரசுக்கும், சிங்கள காடையருக்கும் ஒரு செம்மையான பாடம் படிப்பிக்கும் எண்ணத்தை தனக்குள்ளே வளர்த்துக் கொண்டிருந்தார்.

தான் தாக்கப்பட்டது தொடக்கம், கலவரத்தின் தன்மைகள் பற்றிய பல அறிக்கைகள் வரை மத்தியூவினால் தயாரிக்கப்பட்டு டெல்லிக்கு அனுப்பப்பட்டன. மத்தியூ ஒரு தென்னிந்தியராயிருந்ததுடன் இலங்கை பற்றிய சிறப்பு நிபுணத்துவம் கொண்ட சிரேஷ்ட உளவாளியாக இருந்தார். இதனால் கொழும்பு நிலைமைகள் பற்றி கடுமையான அறிக்கைகளை புதுடெல்லிக்கு அனுப்பினார். இதே நேரத்தில் இலங்கை இராணுவத்தில் இருந்த ஒரு தமிழ் உயர் அதிகாரி ரேவுடன் மிக இரகசிய தொடர்புகளை வைத்திருந்ததுடன் ரேவின் சம்பளத்தையும் பெற்றுக் கொண்டு இலங்கை இராணுவத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி ரேவுக்கு தகவல் வழங்கி வந்தார். மத்தியூவுக்கு முன்பு கடமையாற்றிய ரேமேஸ் சண்முகம் கொழும்பு இந்திய தூதுவராலயத்தில் ஒரு ராஜதந்திரிபோல் கடமையாற்றியவர் இவர் முதல் செயலர் (First Secretary) ஆக 1982களில் இருந்தவர் என்பது ஞாபகத்தில் உள்ளது இவருக்கும் தமிழ் இராணுவ அதிகாரிக்கும் தொடர்பு இருந்தது. 1983 கலவரத்துடன் புது டெல்கியிலுள்ள "ரே" தலைமையத்திற்கு மாற்றப்பட்டு இருந்தபோதும் இவர் இலங்கை இராணுவத்திலுள்ள அதிகாரியின் நட்பைத் தொடர்ந்து கொண்டே இலங்கை பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொண்டார். இதிலே இலங்கை இராணுவத்தின் எதிர்காலத்திட்டங்கள், அமெரிக்க, இஸ்ரேலிய இராணுவ உதவிகள் பற்றிய விபரங்கள் இலங்கையின் சீன, பாகிஸ்தானிய உறவுகள், வொய்ஸ் ஒப் அமெரிக்கா, திருமலை துறைமுகம், எண்ணெய் குதம் என்பன அடங்கும்.

திரு. சண்முகத்துக்கும் இராணுவ அதிகாரிக்குமான தொடர்புகள் சிறிது தெரியவரவே இராணுவ அதிகாரி கட்டாய லீவில் அனுப்பப்பட்டார். சண்முகம் தமிழ் இளைஞர்களின் ஆயுதப்பயிற்சிக்கான இரகசியப்பிரிவுக்குப் பொறுப்பாகவும் சிறிலங்கா நடவடிக்கைகளுக்கு பொறுப்பாகவும் நியமிக்கப்பட்டார். முதலில் விரல் விட்டு எண்ணக்கூடிய தமிழ் இளைஞர்களுக்கு வெளியாரின் கடற்படைக் கப்பல்களை அடையாளம் காணவும் அவைகளின் நடவடிக்கைகளைக் கண்காணித்து இரகசியக் குறியீட்டு சமிக்ஞைகள் மூலம் இந்திய கடற்படைக்கு அறிவிப்பதற்கான பயிற்சிகள் சண்முகத்தின் கட்டளையால் வழங்கப்பட்டது. இது ஒருதகுதிகாண் நடவடிக்கையாக இருந்திருக்கமுடியும்.

1983 கலவரத்தினைத் தொடர்ந்து அக்டோபரில் ஆர்.என். காவ், சங்கரன், நாயர், கிரிஷ் சாதிர சக்ஷேனா (தலைவர் ரே) இன்னும் ரேவின் அதி உயர் உளவு நிபுணர்கள், வெளியுறவு அதிகாரிகள், பார்த்தசாரதி ஆகியோர் கூடி "இலங்கை நடவடிக்கை" பற்றி விவாதித்தனர். இங்கு எடுக்கப்பட்ட முடிவுகளின் படி இருவித நடவடிக்கைகளுக்கு தயாரிப்புச் செய்யப்பட்டது. ஒன்று இரகசிய இராணுவ நடவடிக்கை, மற்றது பகிரங்க அரசியல் நடவடிக்கை என்பன அவை.

இரகசிய இராணுவ நடவடிக்கை என்பது "ரே" விலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட விஷேட உளவு நிபுணர்களைக் கொண்ட "மூன்றாவது முகவர்" மூலம் கையாள முடிவெடுக்கப்பட்டது. தென்னிந்தியாவின் கடல், தரை, ஆகாய பாதுகாப்பை பலப்படுத்துதல் பாதுகாப்பு அமைச்சிடம் விடப்பட்டது. பகிரங்க அரசியல் நடவடிக்கை என்பது பிரதமர் செயலகமும், வெளிவிவகார அமைச்சும் கவனிப்பதாக முடிவானது.

"தெற்கில் பாதுகாப்பைப் பலப்படுத்துதல் என்ற திட்டத்துக்கமையத்தான் 1984 யூலையில் இந்திராகாந்தி திருவனந்தபுரத்தில் (கேரளா) "Southern Air Command" என்ற தென்பிராந்திய ஆகாயக் கட்டுப்பாட்டு நிலையத்தை திறந்து வைத்தார். இது திறக்கப்பட்டபோது நான் யாழ்ப்பாணத்தில் தான் வசித்தேன். மக்கள் பின்வருமாறு பேசிக்கொண்டதை செவி மடுத்தேன். "இனிஎன்ன? இந்திராகாந்தி ஆகாயப் படையையும் தெற்கிலே பெருப்பிக்கிறார், நிச்சயம் இலங்கைக்கு அடி நடக்கப் போகுது. நல்ல விடயம்" அது அவர்களின் அபிலாசைகளின் வெளிப்பாடு மட்டுமே.

ஆனால் அதேநேரத்தில் "தவீக் இந்தியா" சஞ்சிகையில் (டிசெம்பர் 14. 1986) ல் ஆர். பிரசன்னன் என்ற எழுத்தாளர் பின்வருமாறு கூறுகிறார். "பிரதம கமாண்டர் தென்பிராந்தியம் வைஸ் அடமிரல் ஹிராநந்தினியுடன் பேசியபோது கூறினார் தென்பிராந்தியக் கட்டுப்பாட்டு நிலையத்தின் முக்கியத்துவம் வளர்ந்து வருகிறது. விஷேடமாகக் கடந்த பத்து

**சின்னத்தம்பி வேலாயுதம்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வருடமாக எமது தேசத்தின் பெயராலுள்ள சமுத்திரமான 'இந்து' சமுத்திரம் உலக மேலாதிக்க வல்லரசுகளின் ஒரு விளையாட்டரங்காக மாறி வருகிறது. சுதந்திர இந்தியாவின் யுத்தங்களெல்லாம் வடக்கின் நில எல்லைகளில் நடந்திருக்கலாம். ஆனால் எங்களை அடிமைப்படுத்திய வெளி உலகத்தார் சமுத்திர வழியாக வந்துதான் எம்மை அடிமை கொண்டனர்" என்கிறார்.

இந்த உண்மை இந்தியாவுக்கல்ல, இலங்கை போன்ற அண்டை நாடுகளுக்கும் பொருத்தமானதே எமது உள்முரண்பாடுகளை ஒரு வரையறைக்குள் வைத்துக் கொண்டு மேலாதிக்க சக்திகள் பற்றி எச்சரிக்கையாக இருப்பது மிக முக்கியமான அரசியல் அணுகுமுறையாகும்.

ரோ இளைஞர்களுக்குப் பயிற்சியளித்தபோதும் ஆயுதங்களைக் கையாள அனுமதிப்பதில் ஆரம்பத்தில் பின்னடித்தது. அரசியல் தீர்வை முக்கியப்படுத்துமாறு கேட்டுக் கொண்டது. அதன் அடிப்படையில் C இணைப்பு ஒரு புறத்தில் விவாதிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. மறுபுறத்தில் ரோ நிலைமைக்கேற்ப தமது நடவடிக்கையைத் தொடர்ந்தனர்.

இந்திராவின் மரணம் வரை இலங்கை பற்றிய இராணுவ நடிவடிக்கை ஒரு மிக இரகசிய நடவடிக்கையாக இருந்தது. பிரதமர் செயலகத்தில் ஆகக் கூடியது ஆறு பேருக்கும், இன்னும் பத்துப்பேர் ரோவிலும் அமைச்சர் மட்டங்களிலுமாக 16 பேருக்கே விடயங்கள் தெரிந்திருந்தன. அதுவும் "Need to know" அடிப்படையில் தான் ஒருவர் மற்றவருக்கு விடயங்களை பரிமாறும் மிக இறுக்கமான இரகசியம் பாதுகாக்கப்பட்டது.

தமிழ் இளைஞர்களின் பயிற்சி முகாம்கள் தமிழ் நாட்டில் சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. திமுக அதிமுக வின் உதவிகள் தான் இங்கு முக்கியமாகும். ரோ பூரணமான உதவி வழங்கத் தொடங்கவில்லை

"சீ" இணைப்பை விவாதித்துவிட்டு சிங்கள இனவாதிகளின் கூச்சலுக்குப் பணிந்த ஜே.ஆர் பின்வாங்கியதும் இந்திரா காந்தி பாதுகாப்பு ஆலோசகர் ஆர்.என்.காவ் அவர்களுக்கு கூறினாராம். "பங்களாதேஷ் நடவடிக்கைகளின் வெற்றியை சிறீலங்காவிலும் காணவேண்டும்." என. ஆனால் "ரோ" மாறான நிலைப்பாட்டை கொண்டிருந்ததால் அவ்வித நடவடிக்கையின் பாதகமான அம்சங்களை இந்திராவின் கவனத்துக்குக் கொண்டு வந்து திசை திருப்பியிருக்க வேண்டும்.

எனினும் "சீ" இணைப்பின் தோல்வி இந்தியாவின் "பகிரங்க அரசியல் தீர்வு" நடவடிக்கையின் தோல்வியாக மாறியபோது மாற்றீடான "இராணுவ இரகசிய" நடவடிக்கை 1983 கலவரத்துக்கு முன் 200 தொடக்கம் 300 வரையான போராளிகளைக் கொண்டிருந்த தமிழ் போராளிகள் இயக்கம் 1983 ஆடி கலவரத்தின் பின் ஆயிரக்கணக்கான இளைஞர்களை இணைத்துக் கொண்டு பல இயக்கங்களாகப் பெருகின. இதுபற்றிப் பின்னர் பார்ப்போம்.

தமிழக உதவிகளை அனுமதித்த "ரோ" தேவைக்கேற்ப இளைஞர்களை பயன்படுத்தவும், கட்டுப்படுத்தவும், (இங்கு தமிழகக் கட்சிகள், ரோ இரண்டுமே தேவைக்குப் பயன்படுத்துதல், கட்டுப்படுத்துதல் என்பவற்றில் ஒரு முகமாகவும், வித்தியாசமான தேவைகளை கொண்டிருந்தன என்று குறிப்பிடத்தக்கது) இராணுவ அழுத்தம் ஒன்றை இளைஞர்கள் மூலம் இலங்கை இராணுவத்துக்கு ஏற்படுத்தி அடிபணியச் செய்யவும் டெல்லி தமிழக உறவுகளை வளம்படுத்திக் கொள்ளவும், மேலும் அமெரிக்க, சீன பாகிஸ்தானிய இஸ்ரேலிய இராணுவ உதவிகளுடன் போரிடும் ஸ்ரீ லங்கா இராணுவம் தமிழ் இளைஞர்களை திடீரென வெற்றி கொள்ள முடியாத அளவுக்கான உதவிகளை வழங்குவதன் மூலம் தனது பிரசன்னத்துக்கான சந்தர்ப்பத்தை தக்க வைத்துக் கொள்ளவும் நடவடிக்கைகளில் இறங்கியது.

தொடரும்

# ரசனைக்காதலி

**சிதம்பரம்நா.வடிவேலனார்**

பூதாக்காரம் முடிந்தது: இனி பாலான விசயங்களை கதைத்துக் கொண்டு இரவின் முதல் அனுவத்தை ரசிக்க வேண்டியதுதானே! நான் படுக்கையறையை நோக்கி செல்ல பின்னோக்கி வந்தாள் அந்தப் பூங்கொடி. நின்றேன்: அவளும் நின்றாள். முன்னோக்கி செல்லென்றேன் சென்றாள். நடையை ரசித்தேன் அன்னத்துக்கு தமயந்தி சொல்லிக் கொடுத்த அதே நடை. அன்னமும் தமயந்தியும் நடையை இனி இவளிடம் தான் பழக வேண்டும். அந்தமாதிரி நடை. கதவைத் திறந்து உள்ளே சென்று கட்டிலின் அருகில் நின்றாள். நான் அவளின் மென்தோளைப் பிடித்தேன். எச்சில் இல்லா வாயை மிண்டி விழுங்கினாள். வெறும் காத்துத்தான் உள்ளே போய் குமிழ் முக்கால் வெளியே வந்ததை அவளின் வெக்கை மூச்சு என் மார்பில் [illegible] நான் அறிந்து அவளை அணைத்தேன். சிவந்தாள், செக்கச் சிவேல் என்று மாறினாள். நல்ல குணம்.. நாற்குணமும் இருந்தது. சீலையின் முகத்தலைப்பை பிடித்தேன். கொங்கைகள் கிரௌஞ்ச மலை. முருகக் கடவுள் கிரௌஞ்ச மலையை பெயர்த்ததாக எங்கோ படித்த ஞாபகம். நான் முருகனானேன். உடனே அவள் கேவிக்கேவி அழத் தொடங்கினாள் என்மடியில் முகம் புதைத்தாள் ஆருக கண்ணீர் சொரிந்து நின்றாள். நான் வியர்த்து விறு விறுத்து என்னென்று வினா தொடுத்தேன். அவள் விம்மலுக்கும் விசும்பலுக்குமிடையில் விலக்கு தனக்கென்று வெடித்தழுதாள். உடனே விளக்கை அணைத்து விட்டு கட்டிலில் சரிந்தேன். அவள் குளியல் அறையை நோக்கிச் சென்றாள். பாட்டி குரல் எடுத்துச் சொன்னாள் "தங்கைச்சி தோயாதே, தரிக்காது. சன்னி காணும் கவனம்" என்றாள்

(யாவும் கற்பனையே)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மகாவலியில் மனிதப் படுகொலை

## யுக்திய ஏப்பிரல் 03,1994
## ஆசிரியர் தலையங்கம்

தொடர்ந்தும் தொடர்ந்தும் கமச்செய்கை நாசமடைந்ததால் பட்ட கடனைத் திருப்பி அடைக்க முடியாத பொலன்னறுவை பிரதேசத்து மகாவலி விவசாயிகள் தற்கொலை செய்துகொண்டிருக்கும் போது பிரதமர் ரனில் விக்கிரமசிங்க அவர்கள் கோடிக்கணக்கில் செலவான இன்னுமொரு களியாட்டமாகிய மகாவலி விவசாயிகள் வாரத்தை திறந்து வைத்தார்.

இவ் இரு சம்பவங்களும் மகாவலியின் யதார்த்தத்தை எடுத்துக்காட்டுகின்றன. ஆனால் அரசியல்வாதிகளுக்கு மகாவலி என்பது செல்வ ஊற்றும் களியாட்டமும் ஆகும். அல்லலுறும் விவசாய மக்களுக்கு மரணமாகும்.

கடந்த வருட இறுதியில் மீண்டும் மீண்டும் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக கமப் பயிர்ச் செய்கை அழிவுற்ற பொலன்னறுவை விவசாயிகள் இன்றைக்கு இரண்டு மாதத்திற்கு முன்னர் தமது துயரங்களையிட்டு மகாவலி அமைச்சருக்கு முறைப்பாடு செய்வதற்காக திறந்த லொறி மூலம் இரவோடு இரவாக பயணம் செய்து கொழும்புக்கு வந்தனர். அழிவுற்ற விவசாயத்துக்கு ஏதாவது நடவடிக்கை எடுக்குமாறு அவர்கள் விடுத்த தாழ்மையான வேண்டுகோள் கூட மகாவலி அமைச்சர் காமினி அத்துகோரலையின் செவிக்குள் விழச் செய்வதற்காக அவ் விவசாயிகள் கொழும்பிலும் மிகுந்த சிரமங்களுக்குள்ளாகினர். அமைச்சர் அவர்களும் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி அளித்தார்.

ஆனால் அரசியல்வாதிகளின் தேர்தல் வாக்குறுதிகளைப் போன்று இவ் வாக்குறுதியும் தானகவே காற்றோடு அடிபட்டுச்சென்றுவிட்டது.

வெள்ளத்தால் பாதிக்கப் பட்டது போதாது என தற்போது நெற்செய்கையின் ஈடுபடும் விவசாயிகள் நெல் விற்பனை செய்வதிலும் கஷ்டத்துக்கு ள்ளாகியுள்ளனர். தனிப்பட்ட வியாபாரிகள் ஒரு கிலோ நெல்லுக்கு ரூபா 6 க்கு மேல் வழங்குவதில்லை அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட விலை ரூபா 7.50 ஆகும். நெல் வாங்க தம்மிடம் பணம் இல்லை என்று சந்தைப்படுத்தும் சபை கூறுகிறது. ஆனால் அரசாங்க வங்கிகள் கூட நெல் கொள்வனவு செய்வதற்காக தனிப்பட்ட வியாபாரிகளுக்கே கடன் வழங்குகின்றன. நெல்லின் கொள்வளவு விலையை குறைவாக வைத்திருக்கவேண்டும் என்பதற்காக அரிசி வியாபாரிகள் திட்டமிட்டுச் செய்யும் இக் கபடத் தனத்தின் முன்னால் நாடு பூராவும் உள்ள விவசாயிகள் செய்வதறியாது திகைக்கின்றனர்.

பொலன்னறுவை விவசாய மக்களைப் பொறுத்தவரையில் இது மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்ததற்குச் சமமாகும். மகாவலி களியாட்டத்திற்கு செலவு செய்யப்பட்ட கோடிக்கணக்கான பணத்தை பாவித்து ஆகக் குறைந்தது

**ஆனால் அரசியல்வாதிகளுக்கு மகாவலி என்பது செல்வ ஊற்றும் களியாட்டமும் ஆகும். அல்லலுறும் விவசாய மக்களுக்கு மரணமாகும்.**

நெல்சந்தைப்படுத்தும் சபை மூலமாக அங்கீகரிக்கப்பட்ட விலைக்கு நெல் கொள்வளவு செய்யப்பட்டிருந்தால் இவ் விவசாயிகளுக்கு ஓரளவு நிவாரணம் ஆவது கிடைத்திருக்கும். அல்லது போனால் அப்பணத்தை பாவித்து விவசாயிகள் கடன் பழுவையாவது அறவிடாமல் விட்டிருக்கலாம்.

விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வதற்கான பிரதான காரணம் விவசாயக் கடனை திருப்பி அடைக்க முடியாதது தான் அல்ல, கடனைத் திருப்பி அடைக்க முடியாவிடில் சிறை செல்ல நேரிடும் என்ற பயமேயாகும்.

இன்றைக்கு இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்னர் தற்கொலை செய்து கொண்ட B.G.ஹவடியா என்பவரது கதை இதற்கு நல்லதோர் உதாரணமாகும். பொலன்னறுவை மாவட்டத்தில் பராக்கிரம சமுத்திர திட்டத்தின் கீழ் உள்ள ஒனேகம ட்ரக் 16 ல் இவருக்கு 1948ம் ஆண்டு காணி வழங்கப்பட்டது. கமச்செய்கைக்காக பெற்ற கடனை திருப்பி அடைக்கவில்லை என்பதற்காக 1987 ல் இவர் சிறையிலிடப்பட்டார். அடுத்த போக விளைச்சலின் பின்னர் கடனை அடைப்பது என்னும் வாக்குறுதியில் இவர் விடுதலை செய்யப்பட்டார். ஆனால் அடுத்த போக பயிர்ச்செய்கையும் விளைச்சல் பாழாகியது. மீண்டும் சிறை செய்வதற்கு பயந்த அப்பொழுது 71 வயதாகவிருந்த ஹவடியா வயலிலேயே நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

B.G குணபால அவருடைய மகனாகும். காணியின் இரண்டாவது உரிமைக்காரனான கிராமத்தில் சமூக சேவைகளில் ஈடுபடும் விவசாயியாவார். 1993ல் ஏற்பட்ட வெள்ளத்தினால் இவருடைய பயிர்செய்கையும் அழிவுற்றது. பயிர் செய்கைக்கு பெற்ற கடன் அதிகரித்தது. தந்தையைப் போன்றே தனக்கும் சிறை செல்ல நேரிடலாம் என்னும் பயத்தினாலும் அவமானத தாலும் பீடிக்கப்பட்டிருந்தார். 1994 பெப்ரவரி மாதம் தனது தந்தை சென்ற அடிப்பாதையிலே சென்று குணபாலாவும் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

இவ் வேதனைக்குரிய கதைகளை மகாவலி களியாட்டத்தில் ஈடுபட்டுள்ள அமைச்சர்களின் சுகபோகவாழ்க்கையுடன் ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாதா?

1977 ல் பதவிக்கு வந்த இன்றைய அரசாங்கத்தின் கமத்தொழில் தொடர்பான கொள்கை முற்றுமுழுதாக சிறிய விவசாயிகளை அழித்து இடை நடு வியாபார வர்க்கத்தை உடமையாளர் களாக்குவதும் அதன்பின்னர் அவ் உடமையாளர்களது கூலிக் காரர்களாக இச்சிறுவிவசாயிகளை மாற்றுவதை நோக்கமாகக் கொண்டதாகும்.

மகாவலியின் உண்மையான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நீசத்தனமான அரசியலை தோற்கடிப்போம்

## ராவய 1994 ஏப்பிரல் 03 இதழின் ஆசிரியர் தலையங்கம்

**ஆட்சியில் மாற்றம் வேண்டும் என்பதைக் காட்டக் கூடியவாறு பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு வாக்களித்து ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியை மண் கவ்வச் செய்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சி ஜனநாயக ரீதியான அரசியல் இயக்கமாக இருந்திருந்தால் மக்களால் வழங்கப்பட்ட அத்தீர்ப்பை தாழ்மையுடன் ஏற்றுக்கொண்டு தமது தவறுகளைத் திருத்தும் நடவடிக்கைகளில் விரைவாக ஈடுபட்டிருக்கும்.**

தென் மாகாண மக்கள் தெட்டத் தெளிவாக வழங்கியுள்ள தீர்ப்பை ஏற்றுக் கொள்வதற்கு அரசாங்க கட்சியைச் சார்ந்த ஒரு சில தான்தோன்றித்தனமான அரசியல்வாதிகள் தயாராக இல்லை என்பதை அவர்களால் தெற்கில் மேற்கொள்ளப்படும் நீசத்தனமான செயல்களில் இருந்து காணக்கூடியதாக உள்ளது.

தேர்தல்களின்போது பொதுமக்களால் வழங்கப்படும் தீர்ப்பை ஏற்றுக் கொள்வதற்கு அரசியல்வாதிகள் தயாராக இல்லையாயின் தேர்தல் நடாத்துவதில் எவ்வித அர்த்தமும் இருக்கமுடியாது. தென் மாகாணசபைத் தேர்தலின்போது தென்பகுதி மக்கள் ஆட்சியாளரின் அச்சுறுத்தல்கள் அழுத்தங்களைக் கூட கவனத்தில் கொள்ளாமல், ஆட்சியில் மாற்றம் வேண்டும் என்பதைக் காட்டக் கூடியவாறு பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு வாக்களித்து ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியை மண் கவ்வச் செய்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சி ஜனநாயக ரீதியான அரசியல் இயக்கமாக இருந்திருந்தால் மக்களால் வழங்கப்பட்ட அத்தீர்ப்பை தாழ்மையுடன் ஏற்றுக்கொண்டு தமது தவறுகளைத் திருத்தும் நடவடிக்கைகளில் விரைவாக ஈடுபட்டிருக்கும். ஆனால் அதற்குப் பதிலாக றூபா கருணாதிலக, தயானந்த விக்கிரமசிங்க, எச்.ஆர்.பியசிறி உபாலி அமரசிறி போன்ற பிரதேசத்தில் அதிகாரமுள்ளவர்கள் ஆட்சி அதிகாரத்தை ஆயுதமாகப் பாவித்து பொலீஸ் அதிகாரிகள் சிலருடைய உதவியுடன் தம்மை தோற்கடித்த மக்களின் முன்வரிசை பிரதிநிதிகளைத் தாக்கும் நீசத்தனமான கொள்கையினைக் கடைப்பிடிப்பது தெளிவாகத் தெரிகிறது.

கிடைத்து வரும் செய்திகளின்படி அவ்வாறான தாக்குதல் சம்பவங்களின் எண்ணிக்கை விசாலமானதோடு அவை மிகவும் மனிதத் தன்மையற்றதும் அருவருப்பானதாகவும் உள்ளது என கூறவேண்டியுள்ளது. வலஸ்முல்ல என்னும் பிரதேசத்தின் ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதேச பலசாலி குண்டர் குழு ஒன்றுடன் பொது முன்னணியின் ஆதரவாளர் ஒருவருடைய வீட்டுக்குச் சென்றதோடு அவ்வேளை வீட்டுத் தலைவன் வீட்டில் இல்லாததால் அவருடைய மனைவியின் மூன்று விரல்களை வெட்டியதாக அறிய முடிகிறது. எல்பிட்டிய பிரதேசத்தில் ஓமத்தே என்னும் இடத்திலுள்ள வீடொன்றுக்குள் திடீரெனப் பாய்ந்த பெருந்தோட்ட அமைச்சர் றூபா கருணாதிலக அவ்வீட்டுக்காரரான கே.டி. பியதாச என்பவரைத் தாக்கும்போது பியதாசவின் சகோதரன் அமைச்சரை நோக்கி கோடரி குறிவைத்துள்ளான். கோடரி தாக்குதலில் இருந்து அமைச்சர் நூலிழையிலேயே உயிர் தப்பியுள்ளார். மக்களால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு மாறாக ஆட்சி அதிகாரத்தை ஆயுதமாகப் பாவித்து பலாத்கார நடவடிக்கைகளில் ஈடுபட்ட அவ் அமைச்சர் கோடரித் தாக்குதலில் இருந்து தப்பித்துக்கொள்ளாமல் இருந்திருந்தால் அது அவரைப் போன்ற ஏனைய சகல அதர்ம அரசியல் வாதிகளுக்கும் நல்ல ஒரு பாடமாக அமைந்திருக்கும்.

பொலீஸ் சேவையைச் சார்ந்த அனேகமானோர் நடுநிலைமைக் கொள்கையை கடைப்பிடித்தபோதும் பொலீஸ் நிலைய அதிகாரிகள் இவ் அரசியல் காடைகளின் நேரடியாட்களாக செயல்படுகின்றனர். நீதிக்கு மாறாக செயல்படும் இப்பொலீஸ் அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டியது பொலீஸ் மா அதிபரின் கடமையும் பொறுப்புமாகும். அவர் தனது அக் கடமையையும் பொறுப்பையும் சரியான முறையில் நிறைவேற்றுகின்றாரா என பொதுமக்கள் அக்கறையுடன் நோக்குகின்றனர்.

தென்பகுதி மக்கள் இத்தேர்தலுக்கு மிகவும் சமாதான ரீதியாகவும் அடக்கமான முறையிலுமே முகங் கொடுத்தனர். வெளியிலிருந்து கொண்டு வரப்பட்ட குண்டர் கோஷ்டிகள் செயலிழக்கச் செய்யும்போதும் அவர்கள் எச்சந்தர்ப்பத்திலும் மட்டுமீறிச் செயல்படவில்லை. வெற்றியின்போதும் அவர்கள் எதிராளிகளை இம்சைப் படுத்தவில்லை.

தென்பகுதி மக்கள் காண்பித்த ஒழுக்கம் கட்டுப்பாடு சமாதானம் ஆகியவற்றை பயந்தாங்கொள்ளித்தனம் எனக் கணித்து இக் காடை அரசியல்வாதிகள் அவர்களைத் தாக்கும் கொள்கைகளை கடைப்பிடிப்பார்களாயின் பொலீஸ் அதிகாரிகளும் அவ்வாறான காடைத்தனத்தை அடக்க செயல்படாவிடின் மக்கள் தமது சக்தி மூலம் இத்தேர்தலை நீதியான தேர்தலாக மாற்றியவாறே தான்தோன்றித்தனமான நீச அரசியல்வாதிகளால் விடுக்கப்படும் சவால்களையும் வெற்றி கொள்ளுமுகமாக தெளிவான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டி வரும் என்பது சந்தேகத்துக்கு இடமற்றதாகும்.

*தமிழாக்கம்*
*செலோகநாதன்*

---

### மகாவலியில்...

அர்த்தம் இதுதான். இதிலிருந்து பார்க்கும்போது விவசாயிகளின் மரணம் ஆட்சியாளரின் மகிழ்ச்சிக்கு காரணமாக அமையும் என்பதில எவ்வித சந்தேகமும் இல்லை ஏனெனில் சிறுவிவசாயம் அழிவின் விளிம்புக்கே வந்துள்ளது என்பது இதிலிருந்து தெரிவதாலாகும்.

ஆட்சியாளருக்கும் ஆட்சிக்கு வர பார்த்துக் கொண்டிருப பவர்களுக்கு விளங்கக் கூடிய நல்லதொரு பாடத்தை இந்நாட்டு விவசாயிகள் படிப்பிப்பார்களாயின் மட்டுமே இந்நிலையை மாற்றமுடியும். இதைத்தவிர வேறு எந்தப் பாதையும் கிடையாது.

*தமிழாக்கம்:செலோகநாதன்*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஜே.வி.பி.யின் அரசியலின் சமூக பொருளாதார அரசியல் பின்னணி

ஜேவிபியின் நடவடிக்கைகளுக்கான தாக்கத்தை ஏற்படுத்திய சமூக காரணிகள்

மொழியை அடிப்படையாகக் கொண்டு கல்வியிலும் சமூக நடவடிக்கைகளிலும் அநீதிகள் இடம் பெற்றன. இது சமூகநீதியான இன்னுமோர் ஒடுக்கு முறைக்கும் இளம் சந்ததியினர் கிளர்ச்சியை நோக்கித் தள்ளப்படுவதற்கும் மேலும் ஒரு காரணியாக அமைந்தது.

மொழி எந்தவொரு வர்க்கத்துக்கும் சார்ந்தது அல்லாவிடினும் எமது போன்ற நாடுகளில் சமுதாயத்தில் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கத்தினரின் மொழியாக ஆங்கிலம் மாற்றப்பட்டுள்ளதால் அது ஏதோ ஒரு வகையான வர்க்க சுபாவத்தை கொண்டுள்ளது. ஆங்கிலம் சமுதாயத்தில் மிகப் பெரும்பாலோருக்கு தெரியாத மொழியாகவும் இருப்பதால் சிறப்புரிமை பெற்ற வர்க்கத்தினர் இதனை பொதுமக்களை அடக்குவதற்காகவும் தமது சிறப்புரிமைகளைப் பாதுகாக்கவுமான ஆயுதமாக பாவித்தனர். சிறிய தொகையினரான சிறப்புரிமை பெற்ற வர்க்கத்தினரையும் மிகப் பெருந்தொகையான சிறப்புரிமைகள் பறிக்கப்பட்டிருந்த வர்க்கத்தவர்களையும் பிரிக்கும் பெரும் மதிற்சுவராக ஆங்கிலம் மாறியிருந்தது.

இத் தடையைத் தகர்ப்பதும் 1956 ம் ஆண்டு எழுச்சியின் ஒரு கோஷமாக இருந்தது. ஆனாலும் அவ் எழுச்சியில் பங்கு கொண்ட சக்திகள் இன்னுமொரு சமூக ஒடுக்கு முறைக்கான கதவைத் திறந்து கொண்ட அப்பணியைச் செய்தன. இந் நாட்டின் சகல இனங்களுக்கும் புறம்பான மொழியான ஆங்கிலம் ஆட்சி மொழியாக செயல்படும் போது சுயமொழிகள் அடக்கப்பட்டதும் சுய மொழிகளில் கல்வி கற்றோர் இரண்டாம் தர பிரஜைகளாக கணிக்கப்பட்டதும் அதன் பெறுபேறுகளில் ஒன்றாகும். இது சிங்கள தமிழ் இருமொழிகளுக்கும் பொதுவானதாகும். ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருப்பதற்கு எதிராக கிளம்பிய திட்டவட்டமான கோஷம் சிங்களம் மட்டும் என்பதே. இதன்மூலம் தமிழ்மொழி இரண்டாம் இடத்திற்கு தள்ளப்பட்டது. தமிழ் மொழிக்கு பாரபட்சம் இழைத்த இச் செயலானது தமிழ் இனத்தவர்களுக்கு இனரீதியான பாரபட்சம் இழைக்கும் செயற்பாடுகளின் தீர்க்கமான கட்டமாக அமைந்தது. இன்று இடம்பெறும் இனப்பிரச்சனையுடன் தொடர்பான யுத்தத்திற்கு தீர்க்கமான காரணி இச் சிங்களம் மட்டும் என்பதாகும்.

சிங்கள மொழி ஆட்சி மொழியாக்கப்பட்டது என்பதற்காக அதற்கு எந்த ஆட்சியும் கிடைக்கவில்லை. வழமை போல் அரச நிறுவனங்களிலும் நீதி மன்றங்கள் போன்ற சகல இடங்களிலும் ஆங்கிலமே ஆட்சி செலுத்தியது. ஆங்கிலத்தால் மட்டுமன்றி சிங்களம் ஆட்சி மொழியாக்கப்பட்ட பின்னர் சிங்களத்தாலும் தமிழ் மொழி ஒடுக்கப்பட்டது. சிங்களத்தையும் தமிழையும் ஆட்சி மொழியாக்கி ஆங்கிலத்தை சர்வதேச மொழியாக பரவலடையச் செய்வதே செய்யப்பட்டிருக்க வேண்டியதாகும். ஆனால் நேர்ந்ததோ சிங்களத்தை மட்டும் ஆட்சி மொழியாக்கி நாடு பெரும் அழிவை ஏற்படுத்தும் யுத்தத்தை நோக்கி எடுத்துச் செல்ல வழிசமைக்கப்பட்டது.

சிங்களம் ஆட்சிமொழியாக்கப்பட்டு பல வருடங்கள் கழிந்த பின்னரும் சமுதாயத்தின் சகல துறைகளிலும் ஆதிக்கம் செலுத்தும் மொழியாக நிலவியதும் இன்னமும் நிலவுவதும் ஆங்கில மொழியேயாகும். ஆங்கிலத்தில் வேலை செய்ய முடியாத ஒருவருக்கு சமூகத்தில் இரண்டாம்தர கவனிப்பு அல்லது முக்கியத்துவம் அற்ற இடமே கிடைத்தது.

கல்வித் துறையை எடுத்துப்பார்த்தால் பல்கலைக் கழகங்களில் இன்னமும் பொறியியல் மருத்துவ பாடங்கள் பற்றிய விரிவுரைகள் நடைபெறுவதும் நூல் சஞ்சிகைகள் இருப்பதும் ஆங்கிலத்திலேயாகும். நாட்டின் சனத்தொகையில் 70% வீதமானோர் வாழ்கின்ற கிராமப்புறங்களில் உள்ள பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பிப்பது, இல்லை என்று சொல்லும் அளவிற்கே உள்ளது. கிராமப் புறங்களில் மட்டுமல்ல நகர்புறங்களிலும் பிரதான பாடசாலைகளைத் தவிர ஒடுக்கப்பட்ட வர்க்கத்தைச் சார்ந்த மக்கள் வாழும் பிரதேசங்களில் அவர்களின் பிள்ளைகள் செல்லும் பாடசாலைகளிலும் நிலமை இவ்வாறுதான். ஆங்கிலம் கற்கும் வசதிகள் நகர்ப்புறங்களில் பிரதானமாக உயர்வர்க்கத்தினரின் பாடசாலைகளில் மட்டுமேயாகும் உள்ளது.

ஆதலால் மருத்துவம் பொறியியல் துறைகளில் படிக்க விரும்பும் ஒருவர் நகர்ப் புறங்களில் உள்ள மேல் மட்ட பாடசாலைகளில் கல்வியைப் பெறவேண்டியது தவிர்க்க முடியாததாகும். ஆனால் இவ்வாய்ப்பு மிகச் சிறுதொகையினருக்கே கிடைக்கின்றது. கிராமப்புறங்களில் மட்டுமல்ல நகர்ப்புறங்களிலும் அனேக வறிய குடும்பங்களைச் சார்ந்த பிள்ளைகளுக்கு கலைத்துறைக் கல்வியுடன் தமது கல்வியை மட்டுப்படுத்த வேண்டியுள்ளது. விஞ்ஞானம், பொறியியல், மருத்துவம் ஆகிய துறைகளில் கல்வி கற்பதற்கு இவர்களுக்கு வாய்ப்புகள் இல்லை என்று கூறும் அளவே காணப்படுகிறது. இன்று ஆங்கிலம்

**வசந்த திசாநாயக, பற்றிக்பெர்னாண்டோ**
**சரத் த சில்வா, ரஞ்சித் குமார**

**தமிழாக்கம்; செ. லோகநாதன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்றி அரசாங்க நிறுவனங்களிலோ அல்லது தனியார் துறைகளிலோ பொறுப்பு வாய்ந்த மட்டத்து தொழில்கள் எதனையும் பெறமுடியாது. கீழ் மட்ட வர்க்கங்களில் ஆங்கிலம் கற்றவர்கள் இல்லை என்பது அல்ல அவ்வாறே தொழில்களைச் செய்யாமலும் அல்ல. ஆனால் இது பொதுவான நிலமை அல்ல. விசேடமான நிலமை மட்டுமேயாகும்.

ஆட்சியாளர் எதனைக் கூறினாலும் சரி கீழ்மட்ட வர்க்கத்தவர்களுக்கும் சிறப்புரிமைகள் பெற்ற வர்க்கத்தாருக்கும் இடையேயான வேறுபாட்டை தொடர்ந்தும் நிலவச் செய்வதற்காக ஆங்கிலத்தைப் பாவிப்பது அவர்களின் அவசியமாகும். ஆதலால் ஆங்கிலத்தின் சிறப்புரிமை பெற்றுள்ள சுபாவத்தை இல்லாதொழித்து அனைவருக்குமே பல்துறை அறிவை வழங்குவதற்காக ஆங்கிலம் கற்பிப்பதை பயன் அளிக்கக் கூடியவாறு விரிவுபடுத்துவதோ அல்லது போனால் ஜப்பான் நாட்டில் செய்வது போன்று அவ்வாறான அறிவை வழங்குவதற்காக தேவையான நூல்களை தாய்மொழிகளில் வெளியிடுவதற்கோ அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதில்லை. ஆதலால் பல்துறை அறிவைப் பெறும் ஆற்றல் ஆங்கிலம் கற்றவர்களுக்கு மட்டுமே உண்டு. அதுமட்டுமன்றி அவ் அறிவும் பிரதானமாக சிறப்புரிமை பெற்ற வர்க்கங்களுடன் மட்டுப்படுத்தப்படுகிறது. இது பாரதூரமான சமூக அநீதியாகும். நாட்டின் மிகப் பெரும் பாலோருக்கும் அவர்களது பிள்ளைகளுக்கும் அறிவைப் பெறும் வாய்ப்பை இல்லாதொழித்ததே இதன் மூலம் நேர்ந்ததாகும். சிங்களம் மட்டும் கற்றவர்கள் அல்லது தமிழ் மட்டும் கற்றவர்கள் இரண்டாம் வரிசை படிப்பாளிகளாக புத்திஜீவிகளாக மாறுதல் இதன் மூலம் கட்டாயப்படுத்தப்பட்டது.

தொழிலைத் தேடும் போதும், ஒட்டுமொத்தமான சமூக நடவடிக்கைகளிலும் இவர்களுக்கு எப்பொழுதும் இரண்டாம் இடம், பின்வரிசையே கிடைத்தது. இந் நிலமை வேதனைக்குரியதாகும். வயது வந்த சந்ததியினர் இச்சமூக அநீதிகள் மத்தியிலும் சகித்துக் கொண்டு செயல்படும் நிலமைக்கு வீழ்ந்து இருந்த போதிலும் படித்த இளைஞர்கள் இந் நிலமை மத்தியிலே தலைகுனிய தயாராக இருக்கவில்லை. பொருளாதார நெருக்கடியினால் அதிகரிக்கப்பட்டிருந்த கஷ்டங்களாலும் ஒடுக்கு முறை நிலைமைகளாலும் தாக்குதல்களுக்கு உள்ளாகியிருந்த இளம் சந்ததியினர் இவ் அநீதிகள் காரணமாக மேலும் மேலும் விரக்தியும் கோபமும் அடைவது தவிர்க்க முடியாததாயிற்று. அவ்வாறான இளைஞர்கள் ஜேவிபியை நோக்கி கவர்ந்திழுக்கப்படுவது ஆச்சரியமான ஒன்றல்ல.

ஜேவிபியை நோக்கி இளம் சந்ததியினர் இழுபட்டு வந்ததற்கான இன்னுமொரு சமூக காணி சில பிரதேசங்களில் நிலவிய குல ஒடுக்கு முறையாகும். இது தொடர்பாக திட்டவட்டமான புள்ளி விபரங்களை தேடுவது கடினமானதாயினும் ஜேவிபி வியாபித்திருந்த பிரதேசங்களைக் கவனத்தில் கொள்ளும்போது குலரீதியாக ஒடுக்கப்பட்ட பிரதேசங்களில் இளைஞர்கள் மட்டுமன்றி வயது வந்தோரும் கூட முழுக் கிராமமுமே ஜேவிபியுடன் இணைந்திருந்ததைக் காணமுடிகிறது.

1930-40 கால கட்டத்தில் சமசமாஜ இயக்கம் வியாபிக்கும் போதும் குலரீதியாக ஒடுக்கப்பட்டிருந்த பிரதேசங்களின் மக்கள் முழுக் கிராமமாகவே சமசமாஜ இயக்கத்தை நோக்கி சென்றதைக் காணமுடியும். பொருளாதார ரீதியாக பொதுவாக நிலவிய ஒடுக்கு முறையைத் தவிர தொழிலைத் தேடும்போதும் கல்வியைப் பெறும் போதும் சமூக நடவடிக்கைகளின்போதும் உயர்ந்த எனக் கருதப்பட்ட குலத்தைச் சாராத மக்களுக்கு ஒடுக்கப்பட்ட வர்க்கத்தினர் படிப்படியாக அழிந்து கொண்டு போனாலும் கிராமப்புற பிரதேசங்களில் ஓரளவு தாக்கத்தை ஏற்படுத்தும் மட்டத்திலேயே நிலவுகிறது.

இளம் சந்ததியினர் மத்தியில் குல வேறுபாடுகளின் வரையறைகள் தகர்ந்து போய்க்கொண்டிருப்பினும் அவர்களின் குடும்பங்களுக்கு முக்கொடுக்கும் பாரபட்சங்களைப் பற்றி இளைஞர்கள் நன்றாக விளங்கியுள்ளனர். இளம் சந்ததியினர் மத்தியிலும் கூட குல வேறுபாடுகளின் கெட்ட அம்சங்கள் முற்றாக அற்றுப் போகவில்லை. ஆதலால் சகலதுறைகளிலும் குலரீதியான வேறுபாடுகளுக்கு தொடர்ச்சியாக முகங் கொடுக்க இவர்களுக்கு நேரிட்டது. பொதுவாக எடுத்துப் பார்க்கும் போது உயர்ந்த என்று கணிக்கப்பட்ட குலத்தவர்களை விட தாழ்ந்த என்று கணிக்கப்பட்ட குலத்தவர்கள் பொருளாதாரம் அரசியல் போன்ற சகல துறைகளிலும் கூடுதலான ஒடுக்கு முறைக்குள்ளாகினர். பொதுவாக முகங்கொடுக்கும் சமூக, பொருளாதார அரசியல் ஒடுக்கு முறைகளுடன் மேலதிகமாக குலரீதியான விசேட அடக்கு முறை ஒன்றுக்கு இவர்கள் உட்பட்டனர்.

தொடரும்

(சென்ற இதழில் 26ம் பக்க மூன்றாம் கல 40ம் வரியில் 'தொழில் துறைத் தகைமைகளை வழங்கும் கல்வி முறையாக இருந்திருந்தால் வேலை இல்லாத் திண்டாட்டத்திற்கு தீர்வு கிடைத்திருக்கும் என்பது மட்டுமேயாகும்' என்பது 'தொழில் துறைத் தகைமைகளை வழங்கும் கல்வி முறையாக இருந்திருந்தால் வேலை இல்லாத் திண்டாட்டத்திற்கு தீர்வு கிடைத்திருக்கும் என்பது அர்த்தம் அல்ல, இன்றைய நிலைமையை விட ஏதோ வகையில் ஓரளவு கூடுதலான வாய்ப்புகள் கிடைத்திருக்கும் என்பது மட்டுமேயாகும்' என்றிருந்திருக்க வேண்டும்.)

வெளிவந்து விட்டது

இளையநிலா


வீடியோ சஞ்சிகை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# GOOD BYE BALDNESS



## முடி உதிர்பவர்களுக்கு ஒரு நற்செய்தி

ஒரு சிறு குமிழ்
உங்கள் கேசத்தை
வளரச் செய்கிறது

பரீட்சித்துப் பாருங்கள்
Try First
பலர் இச்சிகிச்சை மூலம் பயன் அடைந்துள்ளனர்
239 Carlton St
Toronto, Ont
Tel:922-0478

## சிறந்ததையே தெரிவு செய்யுங்கள்!

## Dr.ROBERT VITAMOL, BETTER THAN VIVA HORLICKS





VITAMOL சத்துள்ளதாகவும் மிகுந்த சுவையுள்ளதாகவும் இருப்பதால் விவா ஹோர்லிக்ஸை விட விட்டாமோலே பலர் விரும்புகின்றனர். விட்டாமோல் டாக்டர்.ரொபேட்டினுல் தயாரிக்கப் பட்ட சத்துணவுப் பானமாகும். விட்டமின்கள், இரும்புச் சத்து, கல்சியம், தேன் கொண்ட ஒரே சத்துணவுப் பானம் இது. உடலின் சகல பகுதிகளுக்கும் தேவையான உணவு இது. உதாரணமாக கல்சியம் எலும்புக்கு அவசியமானது. விட்டமின்களும் இரும்புச் சத்தும் இரத்தக் குறைபாட்டைத் தடுக்க அவசியமானது. எனவே சிறந்ததைக் கொண்டு உங்கள் உடலுக்கு உணவளியுங்கள். ஒவ்வொரு போத்தல் விட்டாமோலிலும் அதிகம் பெறுங்கள். தரம், அளவு, விலை என்பவற்றை ஒப்பிடுங்கள். தரத்திலும் பெறுமதியிலும் சிறந்த விட்டாமோலைக் கேட்டு வாங்குங்கள். விட்டாமோல் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் பரிந்துரை செய்யப்படுகிறது.

### NERVOGEN NERVE FOOD


உடலின் கடுமையாக உழைக்கும் பகுதிகளான மூளை, சிறுநீரகம், ஈரல், இதயம் போன்றவற்றிற்கு சிறந்தது. சனட்டோஜனை விட சிறந்த புரதத்தைக் கொண்டிருப்பதுடன் சுவையானதும் கூட. சிறந்த மன வளர்ச்சிக்கு கேட்டு வாங்குங்கள்.

அமெரிக்காவிலும், கனடாவிலும் மேற்கிந்திய தீவுகளிலும் கிடைக்கும்.
Universal Foods & Merchandise Co,
(416) 535-3118, Toronto, Canada




### CHATAK: CURRY EXCELLENT

Chatak Madras Curry Powder *இன்றைய நிலையில் சிறந்த கறி பவுடராகும். 475 வருட காலமாக வரும் பாரம்பரியப்படி தயாரிக்கப்பட்டது. மற்ற கறி பவுடர்களை விடச் சிறந்தது*. Chatak Meat Seasoning, Fish Seasoning, Tandoori Chicken Mix *போன்றனவும் கிடைக்கும்.*




### DR.ROBERT'S GLUCOSE

குளுக்கோஸ் மரக்கறிகளிலும் பழங்களிலும் இயற்கையாகக் கிடைக்கிறது. டாக்டர் ரொபேட்டின் குளுக்கோஸ் இயற்கையான மூலப்பொருட்களிலிருந்து அதிஉயர் தரத்திற்கு தூய்மைப்படுத்திப் பெறப்பட்டது. இது உடனடியான சக்தித் தேவைகளுக்குரியது. மூளை, இரத்தம், ஈரல், தசைகள் போன்றவற்றிற்கு சிறந்தது. பால் குடிக்கும் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் சிறந்தது, ஏனெனில் இது உடலினுல் உடனடியாக உறுஞ்சப்படுகிறது.

அன்பளிப்புப் பொருட்கள், பொம்மைகள், இலங்கை உணவுப் பொருட்கள், மேற்குறிப்பிட்ட பொருட்கள் அனைத்திற்கும் தொடர்பு கொள்ளுங்கள்

BUDGET SUPERSAVINGS DISCOUNT
1340 Queen st west (East of lansdowne)
Tel:(416) 5370394

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஏ.ஆர்.கே மார்க்கட்

**31-35 St.Dennis Dr**
**(Don Mills/Eglinton)**
**(416) 421 3429**

உங்கள்
வருமான வரிப்
பத்திரங்களை
பூர்த்தி செய்து
கொள்ள
தொடர்பு
கொள்ளுங்கள்

இலங்கை இந்திய
உணவுப் பொருட்கள்,
பால் பழங்கள், உடன் மரக்கறி
வகைகள், இறைச்சி, மீன்,
கடலுணவு வகைகள்,
கனடிய உணவுப் பொருட்கள்
அனைத்தும் மலிவு விலையில் ...

தமிழ், ஹிந்தி வீடியோப்
படங்களின்
ஒரிஜினல் பிரதிகளை
வாடகைக்கும்
விற்பனைக்கும் பெறலாம்

CD, Audio
மலிவு
விலையில்

# A.R.K MARKET



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடர்கதை

# வேலிகள்

கடல்புத்திரன்

'என்னை பேர் சொல்லி கூப்பிட்டது தான் அப்பனுக்கு பிடிக்கவில்லை என்று நினைக்கிறேன் அவனும் அவசரப்பட்டு கத்தியை எடுத்ததாலே குத்து விழுந்து விட்டது" என்றாள்.

பெண்களுக்கு சம உரிமை கொடுத்திருந்தால் உப்படியான பிரச்சனைகள் இருந்திராது என்று பட்டது. சினிமாவிலேயே உரிமையை கொடுக்க பஞ்சிப்படுகிறார்கள்.

"ரொம்ப நன்றி. நளினி இப்ப இவ்விசயம் பழங்கஞ்சி. மேற் கொண்டு பிரச்சனைப்படமாட்டேன்" என்று உறுதி கூறினான்.

வீட்ட வாறபோது நண்பர்களிடமும் முத்தன்ர பேச்சு உண்மை என்றான்.

★ ★ ★

வொலிபோல் ரசனையுடன் நடந்து கொண்டிருந்தது. கனகன் அவனுக்கு சந்தர்ப்பம் கொடுத்தான் பக்கத்தில் நின்ற சுரேஷ் "பயப்படாமல் விளையாடு" என்று உற்சாகப்படுத்தினான்.

அங்கால சேவிஸ்க்கு போனபோது "இண்டைக்கு கூட்டம் இருக்கிறது" என்றான்.

5.30 மணிக்கெல்லாம் நிறுத்தி விட்டார்கள். அவ்வளவில் கூடினார்கள். கொமிட்டியும் வந்து சேர கூட்டம் தொடங்கியது.

"குளங்களை சிரமதான முறையில் செய்யிறதுக்கு தேனீர் செலவுகளை உப அரசாங்க பிரிவு தருகிறது. அப்பணத்தை வைத்து மேடையை கட்டி முடிக்கலாம் என்று தீர்மானித்திருக்கிறோம். என்ன சொல்கிறீர்கள்" என்று கேட்டார்கள்.

அவ்விடத்து பெடியள் உழைக்கிறதுக்கு பின்நிற்பவர்கள் இல்லையே! ஆதரவு தெரிவித்தார்கள்.

கடைசியாக 'கேட்போர்' நேரத்தில் ஒருத்தன் வேலனின் அங்கத்துவம் பற்றிக் கேட்டான்.

'அவனிட்டயும் சந்தா வாங்குங்களன்"

அவனுக்கு சரி என்றே பட்டது.

கொமிட்டிக்கு சட்டவிதிகள் முரணாகவிருந்தன. இதுவரையில் மற்றவயளில் யாரும் சேர்ந்து விளையாடியதில்லை. கொஞ்சநேரம் தமக்குள் சலசலத்தார்கள் பிறகு காரியதரிசி "வெளியூர் அங்கத்தவர் போல ஏற்கிறோம்" என்று பதிலளித்தார்.

'அவனுக்கு வோட்டுரிமை கிடையாது, சந்தா கட்ட வேண்டியதில்லை, என்னம் உதவி விரும்பினால் அன்பளிப்புகள் செய்யலாம்" என்று விளங்கப்படுத்தினார் 'இரண்டாம் பிரஜை' என்றது அவனுக்கு ஒரு மாதிரியிருந்தது.

தேசவழமையை மீற யாரும் விரும்பவில்லை. சிறிலங்கா அரசு ஆச்சரியமானதில்லை. எவ்வளவு நாம் வாய் கிழிய கத்தினாலும் இது எல்லா சமுகங்களிலும் கடைபிடிக்கிற பொதுவிதி. சாதியம் பிடியாத பெடியள்களை இவ்விதிகள் செயல்பட விடாது கட்டுபடுத்திவிடும்.

* * *

பள்ளிக்கூட நேரம் ரீச்சர்மாரின் உருக்குதல், படிப்பித்தல், தமது பராக்கிரமத்தை அளத்தல் எனப் போயிருந்தது. முதல் நாள் நடந்த கூட்டம் பற்றி இருவரும் கதைக்கவில்லை.

'முத்துவிட்ட போறது என்றிருந்ததால் பாபு அவன் வீட்டிற்கு வந்திருந்தான். சுரேசும் வந்தான்.

'எங்கடயாட்கள் மாற மாட்டான்களடா, மன்னிச்சிடடா' என்று சுரேஷ் கவலையுடன் சொன்னான்.

'சேச்சே.. நான் ஒன்றும் நினைக்கேலை' என்று அவன் போலியாக பதிலளித்தான்.

'என்ன விசயம்' என்று பாபு கேட்டான்.

'இரண்டாம் பிரசை விசயத்தை சுரேஷ் விளக்கினான்.

★ ★ ★

முத்தன் தனியாக நின்று புல் பூண்டுகளை செதுக்கி கற்களை கிளறிக் கொண்டிருந்தான்.

மூவரும் இறங்கினார்கள். ஒரு நொடியில் துப்பரவாக்கி விட்டார்கள். வேலிக் கம்பியை வெட்ட கத்திரிக்கோல் இல்லை என்ற போது சுரேஷ் விரைந்து பெரியப்பா கடையிலேயிருந்து எடுத்து வந்தான். 'திறந்து மூடக்கூடியதாக அக்கம்பிகளைக் கொண்டே கதவொன்றை அமைத்தார்கள்'

கமலம் அவர்களுக்கு தேனீர் கொண்டு வந்தார். கனகசபை வீட்டில் கதியாலுக்கும், சிவநேசன் வீட்டில் கிடுகுக்கும் முத்தன் ஓடர் குடுத்திருந்தான்.

கதியால்களை அவர்களே வெட்டி எடுக்க வேண்டியிருந்தது பாபு மரத்தில் ஏறி மளமளவென்று வெட்டினான். சுரேசும் அவனும் குழைகளை முத்தன் வீட்டு ஆட்டுக்கு கொண்டு போய் விட்டார்கள். கிடுகையையும் அவர்களே சுமந்து வந்து அன்டன் வீட்டுச் சுவரோடு சாய்ச்சு விட்டார்கள்.

நாளைக்கு தொடர்வதென.. தீர்மானித்து அன்றைய வேலையை நிறுத்தினார்கள்.

முத்தன் சுரேஷ் கையிலே 50 ரூபாயை வைத்து உன் பெரியப்பாவைக் கேட்டு "அடிப்படைச் சாமான்களை நாளைக்கு வாங்கிட்டு வாடா" என்றான். விடை பெற்றுச் சென்றார்கள்.

பெரியப்பாவிடமிருந்து வாங்கிய லிஸ்டை கொண்டு வந்திருந்தான் சுரேஷ் சிறு கத்தி, குறடு, சுத்தியல், போல்ஸ் செட், 'ரிம்' பக்கல் சாவி, என நீண்டிருந்தது. "50 ரூபா பத்துமா? என்று கேட்டான் அவன்

"50 தொடக்கம் 100 என்றாலும் சமாளிக்கலாம் தவிர சிறிய அளவுகளிலும் கொஞ்சமாகவும் வாங்குவதால் பிரச்சனை வராது.. நினைக்கிறேன்" என்ற சுரேஷ் "வேற, பெரியப்பா வாங்கிற கடையிலே, அவருக்குத்தான் சமான்கள் வாங்குவதாக சொல்லச் சொன்னார். 5% விலைக்குறைப்பு இருக்கிறது" என்றான்.

"முத்தனிட்டப் போய் கொஞ்சம் காசு எடுக்கலாமா என்று பார்த்திட்டு போவோமா" கேட்டான் அவன்

"வேண்டாம் இதுக்க வாங்கப் பார்ப்போம் கடைக்கு கொஞ்ச சாமான்கள் ரெடியாயிருந்தால் சரி, பிறகு வாங்கிக் கொள்ளலாம். என்றான் முத்தனை கரைச்சல் கொடுக்க விரும்பவில்லை.

"சரி வாடா போவோம்' வெளிக்கிட்டார்கள் சைக்கிளில் போனபடியே முத்தனின் இடத்தைப் பார்த்தார்கள். புதிதாக ஒரு கொட்டில் முளைத்திருந்தது. முத்தன்ர நண்பர்களான 'சுமன். பத்து. ரவி, பூர்ணம் போன்றவர்கள் வேலையாலே வந்தபிறகு இரவிரவாக போட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

விட்டார்கள்' என்பது புரிந்தது.

"கெதியிலேயே திறந்து விடுவான்" என்றான் சுரேஷ் "டேய் பம் முக்கியமே. மறந்திட்டியே. ஞாயமான காசு வேணுமே" திகிலுடன் கேட்டான். அவன் சுரேஷ் புன்முறுவல் பூத்தான் 'பழைய 'பம்' ஒன்றை எடுத்து திருத்தி ரெடியாய் பெரியப்பா வைத்திருக்கிறார் என்றான்.

"முத்தன் குடுத்து வைச்சவன். உன்னை நண்பனாகப் பெற்றதற்கு'

'மறந்திட்டியே. பெரியப்பாவை' என்று சிரித்தான் உண்மை தான் (கலவர காலத்தில் சிங்களவர் மத்தியிலிருந்து காப்பாற்றி உதவியவர்கள் போல....) எங்குமே நல்ல மனிதர்கள் இருக்கிறார்கள்.

'கடையை திறக்க முதல் முத்தனை ஒரு பகல் தன்னுடைய கடையிலே வந்து நிற்க சொன்னவர். எங்களைப்போல நிலையில் இருப்பதால் செய்முறைகளில் ஏற்படுற தவறுகளை சொல்லிக் கொடுப்பதற்கு" என்றான் சுரேஷ்

"இவன் பயப்படப் போறான்" என்றான் அவன்

"பகிடி விடுறயா. பெரியப்பாவோட யாருமே நெருங்க மாட்டார்கள்" என்ற நிலமையை தெரிவித்தான். தொடர்ந்து "சிவத்தான் வெறியிலே உணர்ச்சி வசப்பட்டுவிட்டான் மிச்சம்படி வன்மம் வைச்சு சாதிப்பவனில்லை " என்று பதிலளித்தான். மனிதர்க்கு சமயங்களில் பலவீனமும் ஏற்பட்டுவிடுகிறது.

மணியம் ஸ்ரோர்ஸை அடைந்தபோது 5.30 ஆகியிருந்தது. சாமான்கள் 50 ஐ தாண்டவில்லை வாரபோது முத்தனிடம் கையளித்து விட்டு வந்தார்கள்.

பவித்ரா கடையிலே ஏதோ சாமான் வாங்கவந்த நளினி. அவர்கள் நிற்பதை பார்த்துவிட்டு கடைக்கு வந்தாள் "எப்ப நீங்கள் கடையை வாங்கினீங்கள்" என்று பகிடியாக கேட்டாள்.

"முத்து. எப்படி உங்க காயம் மாறிவிட்டதா?" அன்புடன் விசாரித்தாள். முகம் மலர "சுகம்" என்றான் முத்தன் "நேரமாகிறது வாரன்" என்று விடைபெற்றாள்

'கடை எப்படிப் போகுமோ?" என்றிருந்த கலக்கம் அவன் முகத்திலிருந்து நீங்கியிருந்தது.

அவனுக்கு தந்திருந்த 'பம்பை காட்டினான். நல்ல நிலையிலிருந்தது.

"எப்ப கடையை திறக்கப்போறாய்?" கேட்டான்

"திங்கள் நல்ல நாளாம் அக்கா சொல்றாள்" என்றான்.

"பள்ளிக்கூடம் முடியத்தான் எங்களால் வரமுடியும" என்றான் சிறிது நேரம் கதைத்துவிட்டு சாப்பிட ஓடினான். வகுப்பிலே "விளையாட வருவியா?" என்று வேலனைக் கேட்டான்.

"இரண்டாம் பிரஜை என்ற பிறகு மனம் வெறுத்து விட்டது. நீயிருக்கிற போது மட்டும் விளையாடவேன்"என்றான். அவன் "எப்படி முத்தன்? கடையை திருப்பி வைத்திருக்கிறானா? பகிடியாக கேட்டான்.

"டேய். நளினி வந்து கதைத்துவிட்டு போனாள் முத்தனுக்கு ஆறுதலாக இருந்தது" என்றான் ரீச்சர் வர பாடங்களில் அமுங்கிப் போனார்கள். சுரேஷ் வெள்ளிக்கிழமை 'மச்' என்று சொல்லியிருந்தான் சங்கானையில் எங்கேயோ ஒரு கோவில் வளவு என்று அடையாளம் காட்டினாலும் தேடிப் பிடிப்பது கஷ்டமே. வரிப்பட்ட வளவுகள் இருந்தன. ஆனால் ஒழுங்கைகளுக்கு பேர் இல்லை. வீதியிலே சனத்தைக் காணவில்லை. அவன்ர காலத்திற்கு கிருபன் சைக்கிளை எடுத்துக் கொண்டு வீட்டிலேயிருந்து வெளிக்கிடுவது தெரிந்தது. கிருபன் வகுப்புத்தோழன் "மச்சுக்குதானே. நானும் அங்கே தான் "என்றான் அவனைப்பார்தது.

★ ★ ★

# எனது மக்கள் அங்கே....

## ஜெயந்தீஸன்

*(ஜெயந்தீஸனது குட்டிக்கதைகளில் பல, அராஜகத்தினதும், சமூக அவலங்களினதும் விமர்சனங்களாக அமைந்ததை நீங்கள் அறிவீர்கள். இலங்கையினது இன நெருக்கடிக்கான தீர்வு பிரிவினைக்கெதிரான ஐக்கிய வாதத்திலேயே தங்கியுள்ளது எனக் கருதும் இவரது, "எங்கே என் நிலம்" என்ற கவிதை ஏற்கனவே தாயகத்திலே பிரசுரமானது. இந்த வாரம் "எனது மக்கள் அங்கே..........." என்ற கவிதையைப் பிரசுரிக்கின்றோம். இன நெருக்கடியை மையமாக வைத்து, மேலும் பல கவிதைகளைத் தான் எழுதிக் கொண்டிருப்பதாக ஜெயந்தீஸன் அறிவித்துள்ளார்.)*

காடு எரிந்து
கடல் வற்றி
நாடு வனப்பிழந்து
நாறுது... ஐயோ! நாறுது!
வீடு இழந்து
பாடுபடும் மக்கள் அங்கே.....

போட்டிக்குப்
போர் வனைந்து
போட்டுடைத்தோம்
புன்னகையை

ஏட்டைத் தொலைத்து
ஏறிவிமா னத்தில்
நாட்டைக் கடந்து
காட்டெடுக்க வந்தோமோ?
காட்டிக் கொடுக்கும்
கலையை மறந்தோமா?
வீட்டுக்குள் ளேபெண்ணை
பூட்டி வெளியினிலே
பெண்ணுரிமை பேசுகின்ற
பண்பாட்டை இழந்தோமா?

நாடு எரிந்தென்ன
நட்டாற்றில் நம்மக்கள்
நாறு பிணங்கள் மிதந்தென்ன
நாம் தமிழர் பெருமை
பேசிக் களித்திருப்போம்....

புத்தர் கால் மிதித்த
புனித பூமியிலே
அத்தர் மணக்கவில்லை...
ரத்தம் மணக்குதன்றோ....
யுத்தம் குடிக்கும்
பேதையரை நாங்கள்
உத்தரென் றியம்பலாமோ?

வாழ்வுகளை அழிக்க
வாள் தூக்கி
வீதிகளில் எந்தன்
சந்ததியைப் போட்டெரித்த
வித்தைக்கெல்லாம் அர்த்தம்
வழங்குபவர் யாவரையும்
விமர்சிக்கும் என்பேனா.

நாடு எரிந்து...
கடல் வற்றி
நாடு வனப்பிழந்து
நாறுது! ஐயோ! நாறுது!
வீடு இழந்து
பாடுபடும் மக்கள் அங்கே.....

இங்கே
போட்டிக்குப் போர் குடித்து
பேட்டுடைத்துக்
கொண்டுள்ளோம்
புன்னகையை......

www.tamilarangam.net



## ஜெயந்தீஸன் குட்டிக்கதைகள்

# பிரான்ஸில் இட்ட பிராங்கை கனடாவில் டொலராக எடுத்த நாயனர்

ராமலிங்கத்தை நாம் ராமலிங்கநாயனுர் என்றும் அழைக்கலாம். தன்னிடம் உள்ள பணத்தை வைத்து பல அருள் விளையாட்டுகள் செய்பவர். இவர் 27 சீட்டுக் கம்பெனி நடத்துகின்ருர். ஆனுல், ஒருவர் கூட இவருக்குச் சுத்துவிட்டதில்லே. குறிப்பிட்ட டேற்றில் பணத்தை யாரும் கட்டாது விட்டால் 'உன்ரை மனிசியைக் கூட்டிக்கொண்டு போக இப்பவே வாறன்" போனில் வாறந்து அனுப்பி விடுவார். திருமணமானவர்களே மட்டுமே இவர் சீட்டுக்குச் சேர்ப்பதுண்டு. இவர் வட்டி கொடுக்கும் நற்சேவையையும் செய்பவர். செக் புத்தகம் உள்ளவர்கள் யாவரும் இவரிடம் போய் வட்டி கேட்கலாம். உடனடியாக வட்டிக் காசை, ஒரு வருடத்துக்கு இவரிடம் தனித்தனியாக குறித்த டேற்றில் வட்டி கொடுக்காதுவிட்டால் இவர் செக்கைப் பாங்கில் போட்டு விடுவார். பாங்கில் காசு இல்லாதுவிடில், செக் கொடுத்தவர் இவருக்கும் பாங்குக்குமாக இரண்டு வட்டி கட்ட வேண்டிவரும். வீட்டில் வீடியோக் கிளப் கூட நடத்துகின்ருர். மணவறை, தலைப்பாகை எல்லாம் வாடைக்கு விடுகின்ருர்.

இந்த ஆனுனப்பட்ட ராமலிங்கத்திடம் 50 ஆயிரம் பிராங்கை எண்ணி வாங்கிய சாந்தன் கனடாவுக்குக் கம்பி நீட்டி, அங்கே ரொறன்ரோவில் வெல்பெயரும், வேலையுமாக நல்லா இருக்கின்ருன். சாந்தன் ராமலிங்கத்தை சுத்தியது எனக்கு மட்டுமல்ல எல்லோருக்குமே வியப்பையூட்டிய ஒன்ருகும். உண்மை இதுதான். ராமலிங்கம் ஓர் செக்ஸ் பிரியர். ஆனுல், தானும் தனது மனைவியுமே கற்புக் கெடாத பத்தரை மாற்றுத் தங்கங்கள் எனப் பறை சாற்றுபவர். திருமதி ராமலிங்கத்துக்கு இவர் வாங்கிக் கொடுப்பதெல்லாம் தேவார, பஜனைப் புத்தகங்களே! இவரோ ரகஸியமாக செக்ஸ் புத்தகங்களை வாங்கி, ஏதாவது பார்க்கில் இருந்து பார்த்தபின், கிழித்து எறிந்து விட்டு ஓர் தெய்வீக கீர்த்தனையுடன் வீட்டுக்குள் நுழைவார்.

ஒருநாள் இவர் செக்ஸ் சொப்பில், புத்தகம் பார்த்துக் கொண்டிருந்தபோது சாந்தன் அதற்குள் நுழைந்தான். அவனைக் கண்டதும் ராமலிங்கத்துக்கு நடுக்கம் வந்துவிட்டது.

'தம்பி என்னை இங்கை கண்டதெண்டு அவவிட்டை மட்டும் சொல்லிப் போடாதையும்..." எனக் கெஞ்சினுர்.

'அண்ணே, உதெல்லாம் நோர்மல்..." என்று விட்டு செக்ஸ் கதைகளைத் துவக்க, அவரும் மனம் விட்டு அவனெரு நெருக்கமாகப் பேசத் தொடங்கிருர்.

'அண்ணே, வெள்ளைக்காறியள் சுப்பர்.... எங்கடை பெட்டையளைப் போல இல்லை..." என்று தொடங்கினுன் சாந்தன்.

'உந்தப் பாக்கியம்தான் எனக்கு இன்னமும் கிடைக்கேல்லைத் தம்பி"

"அண்ணே கவலைப் படாதையுங்கோ.. . நீங்கள் விரும்பினு, உங்களுக்கு நான் ஒரு வெள்ளைக்காறியை செற் பண்ணித் தருவன்... ஒரு நைற்றுக்கு 1000 பிராப் மட்டும்தான்...."

"1000 பிராங்..... கூடத்தான். நீர் எதுக்கும் செற் பண்ணித்தாரும்....."

இப்படித்தான், ராமலிங்கமும் சாந்தனும் நண்பர்களாயினர். இதற்குப்பின் கறுப்பிகள், சிவப்பிகள் என்று பலரை சாந்தன் அவருக்குச் செற் பண்ணிக் கொடுத்தான். 200 பிராங், 300 பிராங் என அவ்வப்போது கடன் கேட்டான். அவர் கொடுப்பார். இவனும் குறித்த தினத்தில் கொடுத்து அவரது நம்பிக்கைக்குப் பாத்திரமாகி விட்டான்.

ஒருநாள், சாந்தன் ராமலிங்கத்தைச் சந்தித்து, 50 ஆயிரம் பிராங்கிற்கு எழுதப்பட்ட செக் ஒன்றைக் காட்டி "அண்ணே, நான் என்ரை மருமோனை 50 ஆயிரம் கட்டி இங்கை கூப்பிட்டு விட்டனுன்... அவன் பாஷை படிச்சு, நாஷனலற்றி எடுத்து பாங் ஒண்டிலை உப்ப வேலை செய்யிருன். நல்ல சம்பளம். நேற்றைக்குத்தான் உந்தச் செக்கைத் தந்தவன். நான் பாங்கிலை போட்டா ஒரு கிழமையிலை மாறும்.. இதை வைச்சுக்கொண்டு எனக்கு 50 ஆயிரம் தாருங்கோ... அடுத்த கிழமை தந்திடுவன்...." என்றதும் அவர் கொடுத்தே விட்டார்.

"அண்ணே, இண்டைக்கு நீங்கள் அவள் வனேஸாவோடை போங்கோ. . நான் பே பண்ணிறன்" என்றவுடன், "நீர் தான் ஐஸே என்ரை உயிர் நண்பன்" எனத் துள்ளிக் குதித்தார். 50 ஆயிரம் கிடைத்ததும் சாந்தன் அடுத்த நாளே கனடாவுக்குக் கம்பி நீட்டி விட்டான். ராமலிங்கம் வனேஸாவிடம் போக, அவள் காசில்லாமல் ஒண்டும் சரிவராது என்றவுடன் தான் ராமலிங்கத்திற்கு சாந்தன் செய்த சூழ்ச்சி விளங்கியது. ஒரு மாத ஆராய்ச்சியின் பின்னர், சாந்தன் கனடா போய், அங்கே ஒரு பொன்மகளைக் கட்டி வாழுகின்ருன் என்பதைக் கண்டு பிடித்து விட்டார்.

"எனக்கு சுத்தி விட்டானே!... . ஒரு கை பார்க்கிறன்" சபதமெடுத்து விசாவும் எடுத்து, இரவு பண்ணிரண்டு மணிபோல் ரொறன்ரோ வந்து, சாந்தனின் அட்ரஸ்சையும் வைத்துக் கொண்டு ஸ்ரேட்டில் நின்று தடுமாறினுர்.

12 மணிபோல், தெருக்களில் நின்று, என் மச்சான் பெண்கூரியன் என்ன செய்கின்ருனே எனக்குத் தெரியாது. அவனைக் கண்டு அட்ரஸைக் காட்டினுர்.

'பிரான்ஸாலை வந்து ஒரு மாதம் தான் அதுக்குள்ளை கலியாணம் முடிச்சிட்டார். அவர் எங்கை இருக்கிருர் எண்டது எனக்குத்

36ம் பக்கம் பார்க்க...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**'எதையோ எழுத வேண்டும் என்பதற்காக புத்திசாலிகள் எழுதுகிறார்கள். எதையாவது எழுத வேண்டுமே என்பதற்காக முட்டாள்கள் எழுதுகிறார்கள்'**

# துண்டு மகான்மியம்

**அறுஞர் பேராசிரியர் கல்லாநிதி கியூறியஸ் ஜி**

இம் முறை ஏடிட்டோரியலில் சமாதானம், பேச்சுவார்த்தைகள் பற்றி இடம் பெற்றிருக்கின்றது. முன்பும் சமாதானம் பற்றி எழுதப்பட்ட ஏடிட்டோரியல் ஒன்றைப் பார்த்த போது அதில் அன்வர் சதாத் சொன்னது இருந்தது: Peace is more precious than a piece of land. சமாதானம் ஒரு துண்டு நிலத்தை விட பெறுமதி வாய்ந்தது. இந்த விசயம் தெரிந்ததால் சிங்கத்தை அதன் குகையில் சந்திக்கப் போகிறேன் என்று கூறி சதாத் இஸ்ரேலுடன் சமாதானம் செய்து கொண்டார். இதற்கு விலையாக அவர் தனது உயிரையும் கொடுக்க வேண்டி வந்தது. இப்படியான துணிச்சல் எத்தனை அரசியல்வாதிகளுக்கு இருக்கிறது. ஆனால் அந்த முடிவினால் இஸ்ரேலும் எகிப்தும் தங்கள் எல்லைகளில் நிறுத்துகின்ற இராணுவத்தினருக்கு செலவிடுகின்ற பணத்தை மற்ற பயனுள்ள வழிகளில் செலவிட வாய்ப்பு வந்திருக்கிறதல்லவா!

இந்த துண்டு விவகாரம் எத்தனை உயிர்களை உலகெங்கும் குடிக்கிறது. ஆர்மீனியாவும் சரி, பொஸ்னியாவும்சரி, துண்டு நிலங்கள் தான் பிரச்சனையே. மனிதனுக்கு அத்தியாவசியமான உணவு, உடை, உறையுள் என்பதை விட, மொழி, நாடு, மதம் என்ற விசயங்கள் எல்லாம் மனித உயிரின் விலையைப் பெறுமதியற்றதாக்கி விட்டன.

★ ★ ★

சமாதானமும் Peace தான். துண்டு என்பதும் Piece தான். சமாதானம் பற்றி ஏடிட்டோரியலில் சொல்லப்படுவதால், நான் துண்டைப் பற்றி சொல்லலாம் என்று பார்க்கிறேன். சமாதானத்தின் அர்த்தமும் தேவையும் புலிகளுக்கு இன்னமும் புரியவில்லை. எனவே துண்டின் பெருமையையாவது எடுத்துச் சொல்ல வேண்டுமே என்ற பெரிய எண்ணம் தான். துண்டு என்ற பதம் தமிழில் எத்தனை அர்த்தங்களைக் கொண்டது. ஒவ்வொரு வினைச் சொற்களுடனும் சேரும் போது கருத்துக்கள் மாறுபடுகின்றன.

★ ★ ★

இனப்பிரச்சனை எல்லாம் தீர்த்தாயிற்று, பயங்கரவாதப் பிரச்சனை தான் இருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்க எவ்வளவு நாட் சென்றிருக்கிறது. இந்த பிரச்சனையைக் கண்டுபிடித்து அதற்கு தீர்வு சொல்ல முயன்ற ஜனாதிபதிகளில் இருவர் போய் இன்னொருவர் கண்டுபிடித்தது இது. இவரது கோஷம் 'நான் உயிரோடு இருக்கும்வரை நாட்டைத் துண்டாட அனுமதிக்க மாட்டேன்'. கொஞ்ச நாளைக்கு முன்னர் இப்படிச் சொல்லிக் கொண்டிருந்த பிரேமதாசா நாடு துண்டாடப்படுவதற்கு முன்னர் தானே துண்டு துண்டாகிப் போனார் (Blown to pieces) என்பது இவருக்கு விளங்கவில்லையோ என்னவோ?

★ ★ ★

யாழ்ப்பாணத்துக்கு துண்டுகள் மீது ஒரு பிரேமம். ஒரு காணித் துண்டை வைத்து ஏதோ பெரிய கோட்டை கொத்தளம் என்ற நினைப்பில் அதற்கு அகழி வைக்காத குறையாக அதற்கு நாலு வேலி போட்டு தன் பொட்டுக்கேடுகளை மூடி வைத்திருந்தது யாழ்ப்பாணம். பிறகு பிள்ளைகள் வளர்ந்து சீதனம் கொடுத்த போது இந்த துண்டு மேலும் துண்டாடப்பட்டு (அல்லது வீட்டுக்குள்ளால் மதில் போய்) அதற்குள் வேலி பிறக்கும். பின்னர் பொதுக் கிணற்றுப் பங்கு, வேலி சம்பந்தமாக ஏற்படும் சண்டைகளில் தலைகள் துண்டாடப்படுவதும் உண்டு. இப்படி ஒரு காணித்துண்டுக்காக அலைகிற யாழ்ப்பாணம் இப்போது 'துண்டைக் காணோம், துணியைக் காணோம்' என்று ஓடிக் கொண்டிருக்கிறது. வீடும் போய், காணித் துண்டும் போய், சீதனமும் போய்... கொஞ்ச நாளில் இடுப்பில் ஒரு துண்டைக் கட்டிக் கொண்டு காசி, ராமேஸ்வரம் புறப்பட வேண்டியதுதான்.

★ ★ ★

துண்டு என்பது உண்மையில் மனிதனின் அடிப்படைத் தேவை. உணவு, உடை, உறையுள் என்பதில் ஒரு துண்டு பாண், ஒரு துண்டு துணி, ஒரு துண்டு காணியில் அமைந்த வீடு என்பன அத்தியாவசியமானவை. இதில் துண்டு துணி என்பது 'மானத்தை மறைக்க ஒரு துண்டு' என்று கூறப்படும்.

ஏழைப் பெண்களுக்கு ஒரே துண்டு... நெஞ்சோடு சேர்த்து மானத்தை மறைக்க கட்டுவர். (ராவய ஆசிரியர் குழு ஒரே குடும்பத்தினர் ஒரே சாரத்தை அணிவது பற்றி எழுதியது எவ்வளவு துயரமான விடயம். ஆனால் இங்கே கலியாண வீடுகளுக்கு போனால்.. ஒரு கொண்டாட்டத்துக்கு போட்ட சேலையை மற்றதற்கு போடாத 'விலாச நாயகிகளை' அதிகமாகக் காணலாம்) கவர்ச்சி அழகிகள், அதுதான் ரொறன்ரோ 'சூரிய அழகிகள்', ரொறன்ரோ சண்ணின் மூணாம் பக்க அழகிகளுக்கு இரண்டு துண்டுகள்.. மானத்தைக் காட்ட மறைப்பர். லண்டன் சண்ணில் ஒரே துண்டோடு சமாளித்து விடுகிறார்களாம். 'ரொப்லெஸ்' அழகிகள் மூணாம் பக்கத்தை அலங்கரிப்பதுண்டு.



**அறு(சு)வை**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முற்றும் துறந்த முனிவர்களாலும் சித்தர்களாலும் இந்த துண்டை துறக்க முடியவில்லை. அவர்களும் அதைத் துறந்திருந்தால் இருப்பவர்கள் எல்லாருமே சித்தர்களாயிருந்திருப்பார்கள். சுத்தர்கள் யாருமே பிறந்திருக்க மாட்டார்கள். ஆனால் இதையும் துறந்த நிர்வாணச் சாமியார்கள் இந்தியாவில் அடிக்கடி பெரும் பரபரப்பை ஏற்படுத்துவதும் உண்டு. அரசியல்வாதிகளும் தங்கள் துண்டைத் தோளில் போட்டபடி அவர்களை தரிசித்து ஆசி பெறுவர்.

நிர்வாண உலகில் கௌபீனதாரி, அது தான் துண்டு கட்டுபவன், முட்டாள். 'ஊரோடு ஒத்தோடுகின்ற' யாழ்ப்பாணத்திற்கு இப்படியானவர்கள் முட்டாள்தான். கியூறியஸ் மாதிரி. அ ட . . தம்மாத்துண்டு பயல் நீ.. நீ எல்லாம் கதைக்க வந்திட்டாய் என்று சொல்வதுண்டு. அற்ப பயலே என்ற அர்த்தத்தில்.

★ ★ ★

'தலைக்கு துண்டு போடுவது' என்று ஒன்றிருக்கிறது. மற்றவர்களால் அடையாளம்காணப்பட்டால்வெட்கம் என்ற நிலையில் "தனது அடையாளத்தை மற்றவர்கள் காணுதபடி மறைக்க துண்டு போட்டுக் கொள்வது. கடன் கொடுத்தவர்களைக் கண்டவர்கள், இரவுகளில் 'அன்னிய ஸ்திரி சேர்க்கைக்காக' செல்பவர்கள் என்று இந்த கோளாறு கோஷ்டி எல்லாம் தலைக்கு துண்டுடன் அலையும்.

சென்ற வாரம் 'உரசு' பத்திரிகை பற்றி எழுதினேன். இம்முறை பத்திரிகையில் ஆசிரியர் பெயர், உதவியாசிரியா பெயா, வெளியீட்டாளர் பெயர் போன்றன வரும் பகுதியை மறைத்து விட்டார்கள். தலைக்கு துண்டு போட்டுக் கொண்டு விட்டார்களோ என்னவோ? தங்களை அடையாளம் கண்டால் மானக்கேடு என்று.. சொன்னுல் வெட்கக் கேடு. சொல்லாட்டி மானக்கேடு.

★ ★ ★

தோளில் துண்டு போடுவது இருக்கிறது. துவாய், சால்வை போன்றவற்றை தோளில் போட்டிருப்பது மரபு. இது ஏதோ கௌரவத்துக்குரியது. வெளியில் போகும் போது தோளில் ஏறிக் கொள்ளும். சேட் போடாமல் இருப்பவர்களுக்கு மிகவும் சௌகரியமானது.

'நயினரைக் கண்டால்' 'பஞ்சமர்' (சமீபத்தில் இறந்த ஐந்து பெரியார்கள் அல்ல) தோளில் இருக்கிற துண்டை கையில் எடுத்து நெஞ்சோடு கையைக் கட்டிக் கொண்டிருக்க வேண்டும். அந்தக் காலத்தில். இங்கேயும் அப்படிச்செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கின்ற சில நயினர்கள் உளர்.

இந்த துண்டு மிகவும் வசதியானது. தலைக்கு தலைப்பாகையாகக் கட்டிக் கொள்ளலாம். வெய்யிலைத் தாங்க அல்லது பாரத்தைத் தாங்க. உட்காரும் போது திண்ணையையோ, கதிரையையோ தூசி தட்டி உட்கார வசதியானது. முகத்தில் வேர்வையைத் துடைக்கலாம். செல்வாக்கைக் காட்ட இடுப்பில் கட்டிக் கொண்டு நெஞ்சை நிமிர்த்தி சபை, சந்திகள், திருவிழாக்கள் போன்றவற்றில் நிற்கலாம். திருவிழா உபயகாரர், மணமகனின் தந்தை போன்ருேர் பெருமிதத்துடன் இடுப்பில் இதைக் கட்டியபடி சத்தம் போடுவர். சபையில் சொதி ஊத்துபவரும் இதே மாதிரி இடுப்பில் சால்வையுடன் நிற்பார். ஏதோ மைசூர் மகாராஜா என்ற நினைப்பில் இந்த சால்வையை தோளில் இருந்து குறுக்காக கட்டிக் கொண்டு மணமகன்மார் நெஞ்சை நிமிர்த்துவார்கள். அங்கவஸ்திரம் என்பது இதுதானு?

திராவிடக் கழகத்து பாரம்பரியத்தில் வரும் துண்டு வேறு. . நம்மூர் சால்வை மாதிரி இல்லாமல் மிகவும் நீளமாக இருக்கும். கிட்டத்தில் நிலத்தில் உரசிக் கொண்டு வரும். 'மாண்புமிகு தலவ அவர்களே, தமெள், நாம் தாய்த் தமெள்' என்று கத்திப் பேசும் போது இந்த துண்டை கை அடிக்கடி தூக்கி தூக்கி தொப்பென்று போட்டுக் கொள்ளும். ஏன் என்று எனக்கு இன்னமும் காரணம் தெரியாது.

★ ★ ★

துண்டைக் காணும், துணியைக் காணும் என்பது 'அடி தாளாமல் ஓட்டம் பிடிப்பதைக்' குறிப்பது. மானம் போகும் நிலையில் அவமானம் தாளாமல் ஓடுவது. கொஞ்ச நாள் முதல் கூத்தன் ஓடினுர். இப்போது இன்னொருவர் ஊருக்குப் போய் வந்து இங்கே 'விளாசிக்' கொண்டிருக்கிருர். நானும் தான் பார்க்கிறேன். உண்மையை இங்கே நாங்கள் தேடிக் கொண்டிருக்கிறோம். அங்கே போய் அந்த சிதம்பர ரகசிய உண்மையை தேடிக் கண்டவர் திரும்பவும் இங்கே வந்தது ஏன்? அங்கேயே 'நின்று போராடாமல்!'

இவர் எழுதுவதை யாழ்ப்பாணத்தில் இருப்பவர்கள் வாசித்தால் பாடக் கூடும். போனுல் போகட்டும் போடா.. இந்த பூமியில் நிலையாய் வாழ்ந்தவர் யாரடா! வந்தது தெரியும் (செஞ்சிலுவைச் சங்க பாதுகாப்பில்), போனது எங்கே (கனடா), (கிளாலி) வாசல் நமக்கே தெரியாது. வந்தவர் எல்லாம் தங்கி விட்டால் இந்த மண்ணில் நமக்கு நிம்மதி ஏது? எழுத்து என்பது வியாபாரம். அதில் பம்மாத்து என்பது வரவாகும். கியூறியஸ் ஒன்றே செலவாக்கும்.

கியூறியஸ் எதுவுமே எழுதாதற்கு காரணம் உண்டு. அப்புறமாக கவனிச்சிக்கிறேன். அதுவரைக்கு சக்கை போடு போடு ராஜா.. காட்டுல மழை.. அப்போது துண்டைக் காணு...

★ ★ ★

பிரசுரங்களில் துண்டு உண்டு. பத்திரிகைகள், புத்தகங்கள் மாதிரி இல்லாமல் ஒரே பக்கத்தில் 'திகில்' விடயங்களைப் போடுவது 'துண்டுப்' பிரசுரங்களில்... உரிமை கோராமலே விட்டும் விடலாம். சமீபத்தில் மொன்றியலில் வெளிவந்த துண்டுப்பிரசுரம் ஒன்று கலக்கு கலக்கி விட்டது. வள்ளுவர் விழா நாயகரை அந்த மாதிரி வாட்டி எடுத்திருக்கிறது. ஆனுல் வாரம் கடந்தும் பத்திரிகையில் 'முச்'. விழாவின் யுத்தமுனை நிருபர் தோழாதிதோழர் கூட நிகழ்ச்சி பற்றி எதுவுமே எழுதவில்லை. இது பற்றி முனியோடு பேசிய போது.. தாயகம் பற்றி இப்படி ஒரு 'துண்டுப்' பிரசுரம் வந்திருந்தால், அதையும் பிரசுரித்து அதற்கு பதிலும் கொடுக்கின்ற துணிச்சல் தாயகத்திற்கு இருக்கிறது என்ருர். உண்மை.

இப்போதுதானே கம்பியூட்டர், தமிழ் எழுத்து இருந்தால் பத்திரிகை வருகிறது. 'துண்டுப்' பிரசுரத்திற்கு கேட்க வேண்டும்?

★ ★ ★

துண்டு விழுதல் என்று ஒன்றுண்டு. செலவு ஏற்படுதல்.. 'இந்தக் கிழமை போனில் நூறு ருபாய்க்கு துண்டு விழுந்திட்டுது' நட்டம் ஏற்படுத்தல். உதாரணத்திற்கு 'உவன் சங்கரியை பாருக்கு கூட்டிக் கொண்டு போனுல் ஒரு ஐம்பது டொலருக்கு துண்டு விழப் பண்ணுமல் விட மாட்டான் பாவி'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஓசிக் குடிமகன்!

இதை விட பட்ஜெட்டில் துண்டு விழுதல்... பற்றாக் குறை ஏற்படுதல்.. 74ல் என்று நினைக்கிறேன். பட்ஜெட்டில் 194 கோடி ரூபாய் துண்டு விழுந்தது முன் பக்க தலையங்கமாக வந்தது. இப்போது ஆயிரக்கணக்கான கோடி ரூபா துண்டு விழுகிறது. எப்படி சமாளிப்பது என்று நிதியமைச்சர் திட்டம் சொல்ல.. பலருடைய வாழ்வில் துண்டு விழும். சமாளிப்பதற்காக சிகரெட், சாராயம் முதல் சீனி வரை விலை கூடும். வெளிநாட்டு உதவிகள் வரும்.

★ ★ ★

துண்டு வெட்டுதல் என்று ஒன்றுண்டு. வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டவர்கள் தங்கள் சிகிச்சை முடிந்ததும் வெளியேறுவதைக் குறிப்பது. முதலில் வயிற்றை வெட்டுவார்கள். பிறகு துண்டு வெட்டுவார்கள்.

★ ★ ★

புலிகளைப் பொறுத்தவரையில் துண்டு கொடுத்தல் என்றுண்டு. இயக்கத்தில் சேர்ந்தவர்கள் இயக்கத்தை விட்டு விலகுவதற்காக முன்னறிவித்தல் கொடுத்தல். எதிர்பார்ப்புகளோடு போய் சேர்ந்து விலக நினைப்பவர்கள் தங்கள் பிரதேசப் பொறுப்பாளருக்கு தமது விருப்பம் பற்றி தெரிவிப்பர். துண்டு கொடுத்தாலும் உடனே விலக முடியாது. கொஞ்ச நாளைக்கு தண்டனையாக சமையல் வேலை, பங்கர் வெட்டும் வேலை போன்ற வேலைகள் வழங்கப்படும். இதன் பின்னர் தான் விலக அனுமதி கிடைக்கும். அனுமதி கிடைத்தவர்களும் பின்னால் கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளாகுவர். பயந்து விட்டுட்டு வந்திட்டான் என்று மாவீரர் கேலி செய்வர்.

★ ★ ★

துண்டு எடுத்தல் என்று உண்டு. அதாவது குடாநாட்டை விட்டு வெளியேறுவதற்கு பாஸ் எடுத்தல். இதற்காக உங்கள் குடும்ப அட்டையைக் காட்டி புலிகளுக்கு கொடுக்கப்பட்ட தங்கம் பற்றி சொல்லி விசாவைப் பெற்றுக் கொள்ளலாம். நம்ம விமர்சகரும் போய் துண்டு எடுத்துத்தான் கிளாலியைக் கடந்தார். அவருக்கு இதெல்லாம் சாதாரண பிரச்சனைகள். இங்கிருந்து கியுபெக் போவதற்கு பாஸ் எடுக்க வேண்டி வந்தால் எப்படி இருக்கும்?

இந்த பாஸ் முறைக்காக புலிகள் சொன்ன காரணங்கள்... உளவாளிகள் சென்று தகவல் கொடுக்கிறார்கள் என்று ஒரு தடவை சொன்னார்கள். புத்திஜீவிகள் மூளைசாலி வெளியேற்றம் நடத்துகிறார்கள், அவர்களை நிறுத்த வேண்டிய கட்டாயம் என்கிறார்கள். இதற்காக அப்பாவி மக்கள் துண்டு எடுக்க அலைய வேண்டி வரும் நிலை இவருக்கு ஒரு சாதாரண விடயம். இந்த பாஸ் முறைக்கான காரணம் என்ன என்று இவருக்கு நன்றாகவே தெரியும். அது தெரியும் என்ற விசயமும் எனக்குத் தெரியும்.

★ ★ ★

பீடித்துண்டுக்காக அலைகின்ற கோஷ்டிகள் ஒரு புறம்... புகையிலை குதப்புவோருக்கு 'பொயிலைத்' துண்டுகள் உண்டு. பல தீட்ட கரித்துண்டு.. இந்தப் பெயரில் மு.வ வின் நாவல் ஒன்றுண்டு என்று நினைக்கிறேன்.

மஞ்சள் துண்டுக்கு மகிமை அதிகம். தாலிக்கு பதிலாக ஒரு நூலில் மஞ்சள் துண்டு ஒன்றை கட்டி ஏழைகள் தாலி ஆக்குவர். ஆனால் இங்கோ... தங்கள் தாலிகளை ஏதோ துலாக்கயிறு தடிப்பில் போட்டுக் கொண்டு கழுத்தை நிமிர்த்தி விலாசம் காட்டுகின்ற 'பொன் money'களைக் கண்டிருக்கிறேன். எது எதுக்கு விலாசம் என்ற விவஸ்தையில்லாமல். .. ஜெயந்தீஸன் கதைகளில் இந்த ஜில்மால்களை வாசித்திருப்பீர்கள்.

★ ★ ★

எலும்புத் துண்டுக்கு வாலை ஆட்டுகின்ற நாய்கள் என்ற பதம் உண்டு. அற்ப சலுகைகளுக்காக கொள்கைகளை விட்டுக் கொடுப்பவர்களைக் குறிப்பது இது. புலிகள் தங்களைத் தவிர்ந்த மற்ற அரசியல் கட்சிகளை வர்ணிப்பது.. இவர்கள் மட்டும் கொள்கைச் செம்மல்கள்.. மற்றவர்கள் எலும்புத் துண்டுகளுக்காக கொள்கைகளை விற்கும் போது, இவர்கள் ஹில்டன் ஹோட்டலில் ஜாலியாக கோழிக்கால் சாப்பிட்டார்கள். இறுதியாக நன்றி உள்ள நாய் மாதிரி இல்லாமல் உண்ட வீட்டுக்கு துரோகம் பண்ணிய நிலை தான். இறைச்சி கொடுத்தவர் இறைச்சித் துண்டுகளானது தான் மிச்சம்.

★ ★ ★

உத்தியோகங்கள் பெறுவதற்காக அரசியல்வாதிகளிடம் துண்டு வாங்குதல் இன்னொரு விடயம். செல்வாக்கைப் பயன்படுத்தி, தகுதி, தராதரம் இல்லாதவன் எல்லாம் பெரிய பதவிகளை அலங்கரிப்பது இந்த துண்டுகளின் செல்வாக்கினால் தான். இந்த துண்டைப் பெறுவதற்கு கொஞ்சக் காசைத் தள்ளினால் போதும். நம் ஊரில் நம்மோடு படித்த ஒருவன் ஐந்தாம் வகுப்போடு பாடசாலையை நிறுத்தி விட்டான். இவன் ஏதோ வேலைக்கு போவதற்கு எட்டாம் வகுப்பு படித்தான் என்று துண்டு வேண்டும். இதற்காக பாடசாலை அதிபருக்கு கோழி, வாழைக்குலை, இராசவள்ளிக் கிழங்கு எல்லாம் கொடுக்க வேண்டியிருந்தது. இப்படி கண்ட மாதிரி துண்டு கொடுத்து பதவி கிடைத்தால் பதவி கிடைத்தவன் வேலை செய்து நாடு எப்படி உருப்படும்?

வெளிநாடு போன விண்ணன்கள் ஆரம்பத்தில் எம். பிக்களிடம் துண்டு எடுத்துச் செல்வர். கூட்டணியில் உறுப்பினராக இருப்பதாக... இப்படிச் சொல்லி காட் எடுத்தவர் பலர்.

★ ★ ★

சுகவீனம் காரணமாக வைத்தியரிடம் துண்டு வாங்கிச் செல்வது இன்னொன்று. வேலைக்கு கட் அடிப்பவர்கள் தந்திரமாக டாக்டரிடம் இருபது ரூபா கொடுத்தால் அவர் தன் கண்காணிப்பில் இருந்ததாக பொய்யாக துண்டு எழுதிக் கொடுப்பார்.

பாடசாலை நாட்களில் பாடசாலைக்கு போகா விட்டால் மறுநாள் பெற்றோரிடம் துண்டு வாங்கிச் செல்ல வேண்டும். இல்லாவிட்டால் அடி விழும்.

★ ★ ★

டியூட்டரி ஒன்றில் ஒரு பெண் பிள்ளை ஒரு நாள் வரவில்லை. மறுநாள் வந்த போது மாஸ்டர் கேட்டார்.

"ஏன் நேற்று வரவில்லை?"

'சுகமில்லை, சேர்'

'ஏன் துண்டு கொண்டு வரேலை?'

பிள்ளை தயங்கியபடியே நிற்க ஒரு வால் சொல்லியதாம்... துண்டு கொடியில தொங்குது என்று.

ஆமா பெரிய காளமேகப் புலவர். சிலேடையில் பேசுறாராம்.

★ ★ ★

கியூறியஸ், நீ இப்படி பகிடி பகிடியாக பச்சை இலக்கியம் பேசுறது எங்களுக்கு 'துண்டாய் பிடிக்கேலை'. அதுவும் சரிதான். இப்படி 'வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பேசுபவர்களை எனக்கு பிடிக்கும்' 'பீஸ் பீஸாய் கிழிப்பாங்க பேஜாராய்ப் போச்சு துங்க"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பிரான்சில்..

தெரியும்" என்றபடி சாந்தன் வீட்டின் முன் கொண்டு போய் விட்ட பின் கூரியன் ஓடித் தப்பி விட்டான்.

ராமலிங்கம் வீட்டுக் கதவின் முன் போய் நின்றபோது சாந்தனின் குரல் சற்று பலமாகவே கேட்டது. அவன், திருமதி சாந்தனிடம் இப்படிச் சொல்லிக் கொண்டிருந்தான்.

"எடி, நான் ராமலிங்கமான ராமலிங்கத்துக்கு சுத்தினன். எனக்கு நீ சுத்தலாமெண்டு நினைக்காதை... பிரான்ஸிலை வைச்சு நான் உன்ரை போட்டோவைப் பார்க்கேக்கை, கழுத்திலை ஒரு மொத்தமான அட்டியல் கிடந்தது.. அது எங்கை?...."

இதைக் கேட்டதும் ராமலிங்கம் விட்டு விடுவாரா? கதவில் ஓங்கி ஒரு உதை விட்டார். அது திறபட்டது.. அவரைக் கண்டதும் சாந்தன் நடுங்கினன்.....

"தம்பி, சாந்தன்...நான் பழமும் தின்டு கொட்டையும் போட்டனன்.... எனக்கு நீர் சுத்தலாமெண்டு நினைச்சது.... உம்மடை தப்பு... நான் தந்த 50 ஆயிரத்தையும் உப்பவே வையும்" என்றபடி கையை நீட்டினர்.

"அண்ணை, முதலிலை இருங்கோ.. பிள்ளை, ஓடிப்போய் அண்ணைக்குச் சாப்பாடு போட்டுக் கொண்டு வாரும். ..."

"டேய் நான் இங்கை உன்ரை விருந்தாளியா வரேல்லை... வையடா காசை..."

"அண்ணை, வாங்கோ வெளியாலை போய்க் கதைப்பம்..." என்றவுடன் "சரி" என்றபடி அவனுடன் நமது நாயனர் இறங்கினர். வீதிக்கு வந்ததும், சாந்தன் புதுப் பலம் பெற்றன்.

"அண்ணை, நான் உங்களை செக்ஸ் சொப்பிலை கண்டனன். உங்களுக்கு நீங்கள் விரும்பின நிறத்திலையெல்லாம் செற் பண்ணி வேறை தந்தனன். 50 ஆயிரத்தை மறந்திட்டு மரியாதையா, பிரான்ஸுக்கே திரும்பிப் போயிருங்கோ.... இல்லாட்டி, உப்பவே ரெலிபோன் அடிச்சு அவவுக்கு எல்லாத்தையும் சொல்லிப் போடுவன்" என்று விட்டதும், ராமலிங்க நாயனர் ஒரு கணம் அசந்துதான் போய்விட்டார். அவரது மூளை ஆழமாக யோசிக்க வெளிக்கிட்டது....

"சாந்தன், நீ அடிச்சு அவவிட்டை என்னத்தையெண்டாம் சொல்லு... ஆனா, என்ரை கையிலை இப்பவே 50 ஆயிரத்தை வை. இல்லாட்டி, உப்பவே வந்து உன்ரை மனிசியிட்டை, நீ பிரான்ஸிலை பெட்டையள் செற் பண்ணிக்குடுக்கிற வேலைதான் செய்தனியெண்டு சொல்லிப்போடுவன், பெட்டையின்ரை அண்ணன்மாரைக் கண்டுபிடிச்சு உன்ரை வாழ்க்கையைக் குட்டிச் சுவராக்குவன்....."

வராது வந்த மாmoneyயான தனது மனைவியை சாந்தன் இழப்பானு? டொலரில் எண்ணி வாங்கிய சீதனக் காசை வட்டிக்கும் வேறு கொடுத்து விட்டான்.

"அண்ணை என்னைப்பற்றி ஒண்டும் அவவிட்டை சொல்லிப் போடாதையுங்கோ, என்னை வீட்டை வந்து இருங்கோ ஒரு கிழமையுக்கை காசைத் தந்திடுவன்...."

"உன்ரை வீட்டை தங்கமாட்டன். ஒரு கிழமைக்குப்பிறகு வருவன்... 50 ஆயிரத்தையும் நீ டொலரிலை எண்ணி வைக்கவேணும் என்றபடி நாயனர் வீதியில் மறைந்து விட்டார்.


**சோலைக்கிளியின்**
**ஆணிவேர் அறுந்த நாள்**
**கோவிந்தனின்**
**புதியதோர் உலகம்**
**தொடர்புகளுக்கு;**
**காலம்**
**3479 St.Clair Ave # 302,**
**Toronto, On, M1K 1L2**
**269 6058**



*This newspaper is published by Georgicka communications.*
*A member of Ethnic Press Council Of Canada.*
*Editor: George R.Ckrhushchev*
இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவனத்தினல் வெளியிடப்படுகிறது.
ஆசிரியர்: ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்



தொடர்புகளுக்கு
Georgicka communications
P.O.Box 1031, Station "F",
*Toronto, Ont, M4Y 2T7.*
*Tel: (416) 920 9081*
*Fax: (416) 963 5738*
*E mail:71650.3216@Compuserve.com*


வாசகர்களின் வசதி கருதி தொலைபேசி பதிவு சேவை ஒன்றை தொடங்கியுள்ளோம். வெளிவந்த ஆக்கங்கள் பற்றிய உங்கள் கருத்துக்கள், முனியின் கேள்வி பதில்களுக்கான கேள்விகள், ஆக்கபூர்வமான கருத்துக்களை வெள்ளி மாலை முதல் ஞாயிறு நள்ளிரவு வரையில் 963 5738 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒலிப்பதிவு செய்யலாம். தொடர்புகளுக்கு உங்கள் தொலைபேசி இலக்கத்தையும் பதிவு செய்ய மறக்காதீர்கள்.

உங்கள் ஆக்கங்கள். பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

### தாயகம் சந்தா விபரம்

கனடா ஆறுமாதம் $30
வெளிநாடுகள் ஆறு மாதம் US$60
வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரே இடத்தில் உங்கள் அனைத்து இலங்கை, இந்திய, கனடிய உணவுப் பொருட் தேவைகளுக்கும் நாட வேண்டிய இடம்

# அன்ரனி பிறதர்ஸ்

**1472 QUEEN ST WEST (QUEEN/LANSDOWNE),**
**TORONTO, ONT. M6K 1M4**

வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை

உடன் மீன்,
இறைச்சி,
மரக்கறி, பழவகைகள்
மலிவு விலையில்

தமிழக, இலங்கை
வாரப்பத்திரிகைகள்,
சஞ்சிகைகள் உடனுக்குடன்

முத்திரை, சிகரெட்,
TTC Tickets, Lottery Tickets


★ போட்டோக்கொப்பி,
ஃபாக்ஸ் வசதிகள்

★ தமிழ், ஹிந்தி, மலையாள
வீடியோக்கள்
வாடகைக்குப் பெறலாம்

★ லேசர்
இசைத்தட்டுக்கள்
மலிவு விலையில்

## ANTONY BROTHERS

**TEL:(416) 588-0733**
**TEL/FAX:(416) 516 3903**




## ANTONY BROTHERS FASHION HOUSE

சிங்கப்பூரில் இருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
உடைகள்,
பரிசுப் பொருட்கள்,
அலங்காரப் பொருட்கள்
அனைத்தும் மலிவு விலையில்
பெற்றுக் கொள்ள

**1484 QUEEN ST WEST**
**Tel:(416) 588 0310**

www.tamilarangam.net

SIVA'S TRADING CO LTD
321-2739

ஸ்காபரோ நகரின்
தன்னிகரற்ற
தமிழ் வியாபார நிலையம்

அனைத்துப்
பொருட்களும்
மலிவுவிலையில்

★ இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள்
★ உடன் இறைச்சி,கடலுணவு,
★ பசுமையான மரக்கறி வகைகள்
★ தயாரிக்கப்பட்ட உணவுவகைகள் (இடியப்பம்,தோசை,அப்பம்)
★ சமையல் உபகரணங்கள்
★ இலங்கை, இந்திய சஞ்சிகைகள்

சிவாஸ் ரேடிங் கோ லிமிட்

3852 Finch Ave East (Kennedy/Finch)
Tel:(416) 321 2739

P.S.T.T

5210 Finch Ave East #23
(Finch/Middlefield)
Tel:609-0141

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள்,
இந்திய உணவு வகைகளின்
மொத்த விற்பனையாளர்

சகல புதிய, பழைய தமிழ்,
இந்தி, மலையாளப் படங்கள்
வாடகைக்கு கிடைக்கும்

Video Transfer
(Any system)
$8.99